பக்கங்கள்: 24

விலை: 30.00

மே தினம்

உழைக்கும் வர்க்கம் மேன்நிலை அடையட்டும்

# தீம்புனல்
THEEMPUNAL

தீ : 01 புனல்:01 01.05. 2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052



தீம்புனலுடன்
உங்களுக்கு
இலவசமாக...
**யோக வாழ்வு**
பிரதிக்கு முந்துங்கள்

**ஆடி அமாவாசை,சித்திரா பௌர்ணமி போன்ற நாட்களை எவ்வாறு இந்துக்கள் அனுஷ்டிக்கிறார்களோ அனைத்து மரித்தோர் தினத்தை எவ்வாறு கிறிஸ்தவர்கள் அனுஷ்டிக்கிறார்களோ அவ்வாறே மே 18யும் ஒரு மக்கள் மயப்பட்ட அனுஷ்டானமாக மாற்றலாம்.**



# கூட்டு துக்கத்தை ஆக்க சக்தியாக மாற்ற வேண்டிய நாள்

**நிலாந்தன்**

இது நினைவு கூர்தலுக்கான மாதம். எனினும் இம்முறையும் நினைவு கூர்தலுக்கான வாய்ப்புகள் ஒப்பீட்டளவில் சுருங்கியே காணப்படுகின்றன.கடந்த ஆண்டும் அரசாங்கம் நினைவு கூர்தலை பெருந்தொற்று நோயைக் காரணமாக காட்டித் தடுத்தது. இந்த ஆண்டும் அதற்குரிய வாய்ப்புகள் அதிகம் உண்டு. குறிப்பாக அண்மை வாரங்களில் பெருந்தொற்று நோயின் வீரியம் அதிகமாக உணரப்படும் ஒரு மருத்துவ அரசியல் பின்னணியில் அரசாங்கம் நினைவு கூர்தலைத் தடுப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு.அதிலும் குறிப்பாக மே தின ஊர்வலங்களை பெரும்பாலான கட்சிகள் ரத்து செய்திருக்கும் ஒரு பின்னணியில் அரசாங்கம் தனிமைப்படுத்தல் சட்டங்களை காரணமாகக் காட்டி மே18ஐ நினைவு கூர்வதைத் தடுக்கும் வாய்ப்புக்களே அதிகம்.

எனவே இது விடயத்தில் தமிழ்க் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் சம்பந்தப்பட்ட தரப்புக்களும் முன்கூட்டியே ஒரு முடிவுக்கு வரவேண்டும். பௌதீக நினைவு கூர்தலுக்கு இம்முறையும் வாய்ப்புகள் மிகக் குறைவு என்றால் வேறு எந்த வழிகளில் நினைவுகூர்தலை அனுஷ்டிப்பது?

இரண்டு வழிகள் உண்டு. முதலாவது (வேர்ச்சுவலாக) மெய்நிகர் பரப்பில் நினைவு கூர்வது. இரண்டாவது நினைவு கூர்தலை ஆகக்கூடிய பட்சம் மக்கள் மயப்படுத்துவது. அதாவது நினைவு கூர்தலை ஆகக் கூடிய பட்சம் எல்லாத் தமிழ் வீடுகளுக்கும் பரவலாக்குவது.

இதில் முதலாவதை பார்க்கலாம். ஏற்கனவே கடந்த ஆண்டும் மெய்நிகர் வெளியில் எப்படி நினைவு கூரலாம் என்று சிந்திக்கப்பட்டது. குறிப்பாக புலம் பெயர்ந்த தமிழ்ப்பரப்பில் அவ்வாறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.வெவ்வேறு நேர வலயங்களுக்குள் வாழும் தமிழ்ச் சமூகங்களை எப்படி ஒரு ஆகக்கூடியபட்சம் பொது நேரத்தில் ஒருங்கிணைப்பது என்று யார் சிந்திப்பது? உலகு தழுவிய மெய்நிகர் நினைவுகூர்தல் ஒன்றை கடந்த ஆண்டிலும் ஒழுங்குபடுத்த முடியவில்லை. இந்த ஆண்டாவது ஒழுங்காகச் செய்ய வேண்டும் என்று யாராவது முன் கூட்டியே சிந்தித்திருக்கிறார்களா? இல்லையென்றால் ஏன் சிந்திக்கவில்லை?

ஏனென்றால் முழு உலகு தழுவிய நினைவு கூர்தலுக்கான ஒரு பொது ஏற்பாட்டுக்குழு இன்றுவரை உருவாக்கப்படவில்லை. ஏன் முழு உலகு தழுவிய ஒரு ஏற்பாட்டுக்குழு தேவை ? ஏனென்றால் நவீன தமிழ் பரப்பில் இதுவரையிலும் நிகழ்ந்த மிகப்பெரிய அழிவு 2009ஆம் ஆண்டின் மார்ச், ஏப்ரல்,மே ஆகிய மூன்று மாதங்களிலும் நிகழ்ந்த அழிவுதான். பெருந்தமிழ் பரப்பில் அவ்வாறு ஒரு பேரழிவு இதற்குமுன் ஏற்பட்டிருக்கவில்லை. எனவே முழுப் பெருந்தமிழ் பரப்பையும் ஒருணர்ச்சிப் புள்ளியில் இணைக்கும் நாளாக மே18 காணப்படுகிறது. தமிழ் ஐக்கியத்தை பெருந்தமிழ் பரப்பில் கட்டியெழுப்ப அது உதவும். ஈழத்தமிழர்கள் தங்களுக்குரிய நீதியை பெறுவதற்கான போராட்டங்களை முழுத்தமிழ் பரப்புக்கும் விரிவுபடுத்த அந்த உணர்ச்சிகரமான அடித்தளம் மிக அவசியம். நினைவு கூர்தல் எனப்படுவது கூட்டாக துக்கிப்பது மட்டுமல்ல. அது கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆவேசமாக கூட்டு ஆக்க சக்தியாக மாற்றுவது.

ஈழத்தமிழர்கள் ஒரு மிகச்சிறிய இனம். எனவே தமது கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்றுவதற்கு தமிழகத்தையும் தமிழ் புலம் பெயர்ந்த சமூகத்தையும் முழுப் பெருந்தமிழ் பரப்பையும் ஒன்றிணைக்க வேண்டும். எனவே நினைவு கூர்தலுக்கான ஒரு பொது ஏற்பாட்டுக் குழு உலக அளவில் உருவாக்கப்பட வேண்டும். ஆனால் அப்படி ஒரு ஏற்பாட்டுக் குழு இன்றுவரையிலும் இல்லை. தாயகத்தில் ஒரு பொதுக்கட்டமைப்பு இயங்குகிறது. ஆனால் அது அனைத்துலக மயப்பட்டதாக தெரியவில்லை. சில கிழமைகளுக்கு முன் அப்பொது ஏற்பாட்டுக்குழு ஓர் அறிக்கையை வெளியிட்டது. ஆனால் அதற்குப்பின் நினைவு கூர்தலை மெய்நிகர் வெளியிலோ அல்லது பௌதீக வெளியிலோ மக்கள் மயப்படுத்தும் கட்டமைப்புக்கள் எதுவும் இதுவரையிலும் உருவாக்கப்பட்டதாக தெரியவில்லை.

மெய்நிகர் வெளியில் ஓர் உணர்ச்சி புள்ளியில் பெருந்தமிழ் பரப்பை இணைப்பதற்கு மே18 உதவும். அதை அதற்குரிய உலகளாவிய பரிணாமத்தோடு விளங்கி ஒரு ஏற்பாட்டு குழுவை இன்றுவரையிலும் உருவாக்க முடியவில்லை. இந்த முறையும் அவ்வாறு ஒரு மெய்நிகர் வெளியில் முழுப் பெருந்தமிழ் பரப்பையும் இணைக்க முடியுமா என்று தெரியவில்லை.

இரண்டாவது- தாயகத்திலும் ஏனைய தமிழ்ப் பரப்புக்களிலும் நினைவு கூர்தலை எப்படி மக்கள் மயப்படுத்துவது என்பது. சில மாதங்களுக்கு முன் யாழ் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் உடைக்கப்பட்ட போது எனது நண்பர் ஒருவர் என்னிடம் கூறினார்.." தூலமான பௌதீகமான நினைவுச் சின்னங்கள் எல்லாவற்றையும் கடந்து தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சி என்கிற அழிக்கப்படவியலாத ஒரு நினைவு கூர்தலுக்கு வந்து விட்டார்கள். உணவையே நினைவு கூரும் ஒரு அம்சமாக மாற்றியிருக்கிறார்கள். இது ஒரு அற்புதமான வளர்ச்சி. இதை யாரும் தடுக்க முடியாது.இதையே நாங்கள் மேலும் பரவலாக்கலாம் என்று"

மேலும் அவர் ஒரு விடயத்தை சுட்டிக் காட்டினார். "சில நூற்றாண்டுகளுக்கு முன் அந்நியர் நமது சமூகத்தை ஆக்கிரமித்திருந்த காலகட்டங்களில் தமிழ் மக்கள் தமது மத அனுஷ்டானங்களை எப்படி ரகசியமாக அனுஷ்டித்தார்களோ அதேபோல இப்பொழுதும் பெருந்தொற்று நோய்க் காலத்திலும் அரசியல் நெருக்கடிகள் மிகுந்த காலத்திலும் நினைவுகூர்தலை அவரவர் வீடுகளில் அனுஷ்டிக்கலாம்தானே?" என்று.

▶ 07

# உலகளாவிய இராணுவ சமநிலையில் உக்ரைன் - ரஷ்ய போர் முனைப்பு?

**அமெரிக்க அணிக்கு எதிரான யுத்தமொன்றை நிகழ்த்துவதன் மூலம் உலகளாவிய அரசியலில் மீளவும் ஓர் இராணுவச் சமநிலையை அல்லது அதிகார சமநிலையை சாத்தியப்படுத்த முடியும். பனிப்போருக்கு பின்பான உலக ஒழுங்கில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராகவும் ஈராக்குக்கு எதிராகவும் அமெரிக்கா மேற்கொண்ட யுத்தங்களுக்கு பின்னர் அமெரிக்காவில் இராணுவ ரீதியில் முன்னணி வகுக்குகின்றது.**

பேராசிரியர் கே.ரீ. கணேசலிங்கம்





சர்வதேச அரசியலில் அமெரிக்க - ரஷ்ய மோதல் மீண்டுமொரு உலகம் தழுவிய போருக்கு வழிவகுக்குகின்றது என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. உக்ரைனை மையப்படுத்தி அத்தகைய போர்முனையம் ஏற்பட்டுள்ளது. ஆனால் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட்ரம்பிற்கும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்குமான நெருக்கம், ரஷ்ய அமெரிக்க முரண்பாட்டினைத் தீவிரப்படுத்தியது மட்டுமன்றி பனிப்போரையும் ஏற்படுத்தியிருக்கிறது. காலம் முழுவதும் முன்னாள் சோவியத் யூனியனும் அமெரிக்காவும் அதீத பகைமை போக்கினை கொண்டிருந்தன. இதன் தொடர்ச்சி பனிப்போருக்கு பிந்திய காலத்தில் நீடித்து வருவதோடு உலக அரசியலில் ரஷ்யா ஓர் இருதய நிலம் என்பதை உறுதிப்படுத்தும் நிகழ்வு தொடர்ந்து கொண்டே அவரது நடவடிக்கை மூலம் அறியமுடிகின்றது. கிரிமியாவை ரஷ்யா கைப்பற்றிய போதே அதனை உக்ரைன் உணர்ந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். அதேநேரம் இருதரப்பினது யுத்தத்திற்கான முனைப்புகள் அமெரிக்காவாலும் ஐரோப்பிய யூனியனாலும் முதன்மைப்படுத்தப்படுகின்ற போது சமாதான உரையாடலை மேற்கொள்கின்ற ஓர் இரட்டை உத்தியை பின்பற்றுகின்ற போக்கினை அவதானிக்க முடிகின்றது. எதுவாகினும் ரஷ்ய உக்ரைன் யுத்தம் எந்தளவிற்கு முக்கியமானது என்பது அதன் விளைவுகள் உக்ரைனுக்கு ஆபத்தானது என்பதும் நீண்ட நோக்கில் ரஷ்யாவின் இருப்பில் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற விதத்திலும் கருத்தில் கொள்ளவேண்டிய அம்சமாகும்.

முதலாவது உக்ரைன் ரஷ்ய யுத்தம் ரஷ்யாவின் நீண்டகால நலன்களைப் பாதிக்கும் அதேவேளை அமெ

இருக்கின்றது. அதனடிப்படையில் உக்ரைன் விவகாரத்தில் ரஷ்ய அமெரிக்க மோதலின் அரசியல் போக்கின் விம்பங்களை அடையாளப்படுத்துவதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

அதனடிப்படையில் உக்ரைன் எல்லையில் ரஷ்யா ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட படைகளை குவித்திருப்பதோடு யுத்தத்திற்கான அனைத்துப் பொறிமுறைகளையும் வகுத்திருப்பதாக தெரியவருகின்றது. அண்மையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமின் புடின் வருடாந்த நிகழ்வில் உரையாற்றுகின்றபோது "ரஷ்ய இராணுவம், ரஷ்யாவின் எல்லையும் ரஷ்ய மண்ணையும் பாதுகாப்பதற்கு தயாராக உள்ளதுடன், ரஷ்யாவை தாக்க எந்த நாடு முயன்றாலும் தகுந்த பதிலடி வழங்கப்படும்" என எச்சரித்திருந்தார். இத்தகைய உரை ரஷ்யா போருக்கு தயாராக உள்ளது என்பதைக் கோடிட்டு காட்டுகின்றன. அவ்வாறே உக்ரைனும் உக்ரைனுக்கு ஆதரவு நாடுகளும் குறிப்பாக அமெரிக்கா மற்றும் நோட்டோ இராணுவம் ரஷ்ய எல்லையை நோக்கி நகர்வ தோடு தொடர்ச்சியாக விமானப் பறப்புகளையும் விமான ரோந்தினையும் ரஷ்ய எல்லையோரம் நோக்கி நகர்த்துவதோடு அமெரிக்க யுத்தக் கப்பல்கள் கருங்கடலை அண்டிய பிரதேசங்களில் உக்ரைனுக்கு ஆதரவாக நகருகின்ற நிலையினை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக அமெரிக்க போர் விமானங்கள் நோர்வே விமானத் தளத்திலிருந்து பிரிட்டன்,பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கும் தமது நாட்டின் விமானத்தளத்திலிருந்து ரஷ்யாவின் எல்லை நோக்கியும் தொடர்ச்சியாக விமானங்களை பறப்பில் ஈடுபடுத்தி வருகின்றது. இதன் விளைவும் ஏறக்குறைய ஒரு யுத்ததிற்கான முனைப்பாக இருக்கின்றது. அதேநேரம் உக்ரைன் ஜனாதிபதி வொலடிமிர் செலன்ஸ்கி (Volodymyr Zelensky) போரை தடுத்து நிறுத்தும் வகையிலான உத்திகளை வகுக்குமாறும் சமாதான பூர்வமான உரையாடல்களை மேற்கொள்ளுமாறும் ரஷ்யாவிடம் கோரியிருந்தார். இவரது கருத்து போரினைத் தவிர்க்கும் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில் அமைந்துள்ளது. அதேநேரம் தமது படைகளையும் தேசிய பாதுகாப்புச் சபையினைக் கூட்டியதன் மூலம் எல்லையோரப் பாது காப்பை பலப்படுத்தவும் படைகளைத் தயார் நிலையில் வைத்துக் கொள்ளவும் உக்ரைன் ஜனாதிபதி நகர்ந்து வருகின்றார் என்பதும் தெரிகின்றது. அமெரிக்கா ஐரோப்பிய யூனியன், நோட்டோ போன்றவற்றுடன் தொடர்ச்சியான உரையாடலை மேற் கொண்டு வரும் செலஸ்கி ரஷ்யாவுடன் ஒரு போரைத் தனித்து மேற்கொள்ள முடியாது என்பதை உணர்ந்துள்ளமையை



ரிக்க அணிக்கு எதிரான யுத்தமொன்றை நிகழ்த்துவதன் மூலம் உலகளாவிய அரசியலில் மீளவும் ஓர் இராணுவ சமநிலையை அல்லது அதிகார சமநிலையை சாத்தியப்படுத்தமுடியும். பனிப்போருக்கு பின்பான உலக ஒழுங்கில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராகவும் ஈராக்குக்கு எதிராகவும் அமெரிக்கா மேற்கொண்ட யுத்தங்களுக்குப் பின்னர் அமெரிக்கா இராணுவ ரீதியில் முன்னணி வகுக்குகின்றது. பொருளாதார அடிப்படையில் சீனா அமெரிக்காவிற்கு நிகராக வளர்ந்தபோதும் இராணுவ இருப்பு என்பது அமெரிக்காவிற்கே உரித்துடையது. உலகம் தழுவிய விதத்தில் அமெரிக்காவே இராணுவ வலுவுடைய நாடாக சமகாலம் வரையில் கணிக்கப்படுகின்றது. பனிப்போர் முடிவுக்கு வந்த பிற்பாடு ஒற்றைமைய உலக இராணுவ சமநிலை அமெரிக்காவிடமே இருந்தது. பனிப்போருக்கு பின்னரான (post- post cold war) காலத்திலும் கொவிட் யுத்த (covid war) காலத்திலும் அமெரிக்காவே இராணுவ சமநிலையை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. எனவே இதிலொரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான போர் முனையத்தை நோக்கி ரஷ்யாவும் சீனாவும் நகரும் போது அமெரிக்கா அதற்கான வாய்ப்பைக் கொடுக்காது செயற்பட்டு வருகின்றது. எனவே இந்த யுத்தம் உலகளாவிய இராணுவ சமநிலையை, உலகளாவிய அதிகார சமநிலையை மாற்றத்திற்குள்ளாக்கும். அந்தவகையில் ரஷ்யா ஒரு போரை உலகம் தழுவிய விதத்தில் மேற்கொள்ள முனைகிறது.

இரண்டாவது அமெரிக்காவை பொறுத்தவரை ரஷ்யாவின் எல்லைப் புறத்தை நோக்கி யுத்தத்தை நகர்த்துவது இலாபகரமானது எனக் கருதுகின்றது. அத்தகைய யுத்தத்தை பிராந்திய யுத்தமாகவும் மட்டுப்படுத்தப்பட்ட யுத்தமாகவும் கையாள விரும்புகின்றது. உக்ரைனை ரஷ்யாவுக்கு சமமான நாடாக மாற்றுவதன் ஊடாக அதனை ஒரு பிராந்திய யுத்தமாகவும் இரு நாட்டுக்குமான யுத்தமாகவும் கையாள விரும்புகின்றது. அதாவது ரஷ்யா விரும்புவது போல் உலகளாவிய தளத்தில் இத்தகைய யுத்தம் நிகழ்ந்து விடக்கூடாது என்பதில் அமெரிக்கா கரிசனை கொள்கின்றது. அதுமட்டுமன்றி நோட்டோ விஸ்தரிப்பு, ஐரோப்பிய யூனியன் விஸ்தரிப்பு ரஷ்யாவின் எல்லை நோக்கி நகர்த்துவது அமெரிக்க நவதாராள சக்திகளுக்கு இலாபமானதாக அமையும் என்று கருதுகின்றது. இதனாலேயே மட்டுப்படுத்தப் பட்ட யுத்தமாக நிகழ்த்தப்படுகின்ற அதேவேளை ரஷ்யாவின் உலகளாவிய நோக்கு நிலைகளைத் தடுக்கவும் பலவீனப்படுத்தவும் முடியும் என அமெரிக்கா கருதுகின்றது.

மூன்று, ரஷ்யாவும் சீனாவும் அமெரிக்க அணிக்கு எதிரான பலமான பதில் அரசியலை (counter politics) மேற்கொள்ளவே முயற்சிசெய்து வருகின்றது. பிராந்தியங்களைக் கடந்து உலகளாவிய தளத்தில் இராணுவம் மற்றும் பொருளாதார ஆதிக்கத்தை மேற்கொள்வதன் ஊடாக அதிகார சமநிலையை தமது பக்கம் வைத்துக் கொள்ளமுடியும் என கருதுகின்றது. சீனா, பொருளாதார மையமாக உலகத்தைக் கையாள முனையும் சந்தர்ப்பங்களில் ரஷ்ய, ராணுவ ரீதியில் செயற்பட முனையும் போக்குகள் இரு வல்லரசிடமும் காணப்படும் பிரதான அம்சமாகும்.

எனவே உக்ரைன் போர்க்களமானது உலகளாவிய இராணுவ சமநிலையில் கொவிட் யுத்தம் (covid war) ஒன்றிற்கான முனைவினை அடையாளப்படுத்துகின்றது. அதாவது அமெரிக்கா தலைமையிலான அணியை ரஷ்ய தலைமையிலான அணியே உக்ரைன் யுத்தத்தை உலகளாவிய மற்றும் பிராந்திய இராணுவ சமநிலைக்கான போட்டியாகக் கையாள முனைகின்ற போக்கு அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்தகைய ஒழுங்கானது பல்துருவ பனிப்போர் (multi polar cold war) உலக ஒழுங்காக தென்படுகின்றது. பெருமளவிற்கு இவ் யுத்தம் அமெரிக்க தரப்பினால் தவிர்க்கப்படவும், ரஷ்ய தரப்பினால் முதன்மைப்படுத்தப்படவும் வாய்ப்பு அதிகம் உள்ளது என குறிப்பிட முடியும்.

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்
இகல்வேந்தர் சேர்ந்தொழுகுவார்

THEEMPUNAL
தீம்புனல்

கனகசபாபதி கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
news@theempunal.com

வணக்கம்!

'தீம்புனல்' தனது முதலாவது காலடியை இன்று பதிக்கிறது. எண்ணிக்கையில் அதிகமான பத்திரிகைகள் வெளிவரும் சூழலில் புதியதொரு பத்திரிகை அவசியம்தானா? என்ற கேள்வி எழுவது பொதுவானதே. பத்திரிகை ஆரம்பிப்பது தொடர்பில் ஆலோசித்து வரும் காலப்பொழுதில் நாம் தொடர்பு கொண்ட, எம்மோடு தொடர்பு கொண்ட பலரின் அபிப்பிராயப்படி வாரப்பத்திரிகையின் தேக்க நிலை நிலவி வருவதனை அறிந்துகொள்ள முடிந்தது. அத்தேக்க நிலை எத்தகையது என்பது தொடர்பான நீண்ட விவாதத்தின், சிந்தனையின் பின்னர் தீம்புனல் வாரப்பத்திரிகையின் வரவு உறுதிப்படுத்தப்பட்டு இன்று வாசகர் கைக்குத் தந்திருக்கின்றோம். அதன் தரநிர்ணயம் வாசகர்களுக்குரியதே.

ஒரு பத்திரிகை வெளிவரும் போது பொதுவாக அதன் பின்னணி ஆராயப்படுவதோடு, அது கொண்டியங்கும் அரசியலும் உன்னிப்பாக கவனிக்கப்படும் நிலைமை உண்டு. பத்திரிகை அரசியல் என்பது நிர்வகிக்கும் உரிமையாளர் சார்ந்தது. அவர் கொண்டுள்ள அரசியல் நிலை, நிர்வகிக்கப்படும் பத்திரிகையின் அரசியலாக வெளிப்படும். இதனை நாம் வெளிவரும் பத்திரிகைகளை ஆராய்வதன் மூலம் கண்டு கொள்ள முடியும். இந்த நிலையில் எமது அரசியல் நிலைப்பாட்டினை குறிப்பிட்டே ஆக வேண்டும். சமநிலை பேணுதல் என்பதனையே நாங்கள் பிரதானமாகக் கொண்டியங்குகின்றோம். சமநிலை என்பது பக்கச் சார்பற்றது. மக்கள் சார்ந்தது. அவர்களின் பொது நிலைக் கருத்துக்கு மதிப்பளிப்பது. அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது. அவர்களிடம் எழும் ஐயங்களைக் களைய முனைவது. இவற்றினையே நாம் எங்கள் வெளிப்பாடாகக் கொள்கிறோம். பத்திரிகையுடன் தொடர்ந்து பயணிக்கும் போது அதனை அறிந்து கொள்ளமுடியும்.

இன்று தொழிலாளர் தினம், நூற்றி முப்பத்தைந்து ஆண்டுகளாக உழைப்போர் தமது உரிமையினைப் பெற்றுக்கொள்வதற்கான எழுச்சியை வெளிப்படுத்தும் நாளாக இது அமைகிறது. இத்தனை ஆண்டுகளில் தமது எழுச்சியின் ஊடாக அடைந்துவந்த உரிமைகள் ஒருபுறம் இருக்க இன்னும் அடையப்பட வேண்டிய உரிமைகள் ஏராளம் உண்டு, அதிகார வர்க்கத்தினரால் வஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தொழிலாளர் வர்க்கம் இன்னும் இருக்கவேதான் செய்கிறது என்பதனையே தொழிலாளர் தினம் எமக்கு நினைவூட்டுகிறது. இருந்தாலும் போராடாமல் எதுவும் கிடைக்காது என்ற நிதர்சனத்தின் மீதில் நம்பிக்கை இழக்கவும் இல்லை. நாம் பெற்றுக்கொள்ள வேண்டியவற்றினை பெற்றுக்கொள்ள நீண்ட போராட்டங்கள் தேவை என்பதனை மறுத்துவிட முடியாது. நீண்ட போராட்டத்தின் பின்னும் கூட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்தச் சம்பளம் ஆயிரம் ரூபா என்பது உறுதிப்படுத்தப்படாமல் இழுபறி நிலையிலேயே உள்ளது. இன்றைய பொருளாதார நிலையில் இச்சம்பளம் போதுமானதா? என்பதும் கேள்விக்குரியதே. அவர்கள் பெறவேண்டிய உரிமைகள் இதனை விடவும் அதிகம் உண்டு என்பதும் வெளிப்படையானது. உழைக்கும் வர்க்கத்தின் குரல் அதிகாரத்தினரின் செவிகளை அறையுமா? என்பதனை சிந்திக்க வேண்டும். வெறுமனே சாமானிய உழைப்பாளர்களின் குரல் இன்றைய அரசியல் நிலைப்பாட்டினைப் பொறுத்தமட்டில் பெறுமதியற்றதாக மாற்றப்பட்டு கொண்டிருக்கிறது. இதனை உழைப்பாளர் வர்க்கத்தினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் செயற்பாட்டாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். உண்மையில் அரசியல் செயற்பாட்டாளர்கள் இருக்கின்றார்களா? அரசியல் கட்சிகள் இருக்கின்றன, ஆனால் அவர்கள் செயற்பாட்டாளர்கள்தானா? வெறுமனே தமது இருப்பினைத் தக்கவைப்பதற்குரிய தற்சார்பு நிலை அரசியலை மேற்கொள்பவர்கள் மக்களுக்குரியவர்களா? என்ற கேள்விகளுக்கு எத்தகைய விடையளிப்பது என்பது குழப்பமானதே.

தற்சார்புநிலை அரசியலை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு பொதுவெளியில் தமது செயற்பாடுகளை நிகழ்த்த வேண்டிய அவசியத்தினை ஒவ்வொரு அரசியல் கட்சியும் அரசியல்வாதியும் புரிந்து கொள்ள வேண்டும். உழைக்கும் வர்க்கத்தினர் பொதுவானவர்கள். ஆனால் அவர்களுக்கான எழுச்சி நாளை மட்டும் தனித்தனியே மேடைபோட்டு கோசம் எழுப்புவது எதனை வலியுறுத்துகிறது? இவர்கள் ஒவ்வொருவரும் எத்தகைய தொழிலாளர்களை, தொழிலாளர் உரிமைகளினை பிரதிநிதித்துவம் செய்கின்றார்கள் என்பது புரியுமளவில் இல்லை. ஒவ்வொரு அரசியல் கட்சிகளுக்கும் ஒவ்வொரு கருத்தியல், கொள்கை, செயல் ஒழுங்கு இருக்கவேதான் செய்யும் என்பதனை மறுப்பதற்கில்லை. ஆனால் பொதுவான பிரச்சினைக்கு, பொதுவான உரிமைக்கு தங்கள் தனித்தனி கொள்கைகளை, அரசியல் நிலைப்பாடுகளை ஓரமாக வைத்துவிட்டு ஏன் ஒன்று திரள முடியவில்லை? ஏன் ஒரே மேடையில் நின்று உரிமைகளை கேட்க முடியவில்லை? வரட்டுக் கௌரவம் தடுத்து நிறுத்துகிறது. இது உண்மையில் ஆரோக்கியமனதல்ல. மக்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகளுக்கு முன் கௌரவங்கள் ஒன்றும் மேன்நிலையானவை இல்லை. தமிழர்களுக்கு கிடைக்கவேண்டிய குறைந்தபட்ச உரிமைகள் கூட கிடைக்காமல் போனதற்கு தனித்தோடித்தனமே காரணம் என்பதும் மறப்பதற்கில்லை. கடந்த காலங்களின் பாடங்களை படிப்பினையாகக் கொண்டு ஒரே குரலில் உரிகைளை கேட்பதே வென்றெடுக்க இலகுவானதாக இருக்கும். புரிந்துகொள்வோம்.

# வென்றெடுக்கப்பட வேண்டிய உரிமைகள் இன்னும் பேசப்படவேயில்லை

தந்திரன்

அரை நூற்றாண்டு போராட்டத்தின் இரத்தம் படிந்த வரலாற்றின் நீட்சியாகவே இன்றளவும் மே தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்று தம் உரிமைகளும், சலுகைகளும் மறுக்கப்பட்டபோது அதற்காகப் போராடிய சக தொழிலாளர்கள் சிந்திய இரத்தத்தின் நினைவுச் சின்னமாகவே இது கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றது.

காலங்காலமாக குறிக்கப்பட்ட முதலாளி வர்க்கத்தின் ஒடுக்கு முறைக்கும் அடக்கு முறைக்கும் ஆளான பாட்டாளி வர்க்கத்தின் குரலே மே தினம். எங்கெல்லாம் அதிகாரத்தின் பேரால் பாட்டாளி வர்க்கம் சுரண்டப்படுகிறதோ அங்கெல்லாம் மக்கள் தன்னெழுச்சியாக எதிர்ப்பைக் காட்டுவர். தொழிலாளர் எழுச்சியின் அடையாளமாக இது காணப்பட்ட போதிலும் அதிகார மையத்தின் இரும்புப் பிடிக்குள் சிக்கியிருக்கின்ற ஒவ்வொரு பாட்டாளிக்கும் இவ் எழுச்சி தேவையாகவே இருந்து வருகின் றது.

அதிகார மையத்தின் சுரண்டல் என்பது தொழிலாளர்களிடம் இருந்து அளவுக்கு அதிகமான உழைப்பைப் பெற்று, உழைப்புக்கேற்ற ஊதியத்தினை கொடுக்காமல் இருப்பது மட்டுமல்ல, அவர்களின் உணர்வுகளை மதிக்காது உரிமைகளைக் கொடுக்காது தான் தோன்றித் தனமாக செயற்படுவதனையும் சேர்த்துத்தான் குறிப்பிடப்படுகிறது.

முதலில் பாட்டாளி வர்க்கம் என்பதனை யதார்த்த பூர்வமாக விளங்கிக் கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. அதற்கு முத லில் தொழிலாளி - முதலாளி என்ற பிரிவினையின் கட்டமைப்பின் அர்த்தத்தினை விளங்கிக் கொள்ள வேண்டும். பௌதிக ரீதியிலான உடல் உழைப்பைக் கோருகின்ற தொழிலாளர்கள் மாத்திரம்தான் பாட்டாளி வர்க்கம் என்ற வகுதிக்குள் உள்ளடங்குகின்றார்களா? என நோக்கினால் மே தினம் என்ற சொல்லாடலை நாம் விரிந்த பொருளில் காண முடியாது. உடலுழைப்பினைக் கொண்டு ஊதியம் பெறுகின்ற பாட்டாளி வர்க்கத்தினை ஒரு வகை மாதிரியாகவே குறிப்பிட முடியும். இது தவிர மூளை உழைப்பினை அடிப்படையாகக் கொள்கின்ற உழைப்பாளிகளினது இன்றைய நிலையும் இதுவே. எனவே ஒடுக்கப்படுகின்ற அனைத்து மக்களின் அல்லது வேலை செய்பவர்களின் பொதுப் பிரச்சினையாகவே மே தினம் நோக்கப்பட வேண்டும்.

அரச அதிகாரத்தின் அல்லது மையத்தின் கீழ் பணிபுரிகின்ற அரச ஊழியர்களினதும் இன்றைய நிலை இது என்பது துர்பாக்கியம் நிறைந்ததாகும். இதனால் அரச இயந்திரத்தினை எதிர்த்துப் போராடுகின்ற நிலையையும் இத்தகைய சூழல் ஏற்படுத்தியிருக்கின்றமை கவலைக்குரியதொன்றாகவே காணப்படுகிறது. வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த முடியுமான அளவிற்கு வேலையின் அளவும் அதற்கான சம்பளமும் அமைந்திருக்கின்றமையை சுட்டிக் காட்டுவதோடு, விலைவாசிகளினதும் சம்பளத்தினதும் ஒப்பீடு மலைக்கும் மடுவுக்குமான உவமையாகக் கொள்ளப்படுகின்ற அளவுக்கு, இன்றைய அனைத்து உழைக்கும் வர்க்கத்தின் நிலைப்பாடு மாறியிருக்கின்றமை துர திஸ்டமே.

"சேற்றை மிதிப்பவன் சோற்றைக் கண்டதில்லை" என்பது போல வினைத்திறனாக வேலை ஆற்றுகின்ற ஒருவன் அதற்குரிய ஊதியத்தினை பெறாமல் சுரண்டப்படுவது ஒடுக்கு முறையின் இன்னொரு வடிவமாகும்.

எட்டு மணித்தியாலங்களே வேலை செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும், ஆறு மணித்தியாலத்திற்கு குறைவான நேரத்திற்கே ஊதியம் கொடுக்கப்படுகின்றமை சுட்டிக் காட்டப்பட வேண்டியதொன்றாகும். மலையக மக்களின் வாழ்வாதாரம், அவர்களின் உடலிலுள்ள இரத்தத்தை அட்டை உறிஞ்சுவதுபோல முதலாளிகளால் உறிஞ்சப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இங்கு தொழிலாளர்கள் கேட்பது பணமும், அதிகாரமும் அல்ல. தமக்கான அங்கீகாரமே. வேலை செய்கின்ற ஒவ்வொருவரையும் மதிக்கின்ற சமுதாயத்தினையே எதிர்பார்க்கின்றார்கள். தமது உழைப்பிற்கான ஊதியம் மாத்திரம் அல்ல அவர்களுடைய தன்மானமும் சேர்ந்தே சுரண்டப்படுகின்றது என்கின்ற அங்கலாய்ப்பே மேலெழுந்து நிற்கிறது.

ஒவ்வொரு தொழிலாளர்களினதும் இத்தகைய எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படுகின்ற பொழுதே மே நாளின் உண்மையான அர்த்தம் வெளிப்படுத்தப்படும். இன்றேல் வருடா வருடம் என்றோ ஒருநாள் பெற்றுக் கொண்ட உரிமைகளைக் கொண்டாடும் வெறும் நினைவு நாளாக அல்லது அதன் இயலாமை வெளிப்பாட்டு நாளாக கொண்டாட வேண்டியதுதான் என்ற ஆற்றாமையை குறிப்பிட்டே ஆக வேண்டும்.



**அவதானி**

நேற்றைய செய்தி நாளைய வரலாறு என்பார்கள். வரலாற்றிலிருந்துதான் பாடங்களையும் கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது.

எதனையோ கேட்டு, எதனையோ அடைந்து, இறுதியில் ஆப்பிழுத்த குரங்கின் கதிக்கு ஆளாகிய பாடத்தை கற்றுக்கொண்ட வரலாற்றையே கடந்துகொண்டிருக்கிறோம்.

அகிம்சையில் தொடங்கி, ஆயுத பாதைக்குத் தள்ளப்பட்டு, இப்போது இராஜதந்திர அரசியல் செய்கிறோம் எனச் சொல்லும் தமிழர் தரப்பின் பேச்சாளர்களை சமகாலத்தில் பார்த்து வருகிறோம்.

இலங்கைத் தீவுக்கு விஜயன் வந்து ஈராயிரம் ஆண்டுகள் கடந்த நிலையில், உள்நாட்டு சுதேச மன்னர்கள், சிற்றரசர்கள் வசமிருந்தபோது, யாழ்ப்பாணம், கண்டி, கோட்டை முதலான இராஜதானிகள் இருந்ததாக வரலாறு கூறுகிறது.

ஒரு காலத்தில் சித்தர் ஒருவர் பாடிய பாடல்தான் நினைவுக்கு வருகிறது.

1977 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு முன்னர், கொழும்பில் நடந்த ஒரு இரகசிய பேச்சுவார்த்தைக்கான சந்திப்புக்கு வருவோம்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் வலதுசாரி சிந்தனைப் போக்கினைக் கொண்டவர். ஆனால், அரசியலில் காய்நகர்த்தும் சாணக்கியர்.

அதுவரையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டரசாங்கத்திற்கு முண்டு கொடுத்துவந்த இடதுசாரிகளான கம்யூனிஸ்ட், சமசமாஜக்கட்சியினர் அடுத்தடுத்து வெளியேறியதனைத் தொடர்ந்து திண்ணை காலியாவதை உணர்ந்த தொண்டமான், நடக்கவிருந்த பொதுத்தேர்தலில் வெல்வதற்கான ஒரு கூட்டணி குறித்து பேசுவதற்கு தனது வீட்டில் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்தார்.

கொழும்பில் வீடும் காரும் பெற்றார். இறுதியில் அவரும் அருமைத் தம்பிகள் தரப்பால், 1989 ஆம் ஆண்டு மேல் உலகம் அனுப்பி வைக்கப்பட்டார். இவர்களுக்கு ஒப்பந்தம் என்ற பெயரில் உதவ வந்த அயல்நாட்டுத் தலைவர் ராஜீவ்காந்தியும் 1991 ஆம் ஆண்டு மேல் உலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். இறுதிவரையில் தமிழ் ஈழத்திற்காக போராடிய பிரபா கரனும் 2009 இல் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட் டார்.

தமிழ் ஈழத்திற்காக களம் இறங்கிய இயக்கத்தலைவர்கள் சிலரும் (ஸ்ரீசபாரத்தினம், உமா மகேஸ்வரன், பத்மநாபா, கிட்டு, மாத்தையா, தமிழ்ச்செல்வன், பாலகுமார் உட்பட்டோர்) அரசியல் அரங்கிலிருந்து நிரந்தரமாக விடைபெற்றனர்.

திண்ணைகள் காலியாகி விட்டன. இயக்கங் கள்



# நந்தவனத்து ஆண்டிகளும் போட்டுடைத்த தோண்டிகளும்

வர்த்தக நோக்கத்துடன் வந்த விதேசியர்கள் நாட்டைப் பிடித்து, தங்கள் உள்நோக்கங்களை நிறைவேற்றிவிட்டு, எங்கள் தேசத்தை அம்போ என கைவிட்டுச் சென்ற பின்னர், ஏதோவெல்லாம் நடந்து முடிந்து விட்டன.

அன்றைய செய்திகள் யாவும் வரலாறாகியதுதான் மிச்சம்.

தந்தை செல்வா, வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பின்னர் 1976 ஆம் ஆண்டு, தேசிய அரசுப்பேரவையில் (அன்றைய நாடாளுமன்றம்) பேசுகையில், தமிழ் மக்கள் இழந்த உரிமைகளை மீட்க, நாங்கள் ஒரு காலத்தில் இணைப்பாட்சி (சமஷ்டி) கேட்டோம். அதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவது சாத்தியம் இல்லை என்பதை பட்டறிவு மூலம் உணர்ந்தோம். எனவே, நாங்கள் பிரிந்து வாழ்வதுதான் வழி என்ற முடிவுக்கு வந்து விட்டோம். இதை நாம் செய்யாவிடின் தமிழினம் இழந்த தனது உரிமைகளை ஒருபோதும் மீட்க முடியாது. எங்களுக்கென ஒரு பாரம்பரிய பூமி உள்ளது. நாங்கள் பிரிவினை கோரவில்லை. இழந்த எங்கள் உரிமைகளை , எங்கள் அரசை மீட்டுப் பெறுவதே எங்கள் நிலை. தனித்தமிழ் ஈழம் என்ற இலட்சியத்தை நோக்கி நாங்கள் முன்னேறுவோம். எங்கள் இலக்கை அடைவது சுலபம் அல்ல என்பது எமக்குத் தெரியும். ஆனால், ஒன்றில் நாம் சிங்களவரின் அதிகாரத்திலிருந்து விடுபட வேண்டும், அல்லது அழிந்து போகவேண்டும். ஆயினும், நாங்கள் போராடி தனித் தமிழீழம் நிறுவியே தீருவோம். கூட்டாட்சிக் கோரிக்கையை அடியோடு கைவிட்டு விட்டோம். அகிம்சை வழியில் தனித் தமிழ் ஈழம் வென்றெடுப்போம் என்றார்.

இந்த உரையை தந்தை செல்வா 19-11-1976 ஆம் திகதி நிகழ்த்தினார். அடுத்த ஆண்டு 1977 இல் பொதுத் தேர்தலுக்கு சில மாதங்களே இருந்த நிலையில் ஏப்ரல் 30 ஆம் திகதி ( 30-04-1977 ) மறைந்தார்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் பதவிக் காலத்தில்தான் 1972 இல் புதிய அரசியலமைப்பு வந்தது. அதன் எதிரொலியாக தமிழர் தரப்பில் போர்க்குணம் எழுந்தது. அந்தக்குணம் வட்டுக்கோட்டை தீர்மானம் வரையில் தீவிரம் பெற்றதையடுத்து தந்தை செல்வா, அத்தகைய ஒரு தீர்மானத்தை ஏன் எடுக்க நேர்ந்தது என்று மரண வாக்கு மூலமாகவே சொல்லிவிட்டு, ஒரு சில மாதங்களில் விடை பெற்றார்.

தந்தைக்குப் பின்னர் தனயர்களும் தளபதிகளும், தேசியத்தலைவரும், மாவீரர்களும் வந்தனர்.

இப்போது, யாழ். மாகாண சபையின் முதல்வர் யார் என்ற இழுபறிக்கு வந்துள்ளனர்.

“நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி”



அதில் கலந்து கொண்டவர்கள் பின்னாளில் அமைச்சராகவும் பிரதமராகவும் பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவின் அருமைத் தந்தையார் எஸ்மண்ட் விக்கிரமசிங்க, ( இவர் இலங்கையில் மூத்த பத்திரிகையாளர்) தமிழர் தரப்பில் அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம், எஸ். கதிரவேற்பிள்ளை, பொல்காவெலை எம். பி, எம். டீ. பண்டா.

இந்த இரகசிய சந்திப்பு, அவர்கள் தயாரித்த அடுத்து வந்த தேர்தல் அறிக்கையினால் ( Manifesto) பரகசியமானது !

அந்த அறிக்கை இவ்வாறு சொன்னது:

“தமிழ்ப்பேசும் மக்களுக்குப் பிரச்சினைகள் இருப்பதை ஐக்கிய தேசியக்கட்சி ஏற்றுக்கொள்கிறது. அவற்றை தீர்க்க முன்னைய அரசுகள் முன்வராதமையால்தான் தனிநாட்டுக்கோரிக்கையை முன்வைப்பவர்களை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டிய நிலை உருவானது. நாட்டின் முன்னேற்றத்திற்கு தேசிய ஐக்கியம் முக்கியமானது. எனவே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய அவசியத்தை ஐக்கிய தேசியக்கட்சி உணருகிறது. எனவே ஐ.தே.க. ஆட்சிக்கு வந்ததும், கல்வி, அரசாங்க வேலை வாய்ப்பு, தமிழ் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள், அரச நிருவாகத்தில் தமிழுக்குரிய இடம் ஆகியனவற்றில் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் குறைபாடுகளை களைவதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் ஐ.தே.க மேற்கொள்ளும்.”

இத்துடன் அந்த அறிக்கை முடியவில்லை. இறுதியில் ஒரு கொசுறு இணைப்பினையும் பதிவேற்றியிருந்தது!

அந்த வரிகள்: இங்கு சொல்லப்பட்ட தமிழர் தரப்பிலான ஆதங்கங்களை ஆராய்வதற்கு ஐ.தே.க. பதவிக்கு வந்ததும் சர்வகட்சி மாநாடும் நடத்தப்படும். இழுத்தடிப்பின் மறுபெயர்தான் இதுபோன்ற மாநாடுகள் என்பது விடயம் தெரிந்தவர்களுக்குப் புரியும்!

தன்னை ஒரு தார்மீகத் தலைவர் என்று பிரகடனப்படுத்திக் கொண்ட ஜே.ஆர். ஜெயவர்தன, இறுதியில் தமிழர்களைப் பார்த்து, “உங்கள் தந்தைக்கும் பெப்பே. உங்கள் தனயர்கள், தளபதிகளுக்கும் பெப்பே “என்று பெப்பே காண்பித்தார்.

எனினும், ஆயுதம் ஏந்திய வீரர்களுக்கும் அவர்களது தேசியத் தலைவருக்கும் பெப்பே காட்ட முடியாமல், இறுதியில் இந்தியாவிடம் சரணடைந்து, உள்ளே அழைத்து ஒப்பந்தம் என்ற பெயரில் ஒன்றை உருவாக்கி, அதனால் தோற்றுவிக்கப்பட்ட மாகாண சபை முறைமைக்கும் போதிய அதிகாரங்கள் வழங்காமல், அமைதிப்படை என்ற பெயரில் வந்தவர்களையும், தனக்குப் பின்னர் அதிபராகப் பதவியேற்ற ரணசிங்க பிரேமதாசவினால் My Boys என விளிக்கப்பட்ட, தம்பிமாரையும் மோதவிட்டுவிட்டு, அரசியலிலிருந்து முற்றாக ஓய்வு பெற்று இரத்தம் சிந்தாமல் 1996 ஆம் ஆண்டு நிரந்தரமாக விடை பெற்றார். ஜே.ஆர்.ஜெயவர் தனாவுக்கு முன்னரே, ரணசிங்க பிரேமதாசா யாரை My Boys என அழைத்தாரோ அவர்களாலேயே 1993 இல் மேல் உலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

வட்டுக்கோட்டை தீர்மானத்தை முன்மொழிந்து தம்பிமாரை உசுப்பேத்திய அண்ணன் அமிர்தலிங்கம், 1977 பொதுத்தேர்தலில் வென்று எதிர்க்கட்சித் தலைவராகி,





கோலோச்சிய காலத்தில் வடக்கிற்கும் கிழக்கிற்கும் வராத தற்போ தைய தலைவர்கள் சிலர் நாடாளுமன்ற ஆசனத்திற்காகவும், வடக்கு - கிழக்கு மாகாண சபைகளின் முதல்வர் பதவிக்காகவும் பட்டிமன்றங்கள், சங்கீத கதிரைப் போட்டிகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அன்று 1977 இல் எந்த ஐக்கிய தேசியக் கட்சியை அரசுக்கட்டில் ஏற்றுவதற்கு கொழும்பில் சந்திப்பு நடத்திய தமிழ்த்தலைவர்களின் வாரிசுகள்தான், மீண்டும் 2010 இல் அதிபர் தேர்தலில் போரை முன்னின்று நடத்திய ஃபீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவை பொதுவேட்பாளராக்கி ஆதரித்தன. அதே வாரிசுகள் தான் மீண்டும் மைத்திரி - ரணில் நல்லாட்சிக்கு ( ?) முண்டுகொடுத்தனர்! இந்த ரணில்தான் கல்முனைப் பிரதேச செயலக விவகாரத்தில் சுமந்திரனுடன் சாமர்த்தியமாகப்பேசி, அன்றைய தனது பிரதமர் பதவியையும் நல்லாட்சி அரசையும் தக்க வைத்தவர். மீண்டும் தேசியப்பட்டியல் ஊடாக பின் கதவால் வரவிருக்கும் ரணிலும் தனது தந்தை எஸ்மண்ட் விக்கிரமசிங்க போன்று காய் நகர்த்துவதில் வல்லவர். தற்போது அரசியல் அரங்கில் காட்சிகள் மாறிவிட்டன.

வடக்கு முதல்வர் பதவிக்கு ஆசைப்பட்டு, தனது ஆன்மிகப்பணிகளை ஓரம்கட்டி வைத்துச்சென்ற நீதியரசர் விக்கினேஸ்வரன், புதிய கட்சியும் தொடங்கி, நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவமும் பெற்றுவிட்டார். அவருக்கும் மக்களின் வரிப்பணத்தில் அனைத்து சௌகரியங்களும் வசதிகளும் கிடைக்கும். அவரது வடக்கு மாகாணத் திண்ணை காலியாகிவிட்டது. அந்தத் திண்ணையில் இனியார் அமருவது என்பதில்தான் தற்போது சங்கீதக் கதிரைப்போட்டி நடக்கிறது!

தமிழ் மக்களை எமது தலைவர்கள் எங்கிருந்து எங்கே அழைத்துச் சென்றிருக்கிறார்கள் என்பதையும், தாங்கள் எங்கே சென்றார்கள் என்பதையும் பற்றிய அவதானக் குறிப்புகள்தாம் இவை. சமகாலச்செய்திகள், நாளை ஒரு நாள் வரலாறாகிவிடும்.

அவ்வளவுதான் !

# அகாலத்தில் உறைதல்...



● யாழ் சத்யா

டொக்... டொக்..! டொக்... டொக்... டொக்... டொக்...

இத்தோடு நாலாவது முறையாகக் கதவைத் தட்டும் சத்தம்.

முள்ளிவாய்க்காலுக்கு சிறிதே தொலைவில் புதிதாக எழுந்திருந்த சிறிய கல் வீட்டின் முன்புறக் கதவைத் தான் வெகு நேரமாக யாரோ விட்டு விட்டுத் தட்டிக் கொண்டிருந்தார்கள்.

நேரம் என்னவோ இரவு பத்தரை தான். மார்கழி மாதம் தனது வேலையைக் காட்ட, வானம் தனது கண்ணீரை மண்ணுக்கு அனுப்பிக் கொண்டிருந்தது. கூதல் காற்று அப் போது தான் கொஞ்சமாய் கிளைகள் விடத் தொடங்கியிருந்த கிளுவங்கதியால்களிடம் ஊடல் செய்து கொண்டிருந்தது. அமாவாசை இருட்டு வேறு, மழைச் சத்தத்தைத் தவிர வேறு சத்தங்களற்ற ஒரு அமானுஷ்ய சூழ்நிலையை உருவாக்கியிருந்தது.

வீட்டினுள்ளே இருந்தவர்களில் மூன்று ஜீவன்கள் பயத்தில் வெல வெலத்துப் போய் செய்வதறியாது ஒருவரை ஒருவர் இறுக அணைத்தவாறு படுக்கை அறையில் ஒன்றியிருந்தனர். அந்த வீட்டின் நான்காவது ஜீவனோ கட்டிலின் அடியில் பதுங்கியிருந்தது. ஆம்! எல்லாம் பழக்க தோஷம் தான். யுத்த காலத்தில் பல்குழல் குண்டுகளுக்கும், பீரங்கிக் குண்டுகளுக்கும் பதுங்கு குழிக்குள் பதுங்கிய பழக்கம். பல வருடங்கள் கடந்த நிலையிலும் ஏதாவது விரும்பத்தகாத சத்தம் கேட்டால், அந்த வீட்டின் கடைக்குட்டியான பன்னிரெண்டு வயது யாழினி கட்டிலுக்கடியிலோ, அல்லது சமையல் கட்டினடியிலோ பதுங்கி விடுவாள். நிலைமை சீராகிவிட்ட பின்னர்தான் அவளை வெளியே காண முடியும். நான்கு வயதில் அவள் அனுபவித்த காலக் கொடுமைகள் இன்றும் அவள் மனதில் மாறா வடுவை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கின்றன.

டொக்..!

டொக்...டொக்...

டொக்...

மறுபடியும் அதே சத்தம். பதினைந்து வயது யாழினியின் தமக்கை நடுக்கத்துடன் தன்னை இறுக அணைத்திருந்த தாயையும் அம்மம்மாவையும் அச்சம் மேலேறிய விழிகளுடன் ஏறிட்டாள். கிசு கிசுத்த குரலில்,

"அம்மா! எனக்கு பயமாயிருக்கும்மா இப்பிடித்தான் போன கிழமை என்ர வகுப்பு நந்தினி வீட்ட போய்க் கதவைத் தட்டினவங்களாம்.

அவள்ட அப்பா

கதவைத் திறந்து யாரென்று பார்க்க, அவங்கள் வீட்டுக்க வந்து அங்க வைச்சே நந்தினியைச் சீரழிச்சுப் போட்டாங்கள். என்னையும் அப்பிடிச் செய்து போடுவாங்களோம்மா?"

கலங்கியபடி கேட்ட மகளுக்கு பதிலுரைக்கும் வகையறியாது மௌனமாய் குலுங்கினாள் அந்தத் தாய். அவளுமே அதைத்தானே எண்ணிக் கலங்கிக் கொண்டிருக்கிறாள். பிறகு எப்படி அவளால் மகளைத் தேற்ற முடியும்?

அவளே முப்பத்தைந்து வயது இளந்தாய்தான். வயது வந்த இரு பெண்களோடும் அவளைப் பெற்ற தாயோடும், தினமும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறாள். யுத்த காலத்தில், பதுங்கு குழி வெட்டிக் கொண்டிருந்த தந்தை, கணவன், மகன் மூவரையும் ஒரு சேர விமானக் குண்டுத் தாக்குதலுக்கு பலி கொடுத்து விட்டு ஆண் துணையற்று இன்று நிர்க்கதியாகிப் போயிருக்கிறார்கள். "பிள்ளை! இது அவங்கள் என்டால் இவ்வளவுத்துக்கு கதவைத் திறக்கச் சொல்லிக் கத்தியிருப்பாங்கள். கதைச் சத்தத்தையே காணோமே" தாயின் கிசு கிசுப்பில் அவர் சொன்ன யதார்த்தத்தை சிந்திக்க ஆரம்பித்தாள் யாழினியின் அன்னை. அப்போ கதவைத் தட்டுவது யார்?

டொக்... டொக்.. டொக்... டொக்...

மறுபடியும் அதே சத்தம்! மூவரது உடலும் தங்களை அறியாமல் ஒரு தரம் சிலிர்க்க ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். யாழினியின் தாய் மெதுவாகக் குனிந்து கட்டிலுக்கடியே பார்த்தார். யாழினி அப்படியே சுருண்டு தூங்கிப் போயிருந்தாள். அவள் முதலே யோசனையாக பாயை விரித்திருந்தபடியால் குளிர் பிடிக்காது. போர்வையை எடுத்து அவளைப் போர்த்தி விட்டு மறுபடியும் கட்டிலில் ஏறி சாய்ந்து அமர்ந்தாள். அவளை ஒட்டி அமர்ந்து அவள் தோளில் தலை சாய்த்த மூத்த மகளின் தலையை மெதுவாய் வருடியவள்,

"நாளைக்கு சோதினையெல்லே பிள்ளை நீ படும்மா நித்திரை முழிச்சா எப்பிடி சோதினை எழுதுறது பிறகு? நானும் அம்மம்மாவும் முழிச்சிருக்கிறம் தானே நீ படும்மா..." சொல்லிக்கொண்டு இருக்கவும், மறுபடியும் அதே சத்தம்.

டொக்...டொக்...டொக்...டொக்...

தோளில் தலை சாய்த்த மகளோ, முதுகுத் தடம் விறைக்க மறுபடி எழுந்து உட்கார்ந்தாள்.

"நான் யன்னலால எட்டிப் பார்க்கவே?"

கேட்டவளைத் தாயும் பிள்ளையும் முறைத்தனர்.

"உனக்கென்ன விசரே உதயபுரத்தில உப்பிடி எட்டிப் பார்த்தாளென்ட உயிர் போன விசயம் பேப்பரில பார்த்தனி தானே" "அதுதானேம்மா பிறகும் சும்மா லூசு மாதிரி கதைக்கிறியள்"

"டொக்...டொக்... டொக்... டொக்"

அதே சத்தம் கொஞ்சம் ஓங்கி ஒலித்தது போல இருந்தது. "அம்மா எனக்கு பாத்ரூம் வருது"

அறை மூலையில் இருந்த வாளியை அம்மம்மா எடுத்துக் கொடுக்க தாயின் கையைப் பிடித்தவாறே தனது தேவையைத் தீர்த்துக் கொண்டாள் அந்தக் குமரி.

மறுபடியும் கட்டிலில் வந்தமர்ந்து கொண்டவர்களின் யோசனை கதவைத் தட்டுவது யாராகவிருக்கும் என்பதில் சுற்றிச் சுழன்றது. "அடி பிள்ளை உந்த கந்தசாமிட பொண்டாட்டி கமலம் சொன்னாள், நந்திக்கடல் பக்கம் மீன் பிடிக்கப் போனாக்கள், பொழுதுபட்டோடன நாலைஞ்சு வெள்ளைச் சீலை கட்டின பொம்பிளையள் ஒப்பாரி வைச்ச சத்தத்தைக் கேட்டதுகளாம். சில நேரங்களில என்ர பிள்ளை எங்க? என்ர புருஷன் எங்க? என்று அழுது கேட்குமாம். பக்கத்தில போனால் உடனே புகைபோல மறைஞ்சிடுமாம். இப்பிடி மெல்லமாத் தட்டுறபடியால ஏதும் பேய், பிசாசாக இருக்குமோ?" அம்மம்மா சொல்லவும் தாயை மறுபடியும் இறுக்கி அணைத்துக் கொண்டாள் மகள்.

"ர்... ர்... கொர்... ர்..."

இப்போது புதிதாக வேறொரு சத்தம். "அம்மா! எனக்கு பயமாயிருக்கும்மா பேய் தான் போல கிடக்கு. அதைப் பற்றி கதைச்ச உடனே கதவைத் தட்டுறதை நிப்பாட்டிட்டு வேற ஏதோ சத்தம் போடுது அன்றைக்கு சந்திரனும் சொன்னவன். வெள்ளை சாரி கட்டின ஒரு பொம்பிளையை இரவு ஒண்டிக்கிருக்க வெளில போகேக்க கண்டவனாம் என்று."

"உஸ்." அச்சத்தோடு நடுங்கியபடி கிசு கிசுத்த மகளை வாயில் கை வைத்து அமைதியாக இருக்கும் படி பணித்தவள், தன்னை ஒட்டி அமர்ந்த தாயையும் விலக்கிக் கொண்டு, சத்தம் வந்த திசையைக் கூர்ந்து கவனித்து கட்டிலின் கீழே குனிந்து பார்த்தாள்.

"கொர்... ர்... ர்..."

அயர்ந்து உறங்கி கொறட்டை விட்டுக் கொண்டிருந்த சிறிய மகளைப் பார்த்தவளின் முகத்தில், அந்த சூழ்நிலையையும் மறந்து புன்முறுவல் அரும்பியது. மற்ற இருவரும் சிரிப்பவளையே கேள்வியாய் நோக்க, "யாழி தான் கொறட்டை விடுறாள் சும்மா எல்லாத்துக்கும் பயந்து சாகாதீங்கோ பேயுமில்லை பிசாசுமில்லை அப்படியிருந்தால் கொத்துக் கொத்தாச் செத்துப் போன எல்லாருமாய் வந்து தங்களைச் சாகடிச்சவங்களைப் பழி வாங்கியிருந்தால் மிஞ்சியிருக்கிற நாங்களாச்சும் நிம்மதியா இருந்திருக்கலாமே அம்மா! நீங்க கீழே யாழினியோட பே- ய்ப் படுங்கோ. நீ இதில என்னோட படு" கொஞ்சம் அதட்டலாகவே சொல்லவும் அந்த இளங்குருத்தும் தாயைக் கட்டியணைத்தவாறு, கந்தசட்டிக் கவசம் சொல்லிக் கொண்டே தூங்க முயற்சித்தது.

"டொக்...டொக்...டொக்...டொக்..."

அயர்ந்து தூங்கிய மகளைக் கனிவாய் பார்த்து விட்டு தலைமாட்டில் இருந்த கைத்தொலைபேசியில் நேரத்தைப் பார்த்தாள். மணி இரண்டரை காட்டியது. 'யாருடா நீ? இப்பிடி சலிக்காமல் தட்டுவது?' சில நேரங்களில் ஓங்கியும் சில நேரங்களில் மெதுவாயும் தட்டிக் கேட்டுக் கொண்டிருந்த சத்தத்தைப் பற்றியே எண்ணங்கள் சுழல அன்றைய நாளின் அலுப்பில் அவளும் தூங்கிப் போனாள். காலையில் ஆறு மணிக்கு அலாரம் அடிக்கவும் தான், நான்கு ஜீவன்களும் துடிக்கப் பதைக்க எழுந்தார்கள். மழை ஓய்ந்திருந்தது. காலைக்கே உரிய பறவைகளின் சத்தமும் அக்கம் பக்கத்து வீட்டு மனிதக் குரல்களும் கேட்டன.

"டொக்...டொக்...டொக்...டொக்..."

மறுபடியும் அதே சத்தம். நால்வரும் திகைத் துப் போய் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். பொழுதுதான் விடிந்து விட்டதே. இனி அயலவரை உதவிக்கு அழைக் கலாம் என்ற துணி வில் கதவை நோக்கிச் சென்றனர். தாய் கதவைத் திறக்க எத்தனிக்கவும்,

"அம்மா... !

பொறுங்கோ" கூறிய யாழினி, முன்பக்கத்து கதவுப் பக்கமாய் இருந்த யன்னலடியில் கதிரையொன்றை வைத்து திரைச் சீலையை விலக்கி எட்டிப் பார்த்தாள். அந்த இடத்திலிருந்து பார்த்தால் முன்பக்க கதவு தெரியும். பார்த்தவளோ விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டே ஓடிச்சென்று கதவைத் திறந்தாள். அங்கே ஆட்டுக் கொட்டகையிலிருந்து வெளியேறிய அவர்களது வெள்ளாட்டுக் குட்டியொன்று தனது கொம்புகளால் கதவை முட்டிக் கொண்டிருந்தது. அதன் கழுத்தில் கட்டியிருந்த கயிறு முன்புறமிருந்த பூவரசு வேரில் சிக்குண்டிருந்தது.

யாழினி ஆட்டுக் குட்டியை அணைத்துக் கொள்ள, மூத்த மகளோ செல்லக் கோபத்தோடு அதன் முதுகில் மெதுவாய் ஒன்று போட்டாள்.

"டேய் வெள்ளையா! எனக்கு மட்டும் சோதினையில மாக்ஸ் குறையட்டும் அப்ப இருக்கு உனக்கு கச்சேரி" என்று சொல்லிக்கொண்டு பாடசாலைக்குத் தயாராகச் செல்லவும், மற்றவர்களும் ஒரு முறுவலோடு தத்தம் கடமைகளில் ஈடுபட ஆரம்பித்தார்கள். 'அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்று சிரிப்பதா? அல்லது சாப விமோஷனம் கிடைக்காது அல்லல்படும் இந்தப் பாவப்பட்ட ஜீவன்களைப் பார்த்து வருந்துவதா?

"டொக்...டொக்...டொக்...டொக்..."

மறுநாள் ராத்திரி. இன்னொரு வீட்டிலே. அது ஆடில்லாமல் காலனாயும் இருக்கலாம்!

"டொக்...டொக்...டொக்...டொக்...."

■

> "மறுபடியும் அதே சத்தம். பதினைந்து வயது யாழினியின் தமக்கை நடுக்கத்துடன் தன்னை இறுக அணைத்திருந்த தாயையும் அம்மம்மாவையும் அச்சம் மேலேறிய விழிகளுடன் ஏறிட்டாள்."

# தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளை கண்டு அஞ்சும் தமிழ் மக்கள்

மு.தமிழ்ச்செல்வன்



தற்போது தமிழ் மக்கள் மத்தியில் அதிகம் பேசப்படுகின்ற விடயமாகவும், சர்ச்சைக்குரிய விடயமாகவும் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் இடம் பிடித்திருக்கின்றன. விசேடமாக வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படுகின்ற தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் ஆக்கிரமிப்பை நோக்கமாக கொண்டவை எனவும், ஒரு இனத்தின் வரலாற்றை திட்டமிட்டு மாற்றியமைக்கும் நோக்கோடு மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகள் எனவும் தமிழ் மக்கள் பலமாக நம்புகின்றனர். தமிழ் மக்களின் மரபுரிமைகள் மாற்றப்படுவதாகவும், வரலாறுகள் திரிபுபடுத்தப்படுவதாகவும் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்றனர்.

எனவேதான் அரசின் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் தமிழ் மக்களை சந்தேகத்திற்குள் தள்ளிவிட்டு அதற்கு எதிராக போராடுகின்ற நிலைமைக்குள் கொண்டு சென்றிருக்கின்றன. அகழ்வாராய்ச்சிகளின் போது அனைத்து இனங்களின் துறைசார் பிரதிநிதிகள் இணைத்துக்கொள்ளப்படாமை, ஊடகவியலாளர்களுக்கான அனுமதி மறுப்பு, என்பனவும் தொல்லியல் அகழ்வாராய்ச்சி மீதான நம்பகத் தன்மையை அற்றுப் போகச் செய்துள்ளது.

இதன் விளைவாகத்தான் தொல்லியல் திணைக்களத்தால் கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வர வளாகத்தில் மேற்கொள்ள முன்னெடுக்கப்பட்ட அகழ்வாராய்ச்சிக்கு அப்பிரதேச மக்கள் தங்களது கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றனர். புத்த சாசன அமைச்சினால் இந்த ஆய்வுக்கு என 15 இலட்சம் ரூபா ஆரம்பக் கட்ட நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. கடந்த ஜனவரி மாதம் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் பின்னர் அது கடந்த 24.03.2021 அன்று மேற்கொள்ள திட்டமிட்டு வடமாகாண தொல்லியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தலைமையில் குழு ஒன்று உருத்திரபுரம் கோவில் வாளாகத்திற்கு விஜயம் செய்த போது, பொது மக்கள் அவர்களை உள்ளே செல்ல விடாது தடுத்து திருப்பி அனுப்பியிருந்தனர்.

**உருத்திரபுரீஸ்வரம்**

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மிகப் பழைய குடியேற்றங்களில் ஒன்றான உருத்திரபுரம் கிராமத்திற்கு கிளிநொச்சி ஏ9 வீதி கரடிப் போக்குச் சந்தியிலிருந்து மேற்கு புறமாக 10 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள ஒரு அழகிய கிராமம் மருத நில அம்சங்களை கொண்டுள்ள ஊரில்அமைந்துள்ள ஒரு வரலாற்று தொன்மை மிக்க சிவாலயம் சுமார் 3000 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலயம் என வரலாற்று ஆசிரியர்களும் ஆய்வாளர்களும் கூறுகின்றனர். அதற்கான ஆதாரங்களையும் அவர்கள் முன்வைத்துள்ளனர். ஆலயத்தின் கட்டடக் கலை அம்சங்கள், சுடுமண் சிலைகள், சற்சதுர ஆவுடையார் என்பன இவ் ஆலயத்தின் தொன்மையினை வெளிப்படுத்தி நிற்கின்றன.

சிவன் கோவில்கள் பெரும்பாலும் சாதாரணக் குக் கிராமங்களில் இருப்பது மிக மிகக் குறைவே. சிவன் கோவில்கள் அமையப்பெறும் இடங்கள் பெரும் நகரங்களாகவே இருக்கும் என்றே ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். விநாயகர், அம்மன், வைரவர், முருகன் கோவில்கள் போன்று எல்லா இடங்களிலும் சிவன் கோவில் இருப்பதில்லை. எனவேதான் உருத்திரபுரம் சிவன் கோவிலும் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் பெரும் நகரமாக இருந்திருக்க வேண்டும் எனவும் சிவன் ஆலயங்கள் தொடர்பில் கூறும் வரலாற்று ஆசிரியர்கள் தெரிவித்து வருகின்றனர்.

எனவே காலத்திற்கு காலம் இடம்பெறுகின்ற ஆக்கிரமிப்புக்கள், படையெடுப்புகள், சமய அழிப்புக்கள் காரணமாக இக் கோவிலும் அதனை அண்டிய பிரதேசமும் அழிவடைந்திருக்க முடியும். உதாரணமாக போர்த்துகேயர் காலத்தில் அவர்கள் நடைமுறைப்படுத்திய சமய அழிப்புக் கொள்கை காரணமாக ஏராளமான சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்ட வரலாறு நாம் அனைவரும் அறிந்த உண்மை.

உருத்திரபுர பிரதேசம் மிகவும் தொன்மையான பிரதேசம் என்பதனை 1959 ஆம் ஆண்டு எட்டாம் வாய்க்கால் பகுதியில் ஒருவருடைய காணியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது எடுக்கப்பட்ட தொல்பொருட்கள் சான்றாக உள்ளன. இப்பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டு அநுராதபுரம் நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாலயம் 1882 ஆம் ஆண்டு அப்போதிருந்த யாழ்ப்பாண அரச அதிபரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பின்னர் 1949 உருத்திரபுரம் குடியேற்றம் மேற்கொள்ளப்படும் வரை ஆலயம் கவனிப்பாரற்றுக் காணப்பட்டது. இதன் பின்னர் 1958 ஆம் ஆண்டு வேலாயுத சுவாமிகள் உருத்திரபுரீஸ்வர ஆலயம் பற்றி வடிவேல் சுவாமிகளுக்கு தெரிவித்து அதன் பின்னர் பலர் ஒன்று இணைந்து ஆலயத்தின் வளர்ச்சிக்காக உழைத்து ஆலயத்தை இன்றைய நிலைக்கு கொண்டு வந்துள்ளனர்.



இப்பொழுது இந்த ஆலய வளாகத்திலேயே அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ள அரசு நிதி ஒதுக்கி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உருத்திரபுரம் சிவன் ஆலயத்தின் முற்றத்தில் உள்ள செங்கல் மேடு ஒன்றிலேயே அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்குள் வரலாற்று தொன்மை மிக்க எச்சங்கள் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆய்வுகளின் முடிவுகளிலேயே அது நிரூபிக்கப்படும்.

ஆனால் கிளிநொச்சி மாவட்ட மக்கள் ஏன் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்? இராஜ இராஜசோழன் காலத்திற்கு முற்பட்ட சிவன்கோவில் என்றால் இங்கு மேற்கொள்ளப்படுகின்ற அகழ்வராய்ச்சிகளின் போது கிடைக்கப் பெறும் வரலாற்று எச்சங்கள் சைவ சமய எச்சங்களாகத்தானே இருக்க வேண்டும்? அப்படியிருக்க ஏன் தமிழ் மக்கள் தொல்லியல் ஆய்வுகளுக்கு எதிராக கிளர்ந்தெழ வேண்டும்? இங்கேதான் பிரச்சினையே. இப்பந்தியின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று இலங்கையில் தற்போது வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படுகின்ற தொல்லியல் ஆய்வுகள் என்பது ஆக்கிரமிப்பை நோக்கமாகக் கொண்ட ஆய்வுகள் என்றும், ஒரு இனத்தின் மரபுரிமைகள், வரலாறுகளை திரிபுபடுத்துகின்ற வகையில் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகள் என்றும் தமிழ் மக்கள் பலமாக நம்புகின்றனர். எற்கனவே நடந்த குருந்தூர் மலை உட்பட வடக்கு, கிழக்கில் நடந்த பல தொல்லியல் ஆய்வுகள் உதாரணமாக உள்ளன.

கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பல அனுபவங்கள் அவர்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் என்பனவே வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படுகின்ற தொல்லியல் ஆய்வுகளை தமிழ் மக்கள் நிராகரிக்கக் காரணமாக அமைந்துள்ளன.


வடக்கு, கிழக்கில் ஒரு காலத்தில் தமிழர்களும் பௌத்தர்களாக இருந்துள்ளனர். அக்காலத்தில் ஆட்சியிலிருந்த மன்னர்கள் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளித்து ஏனைய மதங்களை பின் தள்ளிய நிலையில் தமிழர்களும் பௌத்தர்களாக மாறியிருக்கின்றனர். இதனை நிரூபிக்கும் வகையில் ஏராளமான ஆதாரங்களை தமிழ், சிங்கள தொல்லியல் ஆய்வாளர்கள் முன்வைத்துள்ளனர். அண்மையில் கூட யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஸ்ட பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்கள் வழங்கிய நேர்காணல் ஒன்றிலும் தமிழ் பௌத்தம் பற்றி தெளிவாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் வடக்கு கிழக்கில் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளின் போது தமிழர்கள் பௌத்தர்களாக இருந்த போது வணங்கி, பயன்படுத்திய எச்சங்கள் மீட்கப்படின் அரசு அதனை சிங்கள பௌத்தம் என்றும் இத்தீவு முழுவதும் சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்த தீவு என்றும் கூறி புதிய புதிய விகாரைகளை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் என்றும் இதனால் தமிழ், சிங்கள முரண்பாடுகள் மேலும் வலுப்பெற்று இன நல்லிணக்கத்திற்கு பதிலாக இன முரண்பாடுகளே அதிகரித்துச் செல்லும் எனவும், எனவேதான் தாம் இவ்வாறான தொல்லியல் ஆய்வுகளை எதிர்ப்பதாக தமிழ் மக்களும் அவர்களுடைய பிரதி நிதிகளும் உறுதியாகக் கூறி வருகின்றனர். கிழக்கு மாகாண தொல்லியல் மரபுரிமைகளைப் பாதுகாக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தலைமையில் பெரும்பான்மை இன பிரதிநிதிகள் மாத்திரமே உள்ளடக்கி அமைக்கப்பட்ட ஜனாதிபதி செயலணி தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. தமிழ், முஸ்லிம் துறைசார் பிரதிநிதிகள் பலர் உள்ள போதும் அவர்கள் உள்வாங்கப்படவில்லை. இவ்வாறு குருந்தூர் மலை அகழ்வாராய்ச்சியின் போதும் ஆரம்பத்தில் வடக்கில் உள்ள துறைசார் தமிழ் பிரதிநிதிகள் இணைத்துக் கொள்ளப்படவில்லை. அவ்வாறே வடக்கில் உருத்திரபுரம், மண்ணித்தலை, நெடுந்தீவு வெடியரசன்கோட்டை போன்ற இடங்களில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் இறுதிவரை துறைசார் தமிழ் பிரதிநிதிகளுக்குத் தெரியாமல் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து, எதிர்த்து நிற்கக் காரணங்களாக அமைந்துள்ளன.

வரலாற்று அகழ்வாராய்ச்சிகள் நம்பகத்தன்மை மிக்கதாக, வெளிப்படைத்தன்மையுள்ளதாக மேற்கொள்ளப்பட வேண்டும். வரலாறுகள் திரிபுபடுத்தப்படக்கூடாது, ஆக்கிரமிப்பை நோக்கமாக கொண்டதாக இருக்கக் கூடாது, ஒரு இனத்தின் மரபுரிமைகளை மாற்றியமைப்பதாக இருக்கக் கூடாது. ஆனால் இன்றைய நிலைமையில் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படுகின்ற தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் இதன்படி நடப்பதாக தெரியவில்லை என்பதே தமிழ் மக்களின் உறுதியான நிலைப்பாடு. எனவேதான் கடந்த 24.03.2021 அன்று உருத்திரபுரம் சிவன் கோவிலுக்கு சென்ற தொல்லியல் திணைக்கள அதிகாரிகளை பொது மக்கள் எதிர்த்து நின்று திருப்பி அனுப்பினார்கள்.

இனங்களுக்கிடையே நீண்ட யுத்தம் ஒன்று இடம்பெற்று அது முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அரச இயந்திரங்களின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியமாக காணப்படுகிறது. நாட்டில் நிலையான அபிவிருத்தியையும், இனங்களுக்கிடையேயான ஐக்கியத்தையும் ஏற்படுத்தி நிலைத்திருக்கக் கூடிய சமாதானத்தை எட்ட வேண்டுமானால் இவை அவசியமாகும். ஆனால் இடம்பெறுகின்ற சம்பவங்கள் இவற்றுக்கு மாறாக காணப்படுகின்றன. இனங்களுக்கிடையேயான இடைவெளியை அதிகரிக்கச் செய்யும் செயற்பாடுகளே அதிகரித்துச் செல்கிறது. வாக்கு அரசியலில் இனவாதம் அதிக வாக்குகளை பெற்றுத் தருகின்ற நல்ல முதலீடாக சிங்கள, தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு இருக்கின்றமை. இதன் விளைவே உருத்திரபுரீஸ்வர தொல்லியல் அகழ்வாராய்ச்சியும்.

# அவள் அம்மாவாகிறாள்...

அத்தியாயம் 01



யாழ் சத்யா

> “வேலை முடிந்தவுடன் நேராக வீட்டுக்கு வாங்கோ.. ஒரு சர்ப்ரைஸ் இருக்கு..” ஒரு குறுஞ்செய்தியை அனுப்பி விட்டு சமையலறைக்குள் புகுந்தாள். ஆனந்த்துக்குப் பிடித்த விதமாகப் புட்டும் இறைச்சிப் பிரட்டலும் செய்தவள் ஏதாவது இனிப்பு வகை செய்ய வேண்டும் என்ற உந்துதல் எழ உடனடி நிவாரணியான கேசரியையும் கிண்டி வைத்தாள்.”

தாரணியின் முகத்தில் மகிழ்ச்சியின் பூரிப்பு. வயிற்றுக்குள்ளே பல நூறு பட்டாம் பூச்சிகள் பறந்து கொண்டிருந்தன. யாரிடமாவது பகிர்ந்து கொள்ளாவிட்டால் மண்டை வெடித்து விடும் போல ஒரு உணர்வு. ஆனால் கணவனிடம் கூறாமல் வேறு யாரிடமும் கூறவும் மனம் விளையவில்லை.

தாரணி அந்நகரத்தின் பிரபல பாடசாலை ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றுகிறாள். பெற்றோர்கள் நிச்சயித்துச் செய்து வைத்த திருமணம். கணவன் ஆனந்தரூபன் வங்கி ஒன்றில் காசாளராகப் பணி புரிகிறான். தாரணிக்கு சீதனமாகக் கொடுத்த வீட்டில் தான் இருவரும் தனிக்குடித்தனம் நடத்துகிறார்கள்.

தாரணியின் விதவைத் தாயும் அவள் தம்பியும் அருகில் இன்னொரு வீட்டில் வசிக்கின்றார்கள். கூப்பிடு தூரத்தில் வீடு இருந்தாலும் கணவனிடம் தான் முதலில் சொல்ல வேண்டும் என்று எண்ணியவளாய் தாயை அழைக்காது, வீட்டுக்கும் வாயிலுக்குமாக இப்போது பத்துத் தடவையாவது நடந்திருப்பாள்.

திருமணமாகி ஆறு மாதங்களாகி விட்டது. இதற்குள் கணவன் குணம் கொஞ்சம் புரிபடத் தொடங்கியதால் அவன் வேலை நேரத்தில் தொலைபேசியில் அழைக்கவும் தாரணிக்குப் பயமாக இருந்தது.

“காசோடு புழங்கும் வேலை.. சும்மா சும்மா எடுத்துக் கரைச்சல் குடுக்காதை தாரு.. ஏதும் பிழை வந்தால் பிறகு நான் தானே போட்டுக் கட்ட வேணும்..”

திருமணம் நிச்சயித்திருந்த நாட்களிலேயே கூறி விட்டான் ஆனந்த். இருந்தாலும் கூட இன்று அவளால் பொறுமையாக இருக்க முடியவில்லை.

“வேலை முடிந்தவுடன் நேராக வீட்டுக்கு வாங்கோ.. ஒரு சர்ப்ரைஸ் இருக்கு..”

ஒரு குறுஞ்செய்தியை அனுப்பி விட்டு சமையலறைக்குள் புகுந்தாள். ஆனந்த்துக்குப் பிடித்த விதமாகப் புட்டும் இறைச்சிப் பிரட்டலும் செய்தவள் ஏதாவது இனிப்பு வகை செய்ய வேண்டும் என்ற உந்துதல் எழ உடனடி நிவாரணியான கேசரியையும் கிண்டி வைத்தாள்.

அடிக்கடி வரவேற்பறையில் மாட்டியிருந்த கடிகாரத்தையும் பார்க்கத் தவறவில்லை. ஆனால் பாவம் ஏழு மணியாகியும் ஆனந்த் வந்தபாடில்லை.

“இந்த நேரத்துக்கு வேலை முடிஞ்சிருக்கும் தானே. இல்லாட்டிக் கணக்கேதும் பிழைச்சிருக்குமோ.. ஒரு வேளை கிரிக்கெட் விளையாடப் போயிருப்பாரோ.. நல்லா இருட்டிட்டுது.. கோயிலடியில பொடியளைச் சந்திக்கத்தான் போயிருப்பார் என்று நினைக்கிறன்.”

சமையல் முடித்துப் பாத்திரம் கழுவி வைத்து, வீடுவாசல் கூட்டிப் பூசை அறை விளக்கேற்றிய பிறகும் ஆனந்தைக் காணாமல் அவள் மனதில் பல்வேறு எண்ணங்கள். அடுத்த நாள் கொடுக்க வேண்டிய பாடசாலை மாணவர்களின் பரீட்சைத் தாள்கள் மேசையில் குவிந்து கிடந்தன. கடைமை உந்த அதை எடுத்துத் திருத்த ஆரம்பித்தவளால் மூன்று பக்கம் கூடக் கருத்தொருமித்துப் பார்வையிட முடியவில்லை.

இது வேலைக்காகாது என்று புரிந்தவள் அவற்றை மூடி வைத்து விட்டுத் தொலைக்காட்சியை உய்ப்பித்தாள். ஏதோ ஒரு சீரியலில் மாமியாருக்கும் மருமகளுக்கும் வாக்குவாதம் போய்க் கொண்டிருந்தது. சலிப்போடு கண்ணை அதிலே ஓட்டினாலும் மனசு முழுக்க ஆனந்த்தின் வருகைக்காகப் பரபரத்துக் கொண்டிருந்தது.

நேரம் ஒன்பதைக் கடக்கவும் தொலைக்காட்சியிலிருந்த அனைத்து சேனல்களையும் மாற்றி முடித்தவளுக்கு கொட்டாவி தான் வெளியேறியது. அதற்கு மேல் பொறுமை இழந்தவளாய் தொலைபேசியை எடுத்தாள். ஆனந்துக்கு அழைப்பெடுக்க எண்ணியவள், பிறகு அந்த எண்ணத்தை மாற்றித் தனது முகப் புத்தகத்திற்குள் நுழைந்தாள்.

முதலில் வந்து நின்றது ஆனந்த்தின் பதிவு தான். பிரபல உணவகம் ஒன்றில் நண்பர்களோடு சேர்ந்து உணவு உண்டு கொண்டிருப்பதாகப் புகைப்படத்தோடு பதிவிட்டிருந்தான்.

“கெதியா வீட்ட வாங்கோ என்று சொல்லியும் உவருக்கு வரேலாது. சாப்பிடுகினம் என்றால் இனி என்ன தண்ணியில குளிச்சிட்டு வீடு வர பன்னிரெண்டு தாண்டும். இனியேன் நான் காத்துக் கொண்டிருப்பான்?”

எண்ணமிட்டவள் மனதில் அது வரை இருந்த உற்சாகம் அப்படியே வடிந்தது. வயிற்றுக்குள் பறந்த பட்டாம் பூச்சிகள் எல்லாம் ஓய்வெடுக்கச் சென்றிருக்க இப்போது பசிதான், பெருங்குடல், சிறுகுடலை உண்ணப் போகிறேன் என்று கட்டியம் கூறிக் கொண்டிருந்தது.

சமையலறைக்குச் சென்றவள் தனக்குத் தேவையான உணவைப் போட்டுச் சாப்பிட்டு மீதி உணவைக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்தாள். சமையலறையை ஒதுக்கி விட்டு வந்து மறுபடியும் பரீட்சைத் தாள்களை எடுத்துத் திருத்த ஆரம்பித்தாள். இப்போது கவனம் வேலையில் ஒன்றியிருந்தது. ஆனந்தின் மோட்டார் சைக்கிள் வந்த சத்தமோ, அவன் கதவைத் திறந்து வீட்டினுள்ளே வந்ததோ தெரியாத அளவுக்கு வேலையில் மூழ்கியிருந்தாள்.

இரவுடை மாற்றி விட்டு அவளிருந்த இடத்துக்கு வந்தவன்,

“குமரன்ட பேர்த்டே இண்டைக்கு.. அதுதான் பார்ட்டி என்று கூப்பிட்டவன் போய்ட்டு வந்தனான்..”

“சரிப்பா..”

அமைதியாகக் கூறி விட்டு வேலையைத் தொடர்ந்தாள். இன்னும் இரண்டு பேரினுடையதுதான் மீதி இருந்தது. அதையும் முடித்து விட்டால் நாளைக்கே மாணவர்களிடம் கொடுத்து விடலாம். அவள் சிந்தனை அதில்த்தான் நின்றது. மாலையிலிருந்து கணவனைக் காணத் துடித்த உணர்வுகள் எல்லாம் அடங்கிப் போயிருந்தது.

அருகில் நின்ற கணவனிடமிருந்து எழுந்த மதுவாடை அவன் என்ன நிலையில் வந்திருக்கிறான் என்று உணர்த்த பெரும் ஆயாசம் தாரணிக்குள்.

பேனையை மூடி வைத்து விட்டு எழுந்தவள்,

“உங்களுக்கு எத்தினை தரமப்பா சொல்லுறது.. குடிச்சுப் போட்டு மோட்டர் சைக்கிளை ஓடிக் கொண்டு வராதையுங்கோ என்று..”

“தொடங்கிட்டீயா.. வீட்டுக்கு வந்தாலே மனுசருக்கு நிம்மதி இல்லை.. எப்ப பாரு எதுக்காச்சும் நை நை என்றபடிதான். இப்ப பத்து வருசமா பைக் ஓடுறன். எனக்கு ஓடத் தெரியாதோ. அது சரி. ஏன் வேளைக்கு வீட்ட வரச் சொன்னனீ? என்ன சர்ப்ரைஸ்..?”

“ஓ.. அப்ப நான் போட்ட மெசேஜ் பாத்து இருக்கிறீங்கள். ஆனா ஒரு ஹோல் பண்ணி வரப் பிந்தும் என்று சொல்லவும் தெரியாது. என்ன சர்ப்பிரைஸ் என்று கேட்கவும் தெரியாது.”

“நீ ஆணியே புடுங்க வேணாம்.. நான் படுக்கப் போறன்..”

விடுவிடுவென படுக்கையறைக்குச் சென்று கட்டிலில் விழுந்தான் ஆனந்தரூபன். சொல்லக் காத்திருந்த செய்தியையே மறந்து ஒரு விரக்தியோடும் இயலாமையோடும் அவனையே பார்த்திருந்தாள் தாரணி.

அவள் சொல்ல வந்த சேதி என்னவோ? சொல்வாளா?

(அவள் தொடர்வாள்...)

# கூட்டுத் துக்கத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மை. அந்நிய ஆக்கிரமிப்புக்களின்போது தமிழ் மக்கள் விரதம் இருந்த பின் வாழை இலைகளை சுருட்டி தமது கூரைகளில் செருகி வைப்பார்கள். ஏனென்றால் வாழை இலைகளை வைத்து அவர்கள் விரதமிருந்திருக்கிறார்கள் என்பது கண்டுபிடிக்கப்படும். அதனால் அவர்கள் தண்டிக்கப்படக்கூடும். அதைத் தவிர்ப்பதற்கு வாழை இலைகளை கிடுகு கூரைகளில் செருகி வைக்கும் ஒரு வழமை இருந்தது. அது இப்போதும் கிராமப்புறங்களில் விரத காலங்களில் பின்பற்றப்படுகிறது. தமது மத நம்பிக்கைகளை வெளிப்படையாக அனுஷ்டிக்க முடியாத ஒரு காலகட்டத்தில் தமிழ் மக்கள் அதை ரகசியமாகவும் மக்கள் மயப்பட்ட விதங்களிலும் அனுஷ்டித்த சில நூற்றாண்டுகளுக்கு முந்திய உதாரணம் அது. அதையே பின்பற்றலாம். ஆனால் அதற்கு நினைவுகூர்தலை ஆகக்கூடியபட்சம் மக்கள்மயப்படுத்த வேண்டும். அதை எப்படி செய்வது? யார் செய்வது? இதுதான் பிரச்சினை.



2009க்கு பின்னரான தமிழ் அரசியலில் நினைவுகூர்தலில் உள்ள அனைத்துலக பரிமாணங்களை விளங்கிக் கொண்டு அதை எப்படி மக்கள் மயப்படுத்தலாம், எப்படி அனைத்துலக மயப்படுத்தலாம் என்பவற்றுக்குரிய புதிய உபாயங்களை,உத்திகளைச் சிந்திக்க வேண்டும்.

ஒரு கத்தோலிக்க மதகுரு கூறுவதுபோல உணவை ஆயுதமாக பயன்படுத்திய ஒரு போர்க்களத்தில் உணவையே நினைவு கூர்தலுக்கான ஒரு கருவியாக எப்படி பயன்படுத்தலாம் என்று சிந்திக்க வேண்டும்.

ஆடி அமாவாசை,சித்திரா பௌர்ணமி போன்ற நாட்களை எவ்வாறு இந்துக்கள் அனுஷ்டிக்கிறார்களோ அனைத்து மரித்தோர் தினத்தை எவ்வாறு கிறிஸ்தவர்கள் அனுஷ்டிக்கிறார்களோ அவ்வாறே மே 18யும் ஒரு மக்கள் மயப்பட்ட அனுஷ்டானமாக மாற்றலாம். இதுதொடர்பில் கடந்த ஆண்டும் சிந்திக்கப்பட்டது. இது தொடர்பில் கடந்த ஆண்டும் நான் கட்டுரைகளை எழுதினேன். குறைந்தபட்சம் எல்லா ஆலயங்களிலும் ஒரே நேரத்தில் மணிகளை ஒலிக்கச் செய்யலாம் என்று கடந்த ஆண்டும் சிந்திக்கப்பட்டது. ஆனால் அதை மக்கள்மயப்படுத்த எந்த ஓர் அமைப்பும் இருக்கவில்லை. சில செயற்பாட்டாளர்களும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் மத நிறுவனங்களின் தலைவர்களை அணுகி ஒரு பொது நேரத்தில் ஆலயங்களில் மணிகளை ஒலிக்கலாமா? என்று முயற்சித்தார்கள். பெரும்பாலான மதத் தலைவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.யாழ். சர்வமதப்பேரவை அதுதொடர்பில் ஒரு அறிக்கையும் விட்டது.எனினும், மிகச்சில ஆலயங்களில்தான் சுட்டிகள் ஏற்றப்பட்டன. மணிகள் ஒலிக்கப்பட்டன. ஏனைய பெரும்பாலான ஆலயங்களில் மணிகள் மௌனமாக இருந்தன. ஒரு சுட்டி கூட ஏற்றப்படவில்லை. அந்நாட்களில் இரவு எட்டு மணிக்குப்பின் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது.

பரீட்சை காலங்களில் ஸ்பீக்கர்களை ஒலிக்கவிட்டு மாணவர்களைக் குழப்பும் ஆலயங்கள் இது விடயத்தில் தாமாக எதையும் சிந்தித்து முடிவெடுக்கும் நிலையில் இல்லை. அதேசமயம் மத அமைப்புகளும் தலையிட்டு இதை ஒழுங்குபடுத்தும் நிலையில் இல்லை. இப்போதுள்ள பொது ஏற்பாட்டுக் குழுவும் அதை எப்படி மக்கள் மயப்படுத்தலாம் என்று சிந்திப்பதாக தெரியவில்லை. கடந்த ஆண்டைப் போலன்றி இந்த ஆண்டாவது ஒரு பொதுவான நேரத்தில் ஆலயங்களில் மணிகளை ஒலிப்பதற்கும் சுடர்களை ஏற்றுவதற்கும் ஏதாவது ஏற்பாடுகள் உண்டா?

இது தொடர்பில் இப்பொழுதே முடிவு எடுக்கவேண்டும். இல்லையென்றால் ஒரு பெரும் தொற்றுநோய் காலத்தில் மீண்டும் ஒரு தடவை மக்கள் பயப்படாத ஒரு நினைவு கூர்தலுக்கான வாய்ப்புகளே அதிகம் உண்டு.

# சார்ள்ஸ் டார்வின் இன்றி 'பீகிள்ஸ் கப்பல்' பயணித்திருந்தால்

ச.சத்தியதேவன்


இங்கிலாந்தின் மேற்கு மிட்லேண்ட்ஸின் ஷ்ரூஸ்பரியில் பணக்கார மருத்துவரின் மகனாகப் பெப்ரவரி 12, 1809 அன்று பிறந்த சார்ள்ஸ் டார்வின் மருத்துவம், சட்டம் ஆகிய படிப்புகளைத் தொடரமுடியாமல் இறுதியாக இறையியலில் பட்டம் பெற்று கிராமப்புற மதகுருவாக வாழ்வதற்குத் தயாராக இருந்த நிலையில் எச்.எம்.எஸ் பீகிள்ஸ் (HMS Beagle) கடற்படைப் பரப்பாய்வுக் கப்பலின் (Naval survey Ship) தலைவரான ரொபேர்ட் பிட்ஸ்ரோயின் (Robert FitzRoy) அணுக்கத் தோழராய் உடனிருந்து பயணம் செய்யக் கிடைத்த வாய்ப்பினை மிகச்சரியாகப் பயன்படுத்தியதால் பரிணாமவியலின் தந்தையாக உருவாக முடிந்தது.

டார்வினின் இந்தக் கப்பல் பயண ஒழுங்குகளின் பின்புலம் இன்னும் சுவாரசியமானது. 26 வயது கப்பற் தலைவனான ரொபேர்ட் பிட்ஸ்ரோயுடன் பயணம் செய்வதற்கு ஏற்கனவே சம்மதித்திருந்தவர் வரமுடியாமற் போனதால் அந்த வாய்ப்பு 22 வயது டார்வினுக்கு கிடைத்தது. டார்வினின் மூக்கின் அமைப்பு ஏற்படுத்திய சவால்களை மீறி (ஏனெனில் பிட்ஸ்ரோய் அது டார்வின் பண்பு நலனின் ஆழத்தைக் குறித்து நிற்பதாய் நம்பினார்) பீகிள்ஸ் பயணத்தில் டார்வின் இடம்பெற, பைபிள் சார்ந்த இலக்கியங்களில் கொண்ட மோகத்திற்கு மத குரு பயிற்சி பெற்ற டார்வின் துணை உபயோகமாக இருக்குமென பீகிள்ஸ் கப்பற் தலைவன் எண்ணியது மற்றொரு காரணம்.

சார்ள்ஸ் டார்வின் தனது கோடை விடுமுறையை அனுபவித்துக்கொண்டிருந்த போது, அவரது நண்பரான பேராசிரியர் ஹென்ஸ்லோவிடம் இருந்து எச்.எம்.எஸ் பீகிள்ஸ் கப்பற் தலைவரின் தோழராக சேர்வதற்கான வாய்ப்பு அவருக்கு இருப்பதாக ஒரு கடிதம் வந்தது. மருத்துவரான டார்வினின் தந்தை, ரொபேர்ட் வேரிங் டார்வின், டார்வின் ஒரு பார்சனாக வருவதையே விரும்பினார். அதனால் பயணத்திற்கு அவர் அனுமதி கொடுக்க மறுத்திருந்தார். ஆனால் டார்வின் தனது மாமா ஜோசியா வெட்க்வூட்டின் உதவியுடன் தந்தையின் சம்மதத்தையும் பயணத்திற்கான நிதியுதவி உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் பெற்றுக்கொண்டார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இருந்த இயற்கையியல் நண்பர்களுடன் இருந்த தொடர்பினால் டார்வினிற்கும் இயற்கையியலில் ஆர்வம் ஏற்பட்டிருந்தது. தனக்கிருந்த ஆர்வத்தால் பயணத்தில் பல தரப்பட்ட தரவுகளையும் ஆதாரங்களையும் சேகரித்துக் கொண்டார். கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்திலிருந்த இயற்கையியல் நண்பர்களின் உதவியும் புலமை உலகத்துக்கான சிபாரிசுடனான அறிமுகமும் அவரை பீகிள்ஸ் பயணம் முடியுமுன்னரே ஓர் அறியப்பட்ட இயற்கையியலாளராக ஆக்கியது. 1831 தொடக்கம் 1836 வரையான பயணம் முடிந்து சொந்த இடம் திரும்பிய அவர் உடனடியாக 'பரிணாமம்' குறித்து எழுதவில்லை. தனது சொந்த குடும்ப விடயங்களில் கவனஞ் செலுத்தினார். அதன் பின்னர்பாறைகளிலும்கப்பல்களின் அடிப்பாகத்திலும் ஒட்டிக்கொள்ளும் சிப்பிகள் குறித்து விரிவான பெரிய நூலை எழுதி வெளியிட்டார். 1842 வரை தமது 'இயற்கைத் தேர்வுக் கோட்பாடு' தொடர்பில் டார்வின் எழுதியிருக்கவில்லை.

1858 இல் அவரது இளம் நண்பரான அல்பிரட் ரஸல் வலஸ் (Alfred Russel Wallace) இடமிருந்து வந்த கடிதம் பரிணாமக் கோட்பாட்டை தாமதம் செய்ய முடியாதென்பதை டார்வினுக்கு உணர்த்தியது. சக இயற்கையியலாளரான வலஸ் டார்வினுடன் பத்தாண்டுகளுக்கும் மேலாக கடிதத் தொடர்பில் இருந்தவர். தாம் சுவாரசியமானவை என நினைக்கும் விடயங்களை டார்வினிடம் கடிதங்களின் வழி பகிர்ந்து கொள்பவராக இருந்தார். அவ்வாறு அவர் 1858 இல் டார்வினுக்கு எழுதிய கடிதமொன்றில் 'On the Tendency of Varieties of Depart Indefinitely from the Original Type' (மூலவகையிலிருந்து,முடிவின்றி விலகிச் செல்கின்ற பல்வகைகளின் போக்கு) என்ற கட்டுரையின் நகலை அனுப்பியிருந்தார். இந்தக் கட்டுரையில் இருந்த கூறுகள் டார்வின் ஏற்கனவே எழுதி, அக்காலத்தைய புலமைத்துவ சூழலில் அபகீர்த்தியை ஏற்படுத்தக் கூடும் என்ற அச்சத்தால் வெளியிடாமல் ரகசியமாக வைத்திருந்த இயற்கைத் தேர்வுக் கோட்பாட்டின் பொதுவான முக்கிய கூறுகளை நம்பமுடியாதளவுக்கு ஒத்திருந்தன. தனது பல ஆண்டு கால கடும் உழைப்பு, முறையான சிந்தனை, கவனக் குவிப்பு ஆகியவற்றின் விளை பொருளான ஒரு விடயம் தமது ரசிகர் போன்ற இளம் நண்பரிடமிருந்து வந்தவுடன் தமது ஆய்வை வெளியிட முனைப்பு கொண்டார்.



இக்காலப் பகுதியில் டார்வினின் மகனது மரணமும் நிகழ்ந்திருந்தது. டார்வின் தனதும் வலஸினதும் கருத்துக்களைச் சேர்த்து ஒரு கூட்டுக் கட்டுரையை தனது நண்பர்கள் மூலம் லின்னேயியக் விஞ்ஞானக் கழகத்தின் கூட்டத்தில் 1858 இல் உலகின் பார்வைக்கு வெளியிட ஏற்பாடுகளைச் செய்ததன் மூலம் சிக்கல் நிறைந்த இவ்விடயத்தைச் சுமூகமாகக் கையாண்டு கொண்டார். இதன்போது டார்வினோ அல்லது வலஸோ அக்கூட்டத்திற்கு வந்திருக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் தொலை தூரத்திலிருந்த வலஸ் இவற்றை நெடுங்காலங்கள் கழித்தே அறிய முடிந்தது. ஆயினும் டார்வினிடம் மதிப்பும் மிகுந்த பற்றுதலும் கொண்ட அல்பேர்ட் வலஸ் தனது கருத்துக்கள் டார்வினுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டதில் மகிழ்வடைந்ததுடன், மிகுந்த சமநிலையுடன் தனது சொந்த அறிவுத்திறன் மூலம் கண்டடைந்த ஒரு கோட்பாடு டார்வினுடையதாக மாறுவதற்கு விட்டுக் கொடுத்தார். அவரே அதை பின்நாட்களில் முழுவதும் 'டார்வினியம்' என அழைத்தார்.

டார்வின் தனது கைப்பிரதியை ஒரு புத்தகமாக விரித்து எழுதுவதில் உடனடியாகவே ஈடுபட்டார். 'An Abstract of an Essay on the Origin of Species and Varieties through natural Selection' (இயற்கைத் தேர்வு மூலம் உயிரினங்கள் மற்றும் பல்வகைகளின் தோற்றம் குறித்த சுருக்கமான கட்டுரை) என தற்காலிக தலைப்பிட்டு அவரது பதிப்பாளர் ஜான் முர்ரேயிடம் கொடுத்தார். மிகக்குறைந்த அளவு பிரதிகள் மட்டுமே அச்சிடத் தகுந்த தலைப்பு எனப் பதிப்பாளர் கருதிய அந்தப் புத்தகம் இறுதியாக 1859 நவம்பரில் 'On the Origin of Species by Means of Natural Selection, or the Preservation of Favored Races in the struggle for life' (இயற்கைத் தேர்வு மூலம் உயிரினங்களின் தோற்றம், அல்லது வாழ்வுக்கான போட்டியின் தக்கன பிழைத்தல்) என்ற தலைப்பில் 1250 பிரதிகள் வெளியிடப்பட்டன. வெளியிடப்பட்ட அன்றே அனைத்துப் பிரதிகளும் விற்றுத் தீர்ந்து விட்டதாக நம்பப்படுகிறது. அன்றிலிருந்து ஒருபோதுமே அந்த நூல் விற்பனைக்கில்லாமல் இருந்தததில்லை.

Origin of Species வெளிவந்தவுடன் தன்னுடைய சொந்தக் கோட்பாட்டுக்காக டார்வின் புகழ்பெறுவதாக Gardener's Chronicle இதழில் பட்ரிக் மத்யூ (Patrick Matthew) என்னும் ஸ்கொட்லாந்து தோட்டக்காரர் கடிதமெழுதினார். உண்மையில் பட்ரிக் மத்யூ 'உயிரினங்களின் தோற்றம்" வெளிவருதற்கு 20 ஆண்டுகள் முன்பே தனது Naval Timber and Aboriculture (கப்பல் கட்டும் மரமும் முதுமக்கள் பண்பாடும்) என்ற நூலில் 'இயற்கைத் தேர்வுக் கோட்பாட்டை' சுருக்கமாக முன்வைத்திருந்தார். Naval Timber and Aboriculture புத்தகத்தின் பின்னிணைப்பாகப் பதிப்பிக்கப்பட்ட சுருக்கமான அக்கோட்பாட்டை டார்வின் மட்டுமின்றி ஒட்டுமொத்த உலகமும் கவனிக்கத் தவறியிருந்தது. தான் அதை அறிந்திருக்கவில்லை என்பதை தெரிவித்த டார்வின் தயக்கமின்றி அதற்காக மன்னிப்பும் கோரினார். பிற்காலங்களில் தமது கோட்பாட்டை மேலும் செம்மையாக்கி ஆதாரங்கள் மற்றும் தர்க்க நியாயங்களுடன் முன்வைத்ததால் பரிணாமவியலின் தந்தையாக சார்ல்ஸ் டார்வின் மாறினார்.

*****

மக்களில் பெரும்பான்மையானோர் தம் வாழ்வின் கடந்த காலத்தில் முக்கிய தருணத்தின் சூழமைவுகள் வேறொன்றாக மாறியிருந்தால், அவர்களின் வாழ்க்கை இன்று என்னவாக மாறியிருக்கும் என்று கற்பனை செய்கிறார்கள். எடுத்துக்காட்டாக, மிகவும் திருப்திகரமான வேலையைப் தேடிக்கொள்வது அல்லது ஒருவரின் வாழ்க்கைத் துணையைச் சந்தித்தது அல்லது கட்டுக்கடங்காத கோபத்தால் தீய விளைவுகளைச் சந்தித்தது. இப்படியாக பல, சில நேரங்களில், இந்த சிறிய முக்கிய தருணங்கள் வாழ்க்கையில் எல்லாவற்றையும், நல்ல விதமாகவோ அல்லது மோசமானதாகவோ மாற்றியிருக்கும், வரலாற்றிலும் இவ்வகையான சாத்தியங்கள் உள்ளன. சில வரலாற்றாசிரியர்கள் வரலாற்றை மிகச் சரியாகப் புரிந்து கொள்ள, இவ்வாறான 'நிகர் ஊகமெய் மாற்று வரலாற்று' (Counterfactual History) அணுகுமுறையை ஒரு கருவியாக பயன்படுத்துகின்றனர்.

வரலாறு என்ற விடயப்பரப்பிற்குள் கற்பனை என்பது அந்நியமானதாகவே கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆனால் சமூகவெளியில் கற்பனைக் கதைகளே வரலாறாக நிறைந்திருக்கின்றன. 'வரலாறு' என்று கருதப்படுபவையே மெய் ஆதாரங்களை பகுப்பாய்வு முறையில் ஆய்வுக்குட்படுத்தி அவற்றுக்கு வலுச் சேர்க்கும் கற்பனைகளும் ஊகங்களும் கலந்த மெய்மைச் சூழ்நிலைக்காட்சிகளால் உருவாக்கப்படுவது என்ற கருத்து இன்று பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இப்படியாக வரலாற்றுக்கும் கற்பனைக்குமான உறவு மிகவும் சிக்கல் நிறைந்தது. இந்நிலையில் மெய் ஆதாரங்களின் வழி நின்று நிகர் ஊகமெய்யை உருவாக்குவதனூடாக மாற்று வரலாற்றை முன்வைக்கும் 'நிகர் ஊகமெய் மாற்று வரலாற்று' (Counterfactural History) அணுகுமுறை வரலாற்று எழுத்தியலில் பலத்த விமர்சனங்களை சந்திக்கிறது. ஆயினும் ஒரு சூழ்நிலை உண்மையில் எப்படி இருந்தது' என்பதைப் புரிந்து கொள்ள, 'அச்சூழ்நிலை உண்மையில் எப்படி இல்லை' என்பதைப் புரிந்து கொண்டு பகுப்பாய்வு செய்வது பயனுடையது என்பதும், மேலும் இது எந்தவொரு வரலாற்று அனுமானத்தை சரி பார்க்கவும் பயனுள்ள பகுப்பாய்வுக் கருவிகளை வழங்கி உதவுகிறது என்பதும் இவ்வரலாற்று அணுகுமுறையை ஆதரிப்பவர்களின் வாதமாகும்.

அதற்கமைய சார்ள்ஸ் டார்வின் பீகிள்சில் பயணம் செய்யாமல் விட்டிருந்து, அதனால் அவருக்குச் சாத்தியமான ஆதாரங்களையும் தரவுகளையும் சேகரிக்கும் வாய்ப்புக் கிடைக்காமல் போயிருந்தாலும் கூட இயற்கைத் தேர்வின் மூலமான பரிணாமக் கோட்பாட்டை நாங்கள் நம்பியிருப்போம். அல்பிரட் ரஸல் வலஸ் அல்லது மற்றொரு விஞ்ஞானி பரிணாம வளர்ச்சி குறித்த கண்டுபிடிப்பை வெளியிட்டிருப்பார். அல்லது காலந்தாழ்த்தியாவது பட்ரிக் மத்யூவின் சுருக்க ஆய்வு கவனத்திற்கு வந்திருக்கும். விஞ்ஞான அறிவு ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு முன்னேறியதும், கண்டுபிடிப்புகள் தவிர்க்க முடியாதவை என்ற கருத்து இங்கு முக்கியத்துவமுடையது. டார்வின் இல்லாதிருந்தாலும் விஞ்ஞான சமூகம் இந்தக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டிருக்கும் என்பது கிட்டத்தட்ட உறுதியானது. ஆனால் அதற்கு எவ்வளவு காலம் ஆகியிருக்கும் என்பதை உறுதியாகக் கூறமுடியாது. ■

# எழுத்தின் இயங்கியல்

சமூகத்தின் எந்தவொரு வெளிப்பாட்டுக்கும் அல்லது செயலுக்கும் காரணம் கற்பிக்கப்படுகிறது. தன்னிச்சையான நிகழ்வுக்கும் செயற்பாட்டுக்கும் வாய்ப்பிருக்கிறதா? என்கிற விவாதம் முக்கியமானது தான். ஆயினும், எமது உருவாக்கப்பட்ட மனமும் பிரக்ஞையும் காரண காரியத்தின் அடிப்படைகளால் சலனப்பட்டுக் கொண்டிருக்கும் வார்ப்புருக்களை தொடர்ந்து புதுப்பிக்கவல்லன. அந்தக் காரண மனத்தின் பின்னே கருத்தின் உள் வடிவம் ஒன்று எப்போதும் கலந்தேயிருக்கும். ஒவ்வொரு வெளிப்பாட்டுக்குமான கருத்தின் உள் வடிவத்தால் ஏற்படும் புறவயமாக்கல் (exteriorizations) என்பது, குறித்த வெளிப்பாட்டையும் நிகழ்வையும் தீர்மானிப்பதாக அமைகிறது. அந்த வகையில் இவை சுயமான நிலைப்பாட்டில் உள்ளவை அல்ல, ஒரு கருத்தின் மீது படர்ந்து அதன் தயவில் நிற்பவை.

இக்கருத்தின் தயவு என்பது, மக்களின் சமூக நீதி, பண்பாடு, வழக்காறு, நியமம், சமூக அடுக்களவு சார் கருத்துகள், சமயம் எனவும் கண்டடையலாம். இன்னொரு பக்கமாக, அறிவு பூர்வமாகத் தேடி கண்டடையும் கருத்து வடிவமாக அதன் பின்னாலான சித்தாந்தமாகவும் இனங்காணலாம். இரண்டு வகையான கருத்தியல்களின் பிரதான வேறுபாடு, ஒரு தொகுதி மக்களின் பிரதிநிதித்துவ கருத்தாக அமைவதுதான். குறிப்பாக தொன்றுதொட்டு கடைபிடித்து வருகின்ற சமூக நீதிசார், வாழ்வியல்சார் கருத்துகள் குறித்த இனத்தின், சாதியின், பாலினத்தின், மதத்தின் திரட்டிய வடிவமாக அமைந்திருக்கிறது. அந்த வகையில் அங்கிருந்து வெளிப்படுகின்ற ஒரு வெளிப்பாட்டு வடிவம் அல்லது நிகழ்வு, கருத்துகள் பிரதிநிதித்துவத்தை வெளிப்படுத்துவதோடு இது உங்களுக்கானது, உங்களுக்காக நான் சொல்கிறேன் என்கிற அதிகாரப்பாத்திரத்தை அளிக்கவல்லது, அதிகாரப் படிநிலையை பேணிக்கொள்கிறது.

ஒரு கருத்துருவ வடிவம் மாறா நிலையியல் தன்மையைப் பேணிக்கொள்வது எப்போதும் அபாயமானது. அது குழு மனப்பான்மையை, சாதி மனப்பான்மையை, இன மனப்பான்மையை, பால் மனப்பான்மையை விரித்துக்கொள்ளும் மத பீடமாக உருக்கொள்ளவல்லது.

பொதுவாக மக்களின் வரலாற்றுக் குறிப்பாக கருத்துருவம் இருப்பதென்பது அதிகாரத்தின் முரண்நிலையாகவே அமையக்கூடியது, மன்னராட்சி, சர்வாதிகாரம்,குரு சிஷ்ய பாத்திரம் என்பன அன்று தொடக்கம் இன்று வரையான அரசியல், பொருளாதார, கல்வி முறைமைகளும் இந்த முரண்நிலை வடிவத்தை மெருகூட்டி பேணிக் கொள்கின்றன. இங்கு இரண்டு விடயங்கள் முக்கியமாக கவனிக்கத்தக்கன.

1) பொதுப்புத்தி
2) பொது அடக்கு முறை .

பொதுப்புத்தி என்பது இந்து, தமிழன், பெண் என்கிற இருப்பு நிலைசார் கருத்துக்களை எனக்கும் உனக்கும் அவனு(ளு)க்கும் பொதுவானதாக உணர்கின்ற நிலை. பொதுப்புத்தி, இன, மத,பால், அரசியல் சித்தாந்த கருத்துக்களால் உயிர்ப்பூட்டப்பட்டது.

பொதுவாக கருத்துருவம் என்பதையே பொதுப்புத்தி சார்ந்த நிலையில் வைத்து அடையாளங்காண முடியும். மார்க்சும் ஏங்கெல்சும் கருத்துருவம் என்பது



## கருத்துருவமும் பிரக்ஞையும் 1

தவறான பிரக்ஞை என்கின்றார்கள். ஓர் அமைப்பை உருவாக்கியவர்கள் அதனைக் காப்பதற்காக, தங்கள் நலனைக் காப்பதற்காக உருவாக்கிய கருத்துக்கள் என்பது மார்க்சினதும் ஏங்கெல்சினதும் கருத்து. சுரண்டப்படும் தொழிலாளி தன்னிலை உணராது அமைப்பை ஆதரிக்கும் நிலையிது. அமைப்புக்கு எதிரான போராட்டத்துடன் தன்னை ஈடுபடுத்தாது வெளியில் நிற்கும் தன்மை.

இதை நாம் பொதுப்புத்தியுடன் சேர்த்து அடையாளம் காண முடியும். இன்று எம்மத்தியில் நிகழ்கின்ற அரசியல் மற்றும் விழிப்புணர்வுப் போராட்டங்களில் நாம் பெருமளவானோர் வெறும் பார்ப்போராக இருக்கிறோம். பொதுப்புத்தியின் வடிவம் அது தான். இது அதிகாரத்தை பாதுகாக்கவல்லது. பொது அடக்குமுறை என்பது அடிப்படையில் இந்து மதத்தின் விதிகளுக்கூடாக கண்டடையக் கூடியது. அதிகமாக இந்திய சமூகங்களில் இதன் விளைவுகளைக் கண்டு கொள்ளலாம். மதத்தின் பேரிலான அனைத்து அடக்குமுறைகளையும் நாம் அறிந்து இருக்கிறோம் . வழிபாட்டு முறை ,சாதி ரீதியான அடக்கு முறை, தூய்மை சார்ந்த எண்ணக் கருக்கள், பெண்களின் தீட்டுத் தொடர்பானவை, திருமணம் மற்றும் சுமங்கலி, அமங்கலி போன்ற கருத்துருவங்கள் எனப் பல அடையாளங்களுடன் கூடியவை.

இதே போன்று தான் அரசியல் செயன் முறைகளிலும் நாம் இனங்காணக்கூடியவை. இன அடிப்படையிலான தேசிய அரசியல் கருத்து வடிவங்கள், குழு அரசியல் சித்தாந்தங்கள், பாசிச , கொடுங்கோன்மை சிந்தனைகள் மற்றும் குழும அரசியல் வடிவங்கள் என்பன கவனித்துப் பார்க்கத்தக்கன.

பகுத்தறிவற்ற அதிகார வடிவங்களும் அதனை ஏற்றுக்கொள்ளுகின்ற பொதுப் புத்தி மனோபாவங்களும் இவ்வகையான கருத்தியல் அமைப்பை நீடிக்கவல்லன. குறிப்பாக போதனை முறையிலமைந்த கருத்துருவ வடிவங்களை ஏற்கவும் பயிலவும் நம்பவும் பழக்கப்பட்டிருக்கிறோம். எமது வாழ்க்கை முறையும் கல்வி முறையும் அவ்வாறான போதனை முறைகளிலாலானதே. அவை அறிதல் முறையிலானவையல்ல. அதனாலேயே எமக்கான கருத்துருவங்கள். பொதுபுத்தி சார் வடிவங்களாகவும் பொது அடக்குமுறை நிறைந்த வெளிப்பாடுகளாகவும் தொடர்ந்து உருப் பெற்று வருகின்றன.

ஒவ்வொரு தனியனும் தனக்கான கருத்துருவ தளங்களை மூன்று தளங்களில் வைத்திருக்க முடியும்.

i. பொதுப்புத்தி சார் கருத்தியல் தளம் .
ii. சுய பிரக்ஞை சார்ந்த தனக்கான கருத்தியல் தளம்
iii. இரண்டும் சேர்ந்தது.

இரண்டும் சேர்ந்த கருத்துருவ தளம் என்பது ஒரு தனியனுக்கு இருப்பது என்பது அவனு(ளு)டைய சுய பிரக்ஞையை மறுப்பதாகவே அமைய முடியும் .

இந்த அடிப்படையில் இருந்து ஒரு கலை வடிவத்திற்கும் இடையிலான தொடர்பை நாம் உணர்கிறோம். ஒரு கலைப்படைப்பு ஒரு தனியனுக்கு எதனை கண்டடைய வைக்கிறதோ அதனைக் கருத்துருவம் எனக் கூறமுடியும். குறித்த கலைப்படைப்பு ஒரு காலப்பகுதியின் ஒரு நிலத்தின், சமூகத்தின் எண்ணங்களிலாலான கருத்துருவத் தொகுப்புக்களைக் கொண்டது.

அது ஒரு தனியனின் (கலையை படைப்பவன்) கருத்துருவமாகவோ அல்லது அந்த தனியனின் குழு சார்ந்த கூட்டு கருத்துருவ தொகுதியாகவோ அமைய முடியும்.

ஒரு வகையில் கலைப் படைப்புக்கள் கருத்துருவங்களின் உற்பத்தி மையங்களாக நாம் உணரலாம். ஒரு தனியனிடம் சென்றடையும் கருத்துருவ வடிவம் என்பது தூய கருத்தியல் தொகுப்பாக இருப்பதற்கான சாத்தியம் எப்போதும் இருக்காது.

அநேக கலைப்படைப்பை உருவாக்குபவனின் சுய பிரக்ஞை சார் கருத்துருவ தளத்துடன் அவனின் சமூக இருப்பு சார் தளமும் இணைந்து கலைப் படைப்பின் அமைப்பு கொண்டு இருக்கக்கூடிய வெளிப்படுத்தும் கால , தள அமைவுக்கேற்ற கருத்துருவ வடிவத்தை ஒரு தனியனுக்கு கொண்டு வருகிறது. தனியன் தனது சுய அறிதல் (self recognition) கொண்ட பிரக்ஞையுடன் தான் ஊடாடும் கலைப்படைப்புக்கான கருத்தியல் தளத்தை கண்டடைகின்றான். இதிலிருந்து கலைக்கும் யதார்த்தத்திற்கும் கருத்துருவத்திற்குமிடையிலான வெளிகளை நாம் உணர்ந்து கொள்கிறோம். இத்தகைய புரிதல் என்பது நாம் கலையை ஒரு இலக்கிய வடிவத்தை உணர்ந்து கொள்வதிலுள்ள அடிப்படை பிரச்சனையை தீர்ப்பதாக அமையக் கூடும்.

நெருப்பு ஏன் சுடுகிறது?

சுடக்கூடாது என்று அதற்கு யாரும்
ஏன் சொல்லித் தரவில்லை ?

கடல் உப்புக் கரிக்கிறது
மீன் ஏன் கரிப்பதில்லை?

தப்பு செய்தால் சாமி கண்ணைக் குத்தும்
சரி சாமி செய்வது தப்பில்லையா?

குழந்தைகள் பேசி பேசி
பெரியவர்கள் ஆகிறார்கள்.

(ரமேஷ்-பிரேம் ,உப்பு/ 78)

ந.மயூரரூபன்

---

## ஆழ் கவிதைகள்

### ஆசிரியமாகும் சிறுமி


பள்ளி சென்ற முதல் நாளன்றே
ஆசிரியராகிறாள் சிறுமி
வகுப்பறையில் ஆசிரியர் உதிர்த்தும்
விதம் விதமான சொற்களையும்
கண்களை கவரும் வர்ணங்களையும்
குறுக்கும் மறுக்குமான கோடுகளையும்
அச்சொட்டாக சேகரம் செய்து
புத்தகப் பைக்குள் அடுக்குகிறாள்.
பள்ளி கலைந்து
வீடு திரும்பிய கையோடு
தனது அறையை
உடன் வகுப்பறையாக்குகிறாள்.
பின்னர் தனது பிரியமான
பொம்மைகளை நிரையாக அமர்த்தி
பாடம் நடாத்துகிறாள்.
இரண்டு வகுப்பறைகளுக்குமிடையில்
வேறுபாடு நிலவாமலில்லை.
குளப்படி புரியும் மாணவர்களை
கடும் சொற்களால் வைகிறார் ஆசிரியர்.



பொம்மைகளுக்கு இதழ் பதிந்த
முத்தங்களை பரிசளித்து
அன்பை மட்டுமே போதிக்கிறாள் சிறுமி.
சிறுவர்களை விடவும் ஒப்புவிப்போர்
இங்கு யார்தான் உளர்.

### வாழ்வென்பது

எல்லாப் புன்னகையும்
மகிழ்ச்சிக்குரியதுமல்ல
எல்லாக் கண்ணீரும்
துயருக்குரியதுமல்ல.
கண்ணீரை புன்னகையும்
புன்னகையை கண்ணீருமாக
சமாளித்து பயணிக்கிறது காலம்
வாழ்வென்பது வேறொன்றுமில்லை
அது நிரந்தரத்திற்கும்
நிரந்தரமின்மைக்குமிடையில்
பின்னப்பட்டிருக்கிறது.
ஒளியும் இருளுமானதுதான்
நின் தலையில்
எழுதித் தீர்க்கப்பட்ட வாழ்வு.



சிக்மலிங்கம் றெஜினோல்ட்



## பாலையில் வாழ்வது எப்படி?

# யாழ்ப்பாணம் பாலையாகிறது...

"வலு கெதியில யாழ்ப்பாணம் பாலையாகி விடும்" என்று சில ஆண்டுகளாக எச்சரித்துக் கொண்டு வருகிறார்கள் சூழலியலாளர்கள். இது சீரியஸான உண்மையே. ஆனால், யார்தான் உண்மையை மதிக்கிறார்கள்! பாலையாகினால் என்ன? சோலை வரண்டால் என்ன? கிடைப்பது பொக்கிஷம். எடுப்பதையெல்லாம் அதற்குள் எடுத்துக் கொள்வோம் என்று பனைகளை வெட்டுகிறார்கள்; மணலை அகழ்கிறார்கள்; காடுகளை அழிக்கிறார்கள்; போதாக் குறைக்கு கடலோரங்களையும் களப்புக் கரைகளையும் கூடத் தங்கள் இஸ்டத்துக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். வளமான செம்மண் தோட்ட நிலங்களையெல்லாம் கடைகளுக்கும் குடியிருப்புகளுக்குமாக எடுத்துக் கொள்கிறார்கள். இப்படியெல்லாம் செய்து கொண்டே போனால் இந்தச் சின்னஞ் சிறிய யாழ்ப்பாணக் குடாநாடு பாலையாகாமல் வேறு எப்பிடியாகும்?

இதில் உண்மையும் வேடிக்கையும் ஒன்றுண்டு. இந்த அநியாயங்களையெல்லாம் செய்வது வேறு யாருமல்ல. நம்மவர்கள் தான். நமக்கும் இவர்களைப் பற்றித் தெரியும். நம்முடைய அயலில், ஊரில் உள்ளவர்களே இதையெல்லாம் செய்கிறார்கள். அல்லது அக்கம் பக்கத்து ஊர்களில் இருப்பவர்கள். இதெல்லாம் தவறென்று நமக்கும் தெரியும். நமக்கு மட்டுமல்ல, எல்லோருக்குமே தெரியும். இது எதிர்காலத்தில் உண்டாக்கப்போகும் பேராபத்தைப் பற்றியும் நமக்குத் தெரியும். அதைத் தான் சூழலியலாளர்கள் தொடக்கம் சமூக அக்கறையுள்ளோர் அனைவரும் எச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் இதைத் தடுப்பதற்கு யாருமே இல்லை. படித்தவர்களாக இருக்கிறோம். பலதையும் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். அதிகாரிகளாக, கல்விமான்களாக, துறை சார்ந்தோராகப் பலர் இருக்கிறார்கள். நமக்கான தேசத்தைப் பற்றிக் கனவு வேறு காண்கிறோம். ஊர்களில் கிராம முன்னேற்றச் சங்கம், சன சமூக நிலையம், விளையாட்டுக் கழகம், இளைஞர் கழகங்கள், மாதர் சங்கங்கள், ஆலய நிர்வாகங்கள், ஆன்மீக சபைகள் என ஏராளம் பொது அமைப்புகள் எல்லாம் இருக்கின்றன. இப்படியெல்லாம் இருக்கும்போது இந்தப் பகற் கொள்ளை நடக்கிறது.

மண்கும்பானில் தொடர்ந்து மணல் அகழ்ந்தால் மண்டைதீவு உட்பட அல்லைப்பிட்டி உள்ளிட்ட பிரதேசங்கள் எல்லாமே முற்றாகப் பாழடைந்து விடும் என்கிறார் புவியியற் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை. இதேநிலை தான் மணற்காட்டிலும். மணற்காட்டை இப்பொழுது போய்ப் பாருங்கள். அங்கே மணலுமில்லை. பனைகளும் கடலோரக் காடுகளுமில்லை. எல்லாமே பாழாகி, அந்த நில அமைப்பே கெட்டு விட்டது. இனி அந்தப் பிரதேசம் முழுவதும் உவராகி விடும். மணல் ஒன்றும் பெருகி நிரவுவதில்லை அல்லது மரம், செடியைப் போல வளர்வதில்லை. ஒரு அளவுக்கு மேல் மணலை அகழ்ந்தால் நிலப்படிகத்தின் தன்மையே மாறி விடும். அது சுற்றயலையே கெடுத்து விடும். இது விஞ்ஞான பூர்வமான உண்மை.

இப்படித்தான் குடாநாட்டின் களப்புக் காடுகளும் அழிக்கப்படுகின்றன. களப்புக் காடுகள் (அலையாத்திக் காடுகள்) அந்தக் களப்புகளில் உள்ள உயிரினங்களுக்குப் பாதுகாப்பும் அவற்றின் உயிர் வாழ்வுக்குமானது. இந்தக் களப்புகள்தான் நம்முடைய சூழலை உயிர்ப்புடன் - ஈரலிப்புத் தன்மையுடன் வைத்திருக்கின்றன. இந்தக் காடுகள் இயற்கை அழகு மட்டுமல்ல, இயற்கையின் வளமுமாகும். இவற்றை அழித்து விட்டால் களப்புகளின் தன்மையே மாறி வெறும் நீர் வெளியாகி விடும். காலப்போக்கில் அந்த நீர்வெளி சேற்றுப் பரப்பாகி நாற்றமெடுக்கத் தொடங்கி விடும். பிறகு களப்புகள் மட்டுமல்ல, அதை அண்மித்த பகுதிகளும் கெட்டு விடும்.

இதே நிலைதான் யாழ்ப்பாணத்தில் உள்ள பனைகளுக்கும் ஏற்பட்டுள்ளது. ஒரு காலம் பனையில் தங்கியிருந்த வாழ்க்கை இன்றில்லை. முன்பு பனையிலேயே யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை மையம் கொண்டிருந்தது. பெட்டி, கடகம், பாய், பட்டை, தூக்குப் பை, ஓலை, மட்டை, கிழங்கு, ஊமல், பனாட்டு, ஒடியல், புழுக்கொடியல், மரம், சலாகை என்று நூறுக்கு மேலான தேவைகளைப் பனை நிறைவேற்றியது. இப்பொழுது அது மாறி விட்டது. என்பதற்காக பனைகளை முற்றாகவே அழிக்கத் துணிந்து விட்டார்கள் எல்லோரும். ஆனால், "யாழ்ப்பாணத்தின் ஒரே காடு, மரங்களின் தோப்பு பனைகள்தான்" என்கிறார் தமிழகத்தைச் சேர்ந்த பனை விஞ்ஞானியான பா.மோ.செல்வராஜ். இந்தப் பனைகளை இழந்தால் நிச்சயமாக யாழ்ப்பாணம் பாலையாகி விடும்" என்று எச்சரிக்கிறார் அவர்.



அவர் சொல்வது உண்மையே. யாழ்ப்பாணத்தின் காடு மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தின் முகம், யாழ்ப்பாணத்தின் அடையாளம், யாழ்ப்பாணத்தின் வளம் எல்லாமே பனைதான். அந்தப் பனைக்குக் கேடு வரும் என்றால் அது யாழ்ப்பாணத்துக்கான கேடுதான்.

இப்பொழுதே யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் தண்ணீருக்குப் பெரிய பிரச்சினை. இருக்கின்ற நிலத்தடி நீரும் கெட்டு விட்டது. அதை எப்படிச் சீர்ப்படுத்துவது, மேம்படுத்துவது என்று யாருக்குமே தெரியவில்லை. ஏற்கனவே பல இடங்களில் நல்ல தண்ணீருக்குப் பெரிய பிரச்சினை. தீவுப்பகுதிகள், வடமராட்சி, வலிகாமம் மேற்கில் சில பகுதிகள், தென்மராட்சியில் சில பிரதேசங்களில் எல்லாம் நீர்ப் பிரச்சினை உண்டு.

இந்தத் தண்ணீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு - யாழ்ப்பாணத்துக்கு - எங்கே இருந்து தண்ணீரைக் கொண்டு வருவது என்று யாருக்குமே தெரியவில்லை. கிளிநொச்சியில் உள்ள இரணைமடுக் குளத்திலிருந்து தண்ணீரைக் கொண்டு வரலாம் என்று திட்டமிட்டார்கள். இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனைப் பெற்று 23000 மில்லியனில் குளத்தை விரிவாக்கிக் கட்டினார்கள். நீரின் கொள்ளளவு கூட்டப்பட்டது. ஆனாலும் அங்குள்ள விவசாயிகள் நீரைத் தர முடியாது என்று சொல்லி விட்டார்கள். விவசாயிகளுக்கு செடில் குத்தி உஷாரேத்தி ஆட விட்டிருக்கிறார்கள் சில அரசியல்வாதிகள். எனவே அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டு விட்டது. இதற்குப் பதிலாக ஒரு மாற்று வழியைக் கண்டு, மருதங்கேணி-தாளையடியிலிருந்து கடல் நீரைச் சுத்திகரித்து நன்னீர் விநியோகத்தைச் செய்யலாம் என்றொரு மாற்றுத்திட்டம் உருவாக்கப்பட்டது. அதுவும் நிறைவேறவில்லை. புதுக்காட்டுச் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் வரையில் பொருத்தப்பட்ட நீர்க்குழாய்களில் மூன்றாண்டுகளுக்கு மேலாக நிரம்பி வழிகிறது காற்று.

இனப்பிரச்சினையைத் தீர்த்தாலும் இந்தத் தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது போலிருக்கு என்கிறார் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன். யாழ்ப்பாணத்துக்கான தண்ணீரைப்பற்றிச் சிந்திப்பவர்களில் சிவச்சந்திரன் முக்கியமானவர்.

சிவச்சந்திரன் இன்னொன்றையும் சொல்கிறார். "யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிஞ்சியிருக்கும் ஒரேயொரு காடு இயக்கச்சி - பளைப் பிரதேசத்தில் உள்ள காடுதான். அதை என்ன பாடுபட்டாவது நாம் காப்பாற்ற வேண்டும். இல்லையென்றால் யாழ்ப்பாணம் பாலையாகி விடும்" என்று. இப்பொழுது அந்தக் காடும் அழிக்கப்படுகிறது. ஏறக்குறைய இனி அங்கே காடே இல்லை என்றாகி விட்டது. இதில் வனவளப் பிரிவுக்கும் நிலச் சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் அரச காணிகளில் உள்ள காடுகளே அதிகமாக அழிக்கப்படுகின்றன. ஏறக்குறைய 4000 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள காடுகள். இதைத் தடுத்து நிறுத்துவார் யாருமில்லை. உரிய தரப்புகள் என்று சொல்லப்படும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு, பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம், மக்கள் பிரதிநிதிகள் என்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் போன்ற எல்லாத் தரப்புகளுக்கும் இதைப்பற்றி எடுத்துச் சொல்லியும் எதுவும் நடக்கவில்லை. வேலியே பயிரை மேய்ந்தால் யார் தான் என்ன செய்ய முடியும்? காடழிப்பு, மணல் அகழ்வு, மரக்கடத்தல் போன்றவற்றில் பெரிய கைகளே சம்மந்தப்பட்டுள்ளன என்பது ஊரறிந்த சேதி. எனவேதான் நாமும் சொல்கிறோம், யாழ்ப்பாணம் பாலையாகிக் கொண்டிருக்கிறது என்று. இந்தப் பாலையில் சோலையைக் காண்பது எப்படி? பாலையில் வாழ்வை நடத்துவது எப்படி? நாம் வீடுகளையும் கோயில்களையும் கல்யாண மண்டபங்களையும் பென்னாம்பெரிய மாடங்களையும் பிரமாண்டமாகக் கட்டலாம். பாலையில் எப்படி வாழ்வது? பாலையின் அபாய மணிகள் நம்முடைய காதுகளில் கேட்கிறது. தயவு செய்க, செவி கொள்க!



# ஊருக்கை ஒரு கதை! - 11

## சவம் காத்த சண்டியன் சண்முகத்தான்

> கிழவியின்ரை சவத்தை சுடலையுக்கை கொண்டு போய், அடுக்கியிருந்த விறகிலை வைச்சு, வாய்க்கரிசி போடத் துவங்கிற நேரம் பத்து பன்னிரண்டு பேர் வரையிலை வந்து அந்தச் சுடலையிலை சவத்தை எரிக்க கூடாது எண்டு அட்டகாசம் பண்ணிச்சினம். வாய்நிறைய தூசணங்களும் கை நிறைய கொட்டன் கத்திகளும். சண்முகத்தார் அவையை எதிர்பாத்துக் காத்துக்கொண்டு நிண்டவரைப் போலை கத்தியும் கையுமாக முன்னோக்கிப் போனார்.

இராகன்

முந்தியெல்லாம் ஊருக்குள்ளை ஒரு செத்தவீடு நடந்தால் போதும் செத்தவீட்டு வேலை வெட்டியளைச் செய்யிறதுக்கு இளவட்டங்கள் முண்டியடித்து வந்து நிக்குங்கள். தோரணம் கட்டிறது துவக்கம் சவம் எரிக்கிறது வரைக்கும் எல்லா வேலையளையும் பொறுப்பெடுக்க இளம் பொடியள் வந்து நிற்பாங்கள். இண்டைக்கு அது குறைஞ்சு போச்சுத்தான். அப்ப எண்டாலும் சரி இப்ப எண்டாலும் சரி அந்த வேலையளுக்குப் பின்னாலை ஒரு 'முசுப்பாத்தியும்' இருக்கெண்டு எனக்கும் தெரியும் உங்களுக்கும் தெரியும் தானே!

இண்டைக்கு அந்த 'முசுப்பாத்தியள்' அளவுக்கு மிஞ்சிப்போச்சு. கோர்வை கோர்வையா வெடி கொழுத்திறது, 'கேஸ்' கணக்கிலை சோடா உடைக்கிறது, 'பாண்ட்' வாத்தியம் பிடிச்சு முழங்கித் தள்ளிறது எண்டு கனக்க இருக்கு. அதிலை தவிர்க்கேலாத ஒண்டுதான் சுடலைக்கு 'பரல்' அனுப்பிறது! பொதுவாக் கவனிச்சுப் பார்த்தியளேயெண்டால் தெரியும். சுடலை இருக்கிற இடத்துக்குப் பக்கத்திலை ஒரு கள்ளுத் தவறணையும் இருந்தே தீரும். அது ஏன் அப்பிடி? எண்டு கேட்டதுக்கு 'தவறணைக்குத் தவறாமல் போறவை கெதியா சுடலைக்கு போவினம் எண்ட வாழ்க்கைத் தத்துவத்தை விளங்க வைக்கத்தான்' எண்டு பதில் சொல்லினம். தத்துவம் எப்பிடியிருந்தாலும் சுடலைக்குப் பக்கத்திலை தவறணை இருக்கிறது 'பரல்' அனுப்பச் சுகமானது தானே எண்டு வைச்சுக்கொள்ளலாம். இன்னுமொரு தத்துவம் இருக்குதாம்! தவறணையும் சுடலையும் தானாம் 'சமரசம் உலாவிற' இடம்! அதுதானாம் பக்கத்திலை இருக்கு.

சமரசம் உலாவிற அந்த இரண்டு இடத்தோடையும் சம்மந்தப்பட்ட ஓராள்தான் 'சண்டியன் சண்முகத்தான்'. அந்த நேரத்திலை சவம் எரிக்கிறதிலை அவன்தான் மெயின் ஆள். சவம் எரிக்கிறது எண்டால் அவனை 'வெட்டியான்' எண்டு நினைச்சிடக்கூடாது. ஊருக்குள்ளை சாகிற எல்லாரின்ரை சவத்தையும் எரிக்கமாட்டான். தனக்கு மனசுக்கு பிடிச்சவையின்ரை சவத்தைத் தான் எரிப்பான். அவனுக்கு மனசுக்குப் பிடிச்சவை எண்டால் அவைக்கு சில 'குவாலிட்டி' இருக்க வேணும்! செத்தவன் பணக்காரனா இருக்கக்கூடாது! புகழுக்காய் பல்லிளிக்கிறவனா இருக்கக்கூடாது! மற்றவனை ஏமாத்துறவனா இருக்கக்கூடாது! எண்டெல்லாம் ஏராளம் குவாலிட்டி. இந்தக் குவாலிட்டி எல்லாம் பாத்து சவத்தை எரிக்கிற வழக்கத்துக்கு சண்டியன் சண்முகத்தான் வந்ததுக்கு பின்னாலை ஒரு கதையிருக்கு. அந்தக் கதைக்குப் பிறகுதான் சண்முகத்தான் எண்ட அவரின்ரை பேரோடை 'சண்டியன்' ஒட்டிக் கொண்டது. ஊரிலை அவரை 'சவம் காத்த சண்டியன் சண்முகத்தான்' எண்டும் சொல்லுவினம். சண்முகத்தாரின்ரை பேர்த்தியார் கிழவி இடியப்பம் சாப்பிட்டுக் கொண்டு இருந்த நேரத்திலை இடியப்பக் குந்து புரைக்கேறி மூச்சடைச்சுச் செத்துப்போச்சு. 'ஊராரறிய சிறப்பா வாழ்ந்து முடிச்ச கிழவி. பாடைகட்டிச் சுமக்கிறது போதாது. தண்டிகை வண்டிலிலைதான் கொண்டுபோக வேணும். பறைமேளமும் பிடிக்க வேணும் எண்டு முடிவெடுத்தாச்சு. எவன் மறிக்கிறானெண்டு ஒருக்கால் பாக்கிறன்' எண்டு சண்முகத்தார் தன்னுடைய நண்பர்களை பிடிச்சு மாட்டு வண்டில் ஒண்டை பூ வேலைப்பாடுகளைச் செய்து அலங்காரம் பண்ணி தண்டிகை வண்டிலாக்கி நுகத்தடியை கழற்றிவிட்டு துலாவிலை பிடிச்சு இழுத்துக் கொண்டு போறதுக்கேத்தமாதிரி செய்து முடிச்சார். அந்த ஊரிலையே முதல் முதலிலை தண்டிகை வண்டிலிலை போனது சண்முகத்தாரின்ரை பேர்த்தியின்ரை சவம் தான். பறைமேளமும் முதல் முதல் அவவின்ரை சாவுக்குத்தான் பிடிச்சவை. பறைமேளத்தோடை தண்டிகை வண்டிலிலை கிழவியை கொண்டு போற வழியிலை தான் சண்முகத்தார் திடீரெண்டு சொன்னவர் கிழவியின்ரை சவத்தை 'வேம்படி வெட்டை' சுடலையிலைதான் எரிக்கப் போயினமெண்டு. சிநேகிதங்களோடை சேந்து சண்முத்தார் எல்லாத்தையும் பிளான் பண்ணிப்போட்டார். 'வேம்படி வெட்டைச் சுடலையிலை விறகெல்லாம் அடுக்கியாச்சு. பக்கத்திலை நல்ல சுடலை இருக்க ஏன் நாங்கள் கண்ட இடத்துக்கும் அலைய வேணும்? இண்டையிலையிருந்து எங்கடை ஊரிலை சாகிற எல்லாரையும் வேம்படிவெட்டைச் சுடலையிலைதான் எரிக்கிறது. ஆர் மறிக்கினம் எண்டு நானும் பாக்கிறன். ஆராவது மறிப்பாங்களேயெண்டால் கையக்காலை எடுக்கிறன் பார்' எண்டு சுடலை வேலைக்காக கையிலை கொண்டு போன கத்தியை தூக்கிக் சுழட்டிக்கொண்டு போனவர்.

காடு போலை ரோமம் அடர்ந்து கிடந்த பரந்த நெஞ்சுள்ள உடம்பு. அடித்தொடை தெரிய உசத்தி கட்டின சண்டிக்கட்டு. வேட்டி அகட்டிவைச்சு பாய்ஞ்சு நடக்கிற ஒட்டகக் கால். வெடிமுழக்கம், பறைமுழக்கம் எல்லாஞ் சேர்ந்து சாதாரண சண்முகத்தாரை சண்டியன் சண்முகத்தார் ஆக்கியிருந்தது. சண்முகத்தார் அண்டு வேட்டைக்குப்போற சாமியைப்போல பவனி காட்டினார். சண்முகத்தாரின்ரை அந்தப் பவிசை அதுக்கு முன்னம் ஊரிலை ஆரும் கண்டதில்லை. சண்முகத்தாரின்ரை பேர்த்திக் கிழவியின்ரை சவம் வேம்படி வெட்டைச் சுடலைக்கு போகுதாம் எண்ட கதை எல்லா இடமும் 'வைரலானது'!

சண்முகத்தார் தன்னுடைய சிநேகிதங்களை ஆயத்தப்படுத்தி வைச்சிருந்தார். சுடலையுக்கு கிட்டை போகப்போக திகில் படம் பார்க்கிற உசார் எல்லாருக்கும். எல்லாரும் விரும்பியிருந்த வேலையை சண்முகத்தார் செய்து முடிக்கப் போறார் எண்ட தவிப்பு அவைக்கு!

கிழவியின்ரை சவத்தை சுடலையுக்கை கொண்டு போய், அடுக்கியிருந்த விறகிலை வைச்சு, வாய்க்கரிசி போடத் துவங்கிற நேரம் பத்து பன்னிரண்டு பேர் வரையிலை வந்து அந்தச் சுடலையிலை சவத்தை எரிக்கக் கூடாது எண்டு அட்டகாசம் பண்ணிச்சினம். வாய் நிறைய தூசணங்களும் கை நிறைய கொட்டன் கத்திகளும். சண்முகத்தார் அவையை எதிர்பாத்துக் காத்துக் கொண்டு நிண்டவரைப் போலை கத்தியும் கையுமாக முன்னோக்கிப் போனார். அவருக்குப் பின்னாலை இருபது இருபத்தைஞ்சு பொடியங்கள். எல்லாரும் சண்முகத்தாரின்ரை சிநேகிதங்கள். வெளியிடத்திலை இருந்து வந்த புதுப் பொடியளும் நிண்டினம். எல்லாற்ரை கையிலும் கத்தியள், இரும்புக் கம்பியள், பொல்லுகள் கிடந்தது. எல்லாம் பிளான் பண்ணித்தான் நடக்கிதெண்டு பிறகுதான் தெரிஞ்சுது.

சவம் எரிக்கிறதை மறிக்க வந்தவை மெள்ள மெள்ள பின்வாங்க வெளிக்கிட்டினம். பொலிசைக் கொண்டு வந்து எல்லாரையும் உள்ளுக்கை தூக்கி போடுறம் எண்டும் சொல்லிக்கொண்டு போச்சினம். பெரிய பிரச்சினை வரப்போகுது எண்டு சவத்தோடை வந்த ஊராக்கள் முழிசத் தொடங்கி விட்டினம். கிழவிக்கு வாய்க்கரிசி போடுற வேலை குறையிலை நிண்டிட்டுது. சண்முகத்தாரும் அவரின்ரை சிநேகிதங்களும் சுடலை வாசலிலை எதுக்கும் தயாரெண்டுதான் நிண்டினம். உள்ளுக்கை வாய்க்கரிசி போட்டு, கொள்ளிக்குடம் உடைச்சு, கொள்ளி வைக்கிற வேலை எல்லாம் நடந்தபடியிருந்தது. கொள்ளி வைச்ச சண்முகத்தாரின்ரை பெரிய தகப்பன் சுடலையை விட்டு வெளியிலை போக மெதுமெதுவாய் வந்த சனங்கள் திரும்பிப் போக தொடங்கிச்சுதுகள். சனம் கலைஞ்சு போன பிறகு சண்முகத்தாரும் சிநேகிதங்களும் கிழவியின்ரை சவத்தை எரிக்கிறதிலை மும்முரமா நிண்டினம். கத்தியளும் கம்பி பொல்லுகளும் கையளுக்கை தான் கிடந்தது. சுடலைக்குப் பக்கத்திலை இருந்த தவறணையிலிருந்து ஒரு 'பரல்' வந்து சேர்ந்தது. முளாசி எரியிற நெருப்பு வெக்கைக்கு 'அது' அவைக்கு தாகம் தீர்க்கிற கங்கை போலிருந்தது. அண்டைக்குப் பிறகு சண்முகத்தாரின்ரை ஊரிலையிருந்து அந்தச் சுடலைக்கு வாற சவத்தை எரிக்கக்கூடாதெண்டுஆரும்சொல்லுறதில்லையாம்!

> **மாகாண சபை நிர்வாகம் வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளில் இருந்த போது அதனுடைய ஆட்சித் திறனும் ஒழுங்கும் சீர் கெட்டிருந்தது. முதலமைச்சர் மீதான நம்பிக்கை இல்லாத் தீர்மானம், அவர் மீதான எதிர்ப்பு , அமைச்சர்களின் ஊழல் குற்றச்சாட்டு, அமைச்சர்கள் பதவி நீக்கம், மாகாண நிர்வாகத்தின் வினைத்திறனின்மை, புத்தாக்கம் குறித்த அக்கறையின்மை என ஏராளம் சீரழிவுகள் அந்த நாட்களில் நீண்டிருந்தன.**




# வடக்கு மாகாண சபையை மக்களுக்கானதாக மாற்ற வேண்டியது காலத்தின் கட்டாயம்

**கருணாகரன்**

மறுபடியும் மாகாண சபைகளுக்கான தேர்தலைப் பற்றிப் பேசப்படுகிறது. தேர்தல்களையும் அதன் வழியாக அதிகாரத்தையும் குறிவைத்திருப்போருக்கு எப்போதும் இந்தச் சிந்தனையே இருக்கும். இதனால்தான் இவர்கள் முதலமைச்சர், வேட்பாளர்களைப் பற்றியும் சேர்த்து சிந்திக்கிறார்கள். யாரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தலாம் என சனங்களுக்கும் இது ஒரு கொஞ்ச நாட்களுக்குப் பொழுதுபோகும் நல்லதொரு வேடிக்கை. ஊடகங்கள் மற்றும் அதையொட்டிய அரசியல் ஆருடர்களுக்கும் இது நல்ல சரக்கு. சில வாரங்களுக்கு வியாபாரமாக்கலாம்.

மற்றும்படி மக்களுக்கான விசயமாக இதை இவர்கள் பார்க்கவில்லை. அப்படிப் பார்க்கின்ற பக்குவமும் இவர்களிடமில்லை. அரசுக்கு எதிர்ப்பையும் அதிருப்தியையும் காட்டுவதற்கே மக்கள் விரும்புகிறார்கள். மக்களின் இந்த அரச வெறுப்புணர்வை தமிழ் அரசியற் கட்சிகளும் அரசியல்வாதிகளும் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் அரசியல் சோதிடர்களும் நல்லமாதிரிப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். வழமையாக இதுதான் நடக்கிறது. இப்போதும் இதுதான் நடக்கிறது. இனியும் இதுதான் நடக்கும்.

இந்த இடத்தில் நீங்கள் சில கேள்விகளை எழுப்புவீர்கள் “அரசின் மீது தமிழ் மக்களுக்கு ஏன் வெறுப்பு? ஏன் அவர்கள் அரசின் மீது தங்கள் அதிருப்தியை வெளிக்காட்ட விரும்புகிறார்கள்? அரசு அப்படி தமிழ் மக்களின் மீது வெறுப்பாகவும் பாரபட்சமாகவும் நடப்பதால்த்தானே!” .

இது உண்மையே. இதேவேளை, இதனால்த்தான் இதை வைத்து மேற்படி தரப்புகள் பிழைக்கின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மை.

அரசு பாரபட்சமாக நடத்துகிறது, ஒடுக்குகிறது என்றால் அதை எப்படி முறியடிப்பது என்றே இவை சிந்திக்க வேண்டும். அதற்கான பொறிமுறைகளை உருவாக்க வேண்டும். அவற்றைச் செயற்படுத்த வேண்டும். அதில் ஏற்படும் இடர்பாடுகளைக் கடந்து அதை எதிர்கொண்டு பயணிக்க வேண்டும். அல்லது அரசினாலும் அரசுக்கு ஆதரவான தரப்புகளாலும் ஏற்படுத்தப்படுகின்ற நெருக்கடிகளை எதிர்கொண்டு முறியடிக்க வேண்டும். இதற்கு மக்களுடனான அரசியல் உறவு அவசியம். அதிருந்தால் அது மக்கள் போராட்டமாக மாறும். இந்த மாதிரித் தேர்தல் விளையாட்டுகளோடு மட்டும் இது நிற்காது.

தேர்தலில் அதிகமாக ஒன்றும் கஸ்ரப்பட வேண்டியதில்லை. ஒன்றிரண்டு மாதங்கள் மட்டும் வேலை செய்தால் போதும். வெற்றிக்கனியைப் பறித்துவிடலாம். இதிலும் பாதி வேலையை அரசாங்கம் செய்து கொடுத்துவிடும் தன்னுடைய இனவிரோத நடவடிக்கையினால். தேர்தல் காலத்தில் இதை அது இன்னும் அதிகமாகவும் நுட்பமாகவும் செய்யும். ஏனென்றால் அதற்கும் இனவாத அலையும் தமிழ்த் தரப்பின் எதிர்ப்பும் எழுச்சியும் வேணும். அப்போதுதான் சிங்கள மக்களின் வாக்குகளை அதிகமாகக் கவரலாம்.

இந்த மாதிரி இணைந்த பொறிமுறையில் (உனக்கு நான் - எனக்கு நீ என்ற விதமாக) தேர்தல் என்பது இனிப்பான ஒன்றே. அதனால்த்தான் தேர்தலைக் குறித்து இவர்களுக்கு கரிசனை அதிகம். அதில் வரும்படி வாய்ப்புகளும் அதிகம். இதனால் அது ஒரு தொழில்துறை. மற்றும்படி அது மக்களுக்கானதொரு நல்வாய்ப்பு. மக்களதிகாரத்துக்கான ஏற்பாடு. ஜனநாயக உரிமையை மக்கள் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்கான அடிப்படை என்ற நோக்கில் உயர்ந்த எண்ணத்தினால் அல்ல.

ஆகவே மாகாண சபைகளுக்கான தேர்தல் என்பது மக்களுக்கான தேவை, மக்கள் நலன் என்பதற்காக இல்லாமல் இந்தத் தரப்புகளின் தேவைகளுக்கானது என்பது தெளிவு. இதை மேலும் உறுதிப்படுத்த வேண்டுமானால், மாகாண சபைகளுக்கான தேர்தலைப் பற்றி - அது மக்களுடைய ஜனநாயக உரிமை என்ற நோக்கில் இதை இவர்கள் நோக்கினால், அதனுடைய அதிகாரத்தைப் பற்றியும் ஒழுங்கைப் பற்றியும் அக்கறைப்படுவர். முக்கியமாக 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை. அதற்கான பொறிமுறையை அரசியல் அழுத்தத்தை. அதற்கான ராஜதந்திரத்தைப் பற்றிச் சிந்தித்திருப்பர். இப்பொழுதுகூட அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவர். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. வெறுமனே அரசாங்கத்தைக் கண்டிப்பது, திட்டித்தீர்ப்பது என்ற அளவில்தான் இவர்களுடைய நடவடிக்கைகள் உள்ளன. ஒழுங்கைப் பொறுத்தும் இதுதான் நிலைமை.

மாகாண சபை நிர்வாகம் வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளில் இருந்த போது அதனுடைய ஆட்சித் திறனும் ஒழுங்கும் சீர் கெட்டிருந்தது. முதலமைச்சர் மீதான நம்பிக்கை இல்லாத் தீர்மானம், அவர் மீதான எதிர்ப்பு, அமைச்சர்களின் ஊழல் குற்றச்சாட்டு, அமைச்சர்கள் பதவி நீக்கம், மாகாண நிர்வாகத்தின் வினைத்திறனின்மை, புத்தாக்கம் குறித்த அக்கறையின்மை என ஏராளம் சீரழிவுகள் அந்த நாட்களில் நீண்டிருந்தன. இதற்காக முதலமைச்சராக இருந்த விக்கினேஸ்வரனும் வெட்கப்படவில்லை. அவரை ஆதரித்தோரும் வெட்கமடையவில்லை. கூட்டமைப்பும் அதனுடைய ஆட்களும் அக்கால ஆட்சியில் பொறுப்பு வகித்தவர்களும் கூடக் கூச்சமடையவில்லை. அப்படி வராது. காரணம், இவர்கள் ஒருபோதும் மக்களுக்குப் பொறுப்புச் சொல்லும் பக்குவத்தோடும் பொறுப்புணர்வோடும் நடந்து கொண்டவர்களில்லையே! அப்படியானோருக்கே குற்றவுணர்ச்சியும் பொறுப்புச் சொல்லும் பக்குவமும் வரும். அரசியல் வாணிபர்களிடம் அதை எதிர்பார்க்க முடியாது. என்பதால்த்தான் மாகாண சபைத் தேர்தல் என்றவுடன் மறுபடியும் வாலை நிமிர்த்திக் கொண்டு முன்நிற்கிறார்கள். ருசி இவர்களை லேசில் விட்டுவிடாதல்லவா!

வடக்கு மாகாணசபை விக்கினேஸ்வரனின் தலைமையில் இயங்கியபோது மேற்கொள்ளப்பட்ட மறக்க முடியாத - சிறந்த வேலைத்திட்டம் எதையாவது யாராவது இன்று சொல்லக் கூடியதாக உள்ளதா? அல்லது அப்போது எட்டப்பட்ட - உருவாக்கப்பட்ட அரசியல் அடைவுகள், பெறுபேறுகள் போன்றவற்றைச் சொல்ல முடியுமா?

பதிலாக ஊழலும் சீரழிவுமாகவே அன்றைய நிர்வாகம் இருந்தது. இதனால் அப்பொழுது தினமும் ஏராளம் முறைப்பாடுகளும் ஏராளம் கோரிக்கைகளும் மக்களாலும் உத்தியோகத்தர்களாலும் ஆளுநரிடம் முன்வைக்கப்பட்டன. அதாவது மக்கள் தாம் தெரிவு செய்த பிரதிநிதிகளிடத்திலும் அந்தப் பிரதிநிதித்துவ சபையிலும் நம்பிக்கை இழந்து மத்திய அரசின் பிரதிநிதியான ஆளுநரிடம் நம்பிக்கை வைக்க வேண்டிய நிலை உருவானது.

இது மக்களின் நம்பிக்கையையும் மாகாணசபையின் அதிகாரத்தையும் மத்தியின் கைகளில் ஒப்படைப்பதற்குச் சமம். அப்படி மத்தியின் கைகளில் அதிகாரத்தை ஒப்படைப்பதாயின் பிறகெதற்கு மாகாணசபையும் தேர்தலும்?

இதனையும் ஒரு வாய்ப்பாகக் கொண்டே இப்பொழுது கோத்தபாய அரசு மாகாண சபை முறையை ஒழிப்பதைப் பற்றி யோசிக்கிறது. அல்லது மாகாணசபை முறையையும் 13 யும் ஒழிக்க முயற்சிக்கும் சிங்கள ஆதிக்கவாதிகளுக்கு நாமும் அனுசரணை வழங்கி விடுகிறோம்.

மாகாணசபை முறைமை உருவானதொன்றும் எளிய விசயமல்ல. பல ஆயிரக்கணக்கான போராளிகளின் அளப்பரிய தியாகத்தினால் உருவான ஒன்று. காலத்தைச் சரியாகக் கணித்துக் கொண்ட சாதுரியத்தினால் பெற்றவெற்றி. அன்றைய அரசியற் சூழலில் அது ஒரு பெரிய அரசியல் வெற்றி. ஒரு பெரிய அரசியல் அறுவடை. ஆனாலும் அதையும் விட அதிகமாக அன்று பெரியதொரு அரசியல் தீர்வை தமிழர்களும் எதிர்பார்த்தனர். புலிகளும் எதிர்பார்த்தனர்.

கிடைத்த மாகாண சபை முறையை பலப்படுத்துவதே பெரிய சவாலாக இருந்தது. இன்றும் இது ஒரு பெரிய சவாலே. அப்படியிருக்கும்போது மிக மிக பொறுப்பாகவும் சாதுரியமாகவும் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். செய்திருக்க வேண்டும். ஆனால் நடந்தது என்ன? நடந்து கொண்டிருப்பது என்ன?

மாகாணசபையை - 13 ஐ இப்போது வரை சிங்கள அதிகாரத் தரப்பினர் விரும்பவேயில்லை. இந்தியா கூட வடக்குக் கிழக்குக்கு என தனியாக மாகாணசபை முறையை உருவாக்கவில்லை. அது சாத்தியமும் இல்லை. அதனாலத்தான் இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்கும் அதிகாரம் என மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது. இப்போதும் அனைத்து மாகாணங்களுக்குமான ஏற்பாடுகள் என்று ஒன்றோ பலவோ உருவாக்கப்பட்டால்த்தான் உண்டு. இல்லை என்றால் எதுவுமே இல்லை.

இப்படிப் பலதுண்டு. இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் தேர்தலைப் பற்றிச் சிந்திப்பதென்பது மக்கள் விரோதமானது. மகா முட்டாள்தனமானது. இவை இரண்டிலிருந்தும் மீள்வதே தமிழர்களுடைய முதல் வேலையாக இருக்க வேண்டும். ■

# நவால்னியின் மீது கரிசனை கொள்ளும் ஏகாதிபத்தியம் அசான்ஜேயை மறுப்பது ஏன்?

**தொகுப்பு: ஏகன் அநேகன்**






சிறையில் அடைக்கப்பட்டுள்ள ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னிக்காக அமெரிக்க அரசியல் தலைவர்களின் மற்றும் அதன் ஏகாதிபத்திய நட்பு நாடுகளின் இதயங்களில் இரத்தம் வடிகிறது. ரஷ்ய அரசால் குற்றகரமாக விஷம் செலுத்தப்பட்டதாக கூறப்பட்டு ஜேர்மனியின் சிகிச்சையிலிருந்து திரும்பியதும், இந்தாண்டு பெப்ரவரி 2 இல் சிறையில் அடைக்கப்பட்ட நவால்னி அப்போதிருந்து உண்ணாநிலை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

நவால்னியின் சிறை வாசம் மற்றும் அதன் விளைவாக மோசமடைந்து வரும் அவரது உடல்நிலை மீது அக்கறை கொள்ளும் ஏகாதிபத்தியத்தின் சீற்றம், சிடுமூஞ்சித்தனம் மற்றும் சூழ்ச்சி மீது ஒரு பொருள் பொதிந்த பாடத்தை வழங்குகிறது. விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் ஜூலியன் அசான்ஜேயை இன்றுவரை இன்னலுக்கு உட்படுத்த முனைப்புக் கொள்ளும் நிபுணர்கள்தான், நவால்னியின் ஜனநாயக உரிமைகளைத் தாங்கிப் பிடிப்பதில் மிகவும் உணர்ச்சிகரமாக முன் நிற்கிறார்கள்.

அவ்விருவருக்கும் இடையே தொலைவில் வைத்து ஒப்பிடத்தக்க வித்தியாசங்கள் கூட எதுவுமில்லை, இந்த வித்தியாசங்களும் நவால்னிக்கு சாதகமாக இல்லை.

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் மீதான மிருகத்தனமான ஆக்கிரமிப்பின் மூடிமறைக்கப்பட்ட விபரங்களில் இருந்து அமெரிக்காவின் சித்திரவதை முகாம்கள் மற்றும் கைதிகளை அசாதாரணமாக ஒப்படைப்பது வரையில், அசான்ஜே 21 ஆம் நூற்றாண்டின் மிக மோசமான ஏகாதிபத்திய குற்றங்களை அம்பலப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்த ஒரு தைரியமான பத்திரிகையாளராக இருக்கிறார்.

ஒரு வலதுசாரி, தேசியவாத அரசியல்வாதியான நவால்னி, காக்கசஸிலிருந்து வந்த புலம்பெயர்ந்தோரை “கரப்பான்பூச்சிகள்” என்று குறிப்பிட்டு அவர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்று குறிப்பிட்டவராவார். மேற்கத்திய ஏகாதிபத்தியத்திற்கு இன்னும் அதிகமாக பரந்தளவில் ரஷ்யாவைத் திறந்து விட ஆதரவாக ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை எதிர்க்கும் ரஷ்ய தன்னலக் குழுவின் ஒரு பிரிவை அவர் பிரதிநிதித்துவம் செய்கிறார்.

விக்கிலீக்ஸ் ஸ்தாபகரின் பணி உலகளாவிய போர் எதிர்ப்பு உணர்வைத் தூண்டியதுடன், துனிசியா மற்றும் எகிப்தில் மக்கள் எழுச்சிகளுக்குப் பங்களிப்பு செய்தது. ஏகாதிபத்திய நலன்களுக்கு அவர் ஏற்படுத்திய சேதங்களுக்காக பழிவாங்கப்படும் ஒரு முன்மாதிரி நபராக ஆக்கப்பட்டு வருகிறார். அதே நலன்கள்தான் நவால்னிக்கு கட்டாயமாக ஆதரவு வழங்குகின்றன, நவால்னி ரஷ்யாவை நோக்கிய அவர்களின் சதி நோக்கங்களைக் கைவரப்பெறுவதற்கான ஒரு கருவியாக தன்னை முன்வைக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி போரிஸ் ஜோன்சன் போன்றவர்கள் மனித உரிமைகள் அடிப்படையில் நவால்னியை ஆதரிப்பதாகவும், அதேவேளையில் சட்டபூர்வ அடித்தளங்கள் எனக் கூறப்படுவதை அசான்ஜே மீது செயல்படுத்துவதாகவும் கூறும் வாதங்களை, அவர்கள் ஒன்றுக்கொன்று நேரெதிராக கையாளப்படும் விதம் வெளிப்படுகிறது.

ஒரு தசாப்தத்திற்கும் அதிகமான காலத்திற்கு முன்னர், சுவீடன் அவரை நாடு கடத்துவதற்காக அரசியல் ரீதியில் இட்டுக்கட்டப்பட்ட பாலியல் தாக்குதல் விசாரணையைத் தொடங்கிய போது, அசான்ஜே மீதான இன்னல்படுத்தல்கள் தொடங்கின. இது அமெரிக்காவுக்கு ஒரு அரங்கமாக இருந்திருக்கும். அசான்ஜே, 2012 இல், இலண்டனில் உள்ள ஈக்வடோரிய தூதரகத்தில் அரசியல் தஞ்சம் கோர நிர்பந்திக்கப்பட்டார், அங்கே அவரின் ஏழாண்டு காலத்தின் பெரும் பகுதியில் பிரிட்டிஷ் பொலிஸால் எதேச்திகாரமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

ஏப்ரல் 2019 இல் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட பின்னர் 25 வாரங்கள் பிணை வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டில் அவர் கடந்த இரண்டாண்டுகளாக அதிகபட்ச பாதுகாப்பு கொண்ட பெல்மார்ஷ் சிறையில் நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டுள்ளார், அதேவேளையில் அவரை அமெரிக்காவிடம் ஒப்படைக்கச் செய்வதற்கான ஒரு கோரிக்கையை அது முன்வைக்கப்பட்டிருந்தது. அதேவேளையில் அவரது உடல் நலக் குறைவு காரணமாக அவரை நாடு கடத்துவது தொடர்பிலான திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால் அமெரிக்கா அதற்கு எதிராக வழக்குத் தாக்குதல் செய்திருந்தது.

அரசியல் ரீதியில் ஊக்குவிக்கப்பட்ட அவரின் வழக்கு, சட்ட மற்றும் ஜனநாயக உரிமைகளது துஷ்பிரயோகத்தின் துதிபாடலாக உள்ளது. உலகின் ஊடகங்களும் போலி-இடது குழுக்களும் ஈடுபட்டுள்ள ஒரு வசைபாடல் பிரச்சாரத்துடன் இணைந்து, அவரது பெயரைக் களங்கப்படுத்தவும் மற்றும் உளவியல் ரீதியில் விக்கிலீக்ஸ் ஸ்தாபகரை அழிக்கவும் வடிவமைக்கப்பட்டு, நடத்தப்படுகிறது.

அசான்ஜே அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டால், அவர் உளவுபார்ப்பு சட்டத்தின் பிரகாரம் 175 ஆண்டு சிறை தண்டனையை முகம் கொடுக்க வேண்டும். ஜோன்சனின் வார்த்தைகளில், “நீதியை எதிர்கொள்ள வேண்டும்” என்றும், பைடனின் வார்த்தைகளில் ஓர் “உயர் தொழில்நுட்ப பயங்கரவாதி” என்றும் கண்டனம் செய்யப்பட்ட, அசான்ஜே மீது கொண்டு வருவதற்கான இந்த ஏகாதிபத்திய சதித்திட்டத்திற்குப் பின்னால் உலகின் ஒவ்வொரு அரசாங்கமும் வரிசையில் நிற்கின்றன. அசான்ஜே வழக்கு “ஜேர்மனி சம்பந்தப்பட்ட விசயம் இல்லை. அது பிரிட்டிஷ் நீதித்துறையின் கைகளில் உள்ளது,” என்று 2019 இல் கருத்துரைத்து ஜேர்மன் சான்சிலர் அங்கேலா மேர்க்கெல் ஐரோப்பிய சக்திகளின் நிலைப்பாட்டை தொகுத்தளித்தார். அசான்ஜேயின் சொந்த நாடான ஆஸ்திரேலியா அவரைக் கைகழுவி விட்டது.

இதற்கு நேர்மாறாக, 2014 இல் ஒரு கையாடல் வழக்கு தொடர்பாக, ஜாமீனை மீறியதற்காகவும், இந்தாண்டு நவால்னி கைது செய்யப்பட்டு, இரண்டு ஆண்டுகள் எட்டு மாதங்கள் அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட போது, இந்த குற்றவாளி கும்பல் அற்புதமான விதத்தில் அவர்களின் ஜனநாயக உணர்திறன்களைக் கண்டு பிடித்து விட்டனர்.

ஜோன்சன் “துணிச்சலான” நவால்னியை பாராட்டியதுடன், அந்த ரஷ்ய தீர்ப்பு “நீதியின் மிக அடிப்படையான தரமுறைகளைக் கூட பூர்த்தி செய்யத் தவறிவிட்டது” என்றார். அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சுலிவன் அந்த “மனித உரிமை மீறலை” கண்டித்தார். நவால்னி தீர்ப்பு குறித்து மேர்க்கெல் அறிவிக்கையில் “சட்டத் தரமுறையின் எந்தவொரு விதிக்கும் அப்பாற்பட்டது” என்று அறிவித்தார்.

பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவல் மக்ரோன் அறிவிக்கையில், “ஜனநாயக சுதந்திரம் போன்ற மனித உரிமைகளின் மரியாதை பேரம்பேசுவதற்குரியதல்ல,” என்றார்.

ரஷ்ய அரசால் அவர் குற்றகரமாக நஞ்சூட்டப்பட்டார் என்பதைச் சுட்டிக்காட்டும் விதமாக, “அவரின் நவால்னியின் உயிர் மீதான மூர்க்கமான தாக்குதலுக்காக” குறிப்பாக கடுமையாக கண்டனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் ஈக்வடோர் தூதரகத்தை உளவுபார்த்த ஸ்பானிய பாதுகாப்புத்துறை நிறுவனம் UC Global மீதான ஒரு விசாரணை, அசான்ஜேயை கடத்த அல்லது நஞ்சூட்ட சிஐஏ வகுத்த சதித்திட்டத்தை அம்பலப்படுத்தியதைக் குறித்து எதுவும் கூறப்படவில்லை.

அவரது உண்ணாநிலை போராட்டத்தின் காரணமாக நவால்னியின் உடல்நிலை மோசமடைந்துள்ளதால், இந்த அதிகாரிகள் அவரின் உயிருக்கு ஆபத்திருப்பதாக சுட்டிக்காட்டி, அவரது சுதந்திரத்திற்கான அழைப்புகளை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர். நவால்னி கையாளப்படும் விதம் “முற்றிலும் நியாயமற்றதும் பொருத்தமற்றதும்” ஆகும் என்று பைடென் குறிப்பிட்ட அதேவேளையில், அவர் உயிரிழந்தால் ஏற்படும் “விளைவுகளை” குறித்து அவரது நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான உயர்மட்ட பிரதிநிதி ஜோசப் பொரெல், “ரஷ்ய அதிகாரிகள் அவர் நம்பும் மருத்துவ வல்லுனர்களை உடனடியாக அணுகுவதற்கு வசதி செய்ய வேண்டும்,” என்று கோரினார். இங்கிலாந்தின் வெளியுறவு அலுவலகம் அதன் அறிக்கையில் கூறியது: “திரு.நவால்னிக்குச் சுதந்திரமான மருத்துவ சேவையைப் பெறுவதற்கு உடனடியாக அனுமதி வழங்கப்பட வேண்டும்” என்று.

அசான்ஜிற்கான மருத்துவர்களின் பிரச்சாரக் குழுவும் சித்திரவதை சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் நில்ஸ் மெல்சரும் துல்லியமாக இதே கோரிக்கையைத் தான் அசான்ஜேயிற்காக முன்வைத்தனர், ஆனால் அது பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அவமதிப்பாக நிராகரிக்கப்பட்டது. கோவிட்-19 தொற்றுநோயாலும் அவரின் சொந்த மனநல நிலைமைகளாலும் அவர் உயிருக்கு தீவிர ஆபத்து ஏற்பட்டிருந்த போதும் கூட, அசான்ஜிற்கு மீண்டும் மீண்டும் பிணை மறுக்கப்பட்டுள்ளது.

அசான்ஜே அமெரிக்காவுக்கு நாடு கடத்துவது அவரது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தி அவர் தற்கொலை செய்வதற்கு இட்டுச் செல்லக்கூடும் என்ற ஒரே அடித்தளத்தில் பிரிட்டன் நீதிபதி வனெசா பாரைட்சர் அவரை அமெரிக்காவுக்கு நாடுகடத்துவதற்கு எதிராக தீர்ப்பளித்தார். ட்ரம்ப் முன்னர் செய்ததைப் போலவே, “நாங்கள் அவரை ஒப்படைக்க தொடர்ந்து முயற்சி செய்வோம்,” என்று வலியுறுத்தியதே பைடென் நிர்வாகத்தின் விடையிறுப்பாக இருந்தது.

ஆளும் வர்க்கத்தின் குற்றகரமான திட்டநிரல், ஊடகங்களில் அவர்கள் பணம் செலுத்தி கூச்சலிடுபவர்களின் கூச்சலில் எதிரொலிக்கிறது, அவர்கள் அசான்ஜே அழிய விட்டுவிட்டு அதேவேளையில் நவால்னிக்காக முற்போக்கான நற்சான்றிதழ்களை இட்டுக்கட்ட மேலதிக நேரம் வேலை செய்து வருகின் றனர்.

பெயரளவில் பிரிட்டனின் முன்னணி தாராளவாத பத்திரிகையான கார்டியன், இந்த ஆண்டு ஜனவரியில் இருந்து, நவால்னி குறித்து 78 கட்டுரைகள் மற்றும் காணொளிகளை வெளியிட்டுள்ளது. அது அசான்ஜே குறித்து 16 கட்டுரைகளை வெளியிட்டது. பெப்ரவரியில் வெளியிடப்பட்டது ஒன்று மட்டுமே அவருக்கு எதிராக தசாப்த காலமாக அவதூறு பிரச்சாரத்தை நடத்திய பின்னர், அது நவம்பர் 2019 தலையங்கத்தில் அசான்ஜேயை அமெரிக்காவிடம் ஒப்படைப்பதற்காக, ஆவணப்படுத்துவதற்கான எதிர்ப்பை காலங்கடந்தும் கூட ஏற்று நடத்தியது. அது 2020 டிசம்பரில் மற்றொன்றையும் பின்னர் இந்தாண்டு ஜனவரியில் மீண்டும் ஒன்றையும் எழுதியது. இந்தாண்டு மட்டும் நவால்னியைக் குறித்து மூன்று கட்டுரைகளை எழுதி யுள்ளது.

சர்வதேச பொது மன்னிப்பு சபை பல ஆண்டுகளாக அசான்ஜை மனச்சாட்சியுள்ள ஒரு கைதியாக ஒப்புக்கொள்ள மறுத்து விட்டது. ஆனால் மிக விரைவில் அந்த முத்திரையை நவால்னிக்கு வழங்கியதோடு, சில மாதங்களுக்குப் பின்னர் அவரது “வெறுக்கத்தக்க பேச்சு” என்ற பதிவை ஒப்புக்கொள்ள அவர்கள் ஒரு சங்கடமான பின்வாங்கலுக்கு நிர்பந்திக்கப்பட்டனர். அமெரிக்க ஜனநாயகக் கட்சி செனட்டர் பேர்ணி சாண்டர்ஸ், அசான்ஜை சம்பந்தமாக முழுமையாக வாய்திறக்கவில்லை, அவர் மே 2019 இல் அசான்ஜை மீதான குற்றப்பத்திரிகையை எதிர்த்து ஒரேயொரு ட்வீட் செய்தி வெளியிட்டார். இந்த திங்கட்கிழமை அவர் பின்வருமாறு ட்வீட் செய்தார்: “இங்கே என்ன நடக்கிறது என்பதில் எந்த தவறும் செய்து விடாதீர்கள்: புட்டினின் பரந்த ஊழலை அம்பலப்படுத்திய குற்றத்திற்காக நடவடிக்கையாளர் அலெக்சி நவால்னி, விளாடிமீர் புட்டினால் உலகிற்கு முன்னால் படுகொலை செய்யப்பட்டு வருகிறார். நவால்னியின் மருத்துவர்கள் அவரை உடனடியாகப் பார்க்க அனுமதிக்க வேண்டும்.”

சாண்டர்ஸ், பைடன், ஜோன்சன் மற்றும் அவர்களைப் போன்றவர்களின் வாய்களில் இருந்து வரும் “மனித உரிமைகள்” மற்றும் “ஜனநாயக சுதந்திரம்” போன்ற வார்த்தைகள், ஏமாற்று வார்த்தைகளாகவே வருகின்றன. அரசியல் ரீதியில் இழிவான நவால்னிக்கு அவர்களின் ஆதரவானது ரஷ்ய அரசுக்கு எதிரான ஒரு கணக்கிட்ட ஆத்திரமூட்டலாகும். மாஸ்கோவுக்கு எதிராக கூடுதலாக இராணுவ ஆக்ரோஷத்தைத் தீவிரப்படுத்துவதற்கான ஒரு சாக்குபோக்காக, அவர்கள் நவால்னியின் கதியைப் பயன்படுத்த நினைக்கிறார்கள். இந்த ஏகாதிபத்திய போர் முனைவுக்கு எதிரான எதிர்ப்பை ஒடுக்கவே எல்லா பிரதான சக்திகளின் முழு ஒப்புதலுடன் அசான்ஜேயின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன.

இன்று உலகில் ஜனநாயக உரிமைகளுக்கான ஒரே உண்மையான ஆதரவுத் தளம் சர்வதேச தொழிலாள வர்க்கம் மட்டுமே ஆகும். ஏகாதிபத்திய அரசாங்கங்களுக்கு எதிராகவும், அவர்களின் கைப்பாவை நவால்னி மற்றும் புட்டின் பிரதிநிதித்துவம் செய்யும் ரஷ்ய தன்னலக்குழுவுக்கு எதிராகவும் அத்தகைய உரிமைகளை ஒருமித்த போராட்டத்தின் மூலமாக சர்வதேச தொழிலாள வர்க்கம் மட்டுமே பாதுகாக்கும். ஜூலியன் அசான்ஜேயை நிபந்தனையின்றி உடனடியாக விடுவிப்பதற்கான கோரிக்கை அந்த போராட்டத்தின் மையத்தில் வைக்கப்பட வேண்டும். ■

# பிரபஞ்சத்துக்கு அப்பால்...

எல்லையற்ற விரிந்த வான வெளியின் அதிசயங்களையும் ஆச்சரியங்களையும் அறிவியல் ரீதியில் நோக்கும் ஒரு சுவாரசியத் தொடர்



பிரபஞ்சத்துக்கு அப்பால் என்ற இத் தொடரினை வாசிப்பதற்கு ஆயத்தமாகும் வாசகர்களுக்கு முதல் வணக்கம். “என்னைப் பற்றி உனக்குத் தெரியுமா? நான் எவ்வளவு பெரிய ஆள் தெரியுமா? போன்ற வசனங்களை எப்போதாவது கேட்டுள்ளீர்களா? அப்படி யாராவது கூறினால், நீங்கள் கூறுங்கள் எம்மை விட பெரிதாக பூமி இருக்கிறதென்று.

உண்மையிலேயே பூமி பெரியதா என்று பார்த்தால் புதன், வெள்ளி, செவ்வாய் போன்ற கோள்களை விடவும் எமது பூமி பெரியதுதான். ஆனாலும் பூமியை விடவும் வியாழன், சனி, யுரேனஸ், நெப்தியூன் போன்றவை மிகப் பெரியவை. 1321 பூமிகளை ஒன்றாகப் பிசைந்து ஒரு பெரிய மோதகத்தைப் பிடித்தோமானால் அதுதான் வியாழன் எனும் மிகப் பெரிய தாதாக் கோள். அப்படியானால் நமது பூமி வியாழனை விட மிகச் சிறியது தானே?. சரி, வியாழன் தான் மிகப் பெரியதா? இல்லவே இல்லை. நமது சூரிய மண்டலத்தில் உள்ள அனைத்து கோள்களையும் இணைத்து ஒன்றாக்கினால் கூட, அளவில் எமது சூரிய உடுவின் கால் வாசியைக் கூட நெருங்க முடியாது. ஏறக்குறைய வடிவவியல் ரீதியாக 13 லட்சம் பூமிகளை ஒன்றாக்கினால் தான் எமது சூரியனின் அளவை நெருங்க முடியுமென்றால் பார்த்துக் கொள்ளுங்கள், நமது சூரிய உடு எவ்வளவு பெரியதென்றும் பூமி எவ்வளவு சிறியதென்றும்!!!. அப்படியானால் சூரியன் தான் பெரியதாவென்றால் அதுவும் இல்லை.

VY Canis majoris என்ற பெரிய உடு எங்களை மிரட்டும் வகையில் உள்ளது. ஆமாம் அதன் விட்டம் 200 கோடி கிலோமீற்றர்கள் ஆகும். அவ் உடுவின் ஒரு புறமிருந்து மறுபக்கத்துக்கு செல்ல 1100 வருடங்கள் எடுக்கும். இதனோடு ஒப்பிடுகையில் பூமியின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் விமானத்தில் செல்ல 40 - 50 மணி நேரம் எடுக்கின்றது. நமது சூரியனின் விட்டம் 13 லட்சம் கிலோ மீற்றர்களே ஆகும். இப்போது கூறுங்கள் எமது சூரியனை விட நமது பால் வீதியில் உள்ள VY Canis majoris எவ்வளவு பெரியதென்று?. என்ன தலை சுற்றுகிறதா? வாருங்கள் அடுத்த ஆச்சரியத்தை உற்று நோக்குவோம். இப்போது நீங்களே சொல்லுங்கள் VY Canis majoris தான் பெரியதா? அதுவுமில்லை, இதனை விட 369 கோடி சூரியனின் அளவை அடக்கக் கூடிய UY Scuti எனும் பிரமாண்ட உடு நமது பால்வீதியில் (Milky way) நிமிர்ந்து நிற்கின்றது. அப்போது UY Scuti தான் எமது பால்வீதியில் பெரிய உடுவா? அதுவுமில்லை, UY Scuti ஐ விட இராட்சத உடுவான Stephenson 2-18 பூமியில் இருந்து ஏறத்தாழ 20,000 ஒளி ஆண்டு, தொலைவில் சுற்றி வருகிறது. அதுசரி, ஒளி ஆண்டு என்றால் என்ன என்பதை போகிற போக்கில் சொல்லிவிட்டு தொடர்வோம். ஒரு வருடத்தில் ஒளி செல்லும் தூரம் தான் ஒளி ஆண்டு ஆகும். ஒரு செக்கனில் ஒளி செல்லும் தூரம் 300000000 மீற்றர்கள் ஆகும். ஆகவே 20,000 ஒளி ஆண்டில் ஒளி செல்லக்கூடிய தூரத்தை மீற்றரில் கூற முனைந்தால் அதில் எத்தனை பூச்சியங்கள் உண்டு எனக் கணக்கிட முனைந்தால் நீங்களே பெரிய அறிவாளிகள் என்பதை நான் ஒப்புக் கொள்வேன். அதாவது கற்பனையில் ஒளியின் வேகத்தில் சென்றால் 20,000 வருடங்களுக்குப் பின்னர் நீங்கள் சாகாவரம் பெற்றிருந்தால் Stephenson 2-18க்கு சென்று முதல் காலடியை வைத்த பெருமையை கட்டாயமாகப் பெறுவீர்கள். சரி, நாம் இப்போது மீண்டும் அந்தப் பெரியது எது என்ற விளையாட்டுக்கு வருவோம். எமது சூரியனின் 1000 கோடிகளை கன வளவு ரீதியில் ஒன்றாக்கினாலேயே Stephenson 2-18 அளவுக்கு வரும். ஐயோ! இப்போது உண்மையாகவே எனக்குத் தலை சுற்றுகிறது. உங்களுக்கு எப்படி?.... இவ்வளவு நேரமும் நான் கூறியவை எல்லாம் நமது பால் வீதியில் (Milky way) உள்ள உடுக்களைப் பற்றியே ஆகும். இப்போது Stephenson 2-18 ஐ விட பெரிய உடு இருக்குமா? இதற்கு விடை இதுவரை கண்டறியப்படவில்லை என்பதேயாகும். ஆனால் எமது பால் வீதியில் ஏறத்தாழ 400 கோடி உடுக்கள் காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. ஒவ்வொரு உடுவைச் சுற்றியுமுள்ள கோள்கள், நமது சூரிய மண்டலத்தில் உள்ள கோள்கள் சூரியனை சுற்றி வருவது போல சுற்றி வருகின்றன. இதில் சில உடுக்களுக்கு கோள்கள் இல்லை என்பது வேறு கதை (மலட்டுக்கோள்). ஆனால் வேறு பெரிய உடுக்கள் இருக்க முடியாதென உங்களால் உறுதியாக கூற முடியாது. சரிதானே, ஆனால் பிரபஞ்சம் என்பது தற்போது வரை கண்டுபிடிக்கப்பட்ட 12,500 கோடி கலக்சிகளில் ( எமது பால் வீதி உட்பட) எத்தனை நட்சத்திரங்கள் இருக்கும்? அதனைச் சுற்றி எத்தனை கோள்கள் வலம் வரும்? அங்கு உயிரினங்கள் இருக்குமா? அவற்றில் நாம் கடைசியாகக் கண்ட பெரிய உடு Stephenson 2-18 ஐ விட பெரிய உடு இருக்குமா? உடுக்களுக்குப் பிறப்பும் இறப்பும் உண்டா? பிரபஞ்ச எல்லை எதுவாக இருக்கும்? நமது பிரபஞ்சம் விரிவடைந்து செல்கிறதா? இப்படிப் பல ஆச்சரியங்கள் நிறைந்த விண்வெளியின் இரகசியத்தை ஒரு சிறிய கைப்பிடியாவது உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகவே இத்தொடரை எழுத ஆரம்பித்தேன். இலகுவாக கூற முற்படின் எமது பூமியானது சூரிய மண்டலத்தின் ஒரு சிறிய பருப்பொருள் ஆகும். பல சூரிய மண்டலங்கள் ஒன்று சேர்ந்து கலக்சிகளை உருவாக்குகின்றன. அப்படியான பல கோடிக்கணக்கான கலக்சிகள் ஒன்று சேர்ந்தே பிரபஞ்சம் உருவாகிறது.

இறுதியாக பிரபஞ்சத்துடன் ஒப்பிடும்போது கலக்சிகளோ, சூரியனோ, பூமியோ அல்லது மானிடப் பிறவிகளோ பெரியவைகள் அல்ல என்பது இப்பொழுது உங்களுக்கு புரிந்திருக்கும்.

மீண்டும் அடுத்த வாரம் கடவுளின் துணிக்கைகள் பற்றிய சுவாரசியங்களுடன் சந்திப்போம்.

சபா.விஜயகுமார்



# வாராந்த ராசி பலன்

01.05.2021 - 07.05.2021



## மேடம்

முன்யோசனையுடன் செயல்பட வேண்டிய வாரம். பேச்சில் நிதானம் தேவை. நண்பர்களுக்காக ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்படும். நட்பு பகையாகலாம்.



## இடபம்

நிதானத்துடன் செயல்பட வேண்டிய வாரம். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. விலை உயர்ந்த பொருட்களைக் கையாள்வதில் கவனம் தேவை. தொழில் கூட்டாளிகளால் தொல்லை உண்டு.



## மிதுனம்

யோகமான வாரம். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த நல்ல தகவலொன்று வந்து சேரலாம். அன்னிய தேசத் தொடர்பு அனுகூலம் தரும். சுப காரியப் பேச்சுகள் முடிவிற்கு வரும்.புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.



## கடகம்

ஆரோக்கியம் சீராகும் வாரம். அரசு வழிக் காரியங்கள் அனுகூலமாக முடியும். அரைகுறையாக நின்ற பணியைத் தொடருவீர்கள். சாமர்த்தியமான செயல்பாடுகளால் சாதனை படைப்பீர்கள்.



## சிம்மம்

புண்ணிய காரியங்களுக்கு பொருளுதவி செய்யும் வாரம். புதிய பாதை புலப்படும். வருங்கால நலன் கருதி எடுக்கும் முயற்சியில் வெற்றி கிட்டும். தொழில் ரீதியான பயணமொன்று ஆதாயம் தரும்.



## கன்னி

துணிவும், தன்னம்பிக்கையும் கூடும் வாரம். எதிரிகள் விலகுவர். கூட்டுத் தொழிலைத் தனித் தொழிலாக மாற்றலாமா என்று சிந்திப்பீர்கள். சொத்துகள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும்.



## துலாம்

பணி நிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரும் வாரம். நீண்ட நாளைய எண்ணம் நிறைவேறும். ஆபரணப்பொருட்களை வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள். உறவினர்கள் உங்கள் பணிகளுக்கு ஒத்துழைப்பு செய்வர்.



## விருச்சிகம்

வழிபாட்டில் ஆர்வம் காட்டும் வாரம். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். கண்ணியமிக்கவர்கள் கைகொடுத்து உதவ முன்வருவர். மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும்.



## தனுசு

மதி நுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிக்கும் வாரம். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். வெளிவட்டாரத் தொடர்பு விரும்பும் விதத்தில் அமையும். பயணம் பலன் தரும்.



## மகரம்

கடிதம் மூலம் கனிந்த தகவல் வந்து சேரும் வாரம். நினைத்தது நிறைவேறும். உத்தியோகத்தில் உடனிருப்பவர்களின் உதவி கிடைக்கும். வாகனப் பராமரிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள்.



## கும்பம்

உள்ளத்தில் அமைதி கூடும் வாரம். உறவு பகை பாராமல் அனைவருக்கும் உதவி செய்வீர்கள். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். உடன்பிறப்புகள் வழியில் உருவான மனக்கசப்புகள் மாறும்.



## மீனம்

கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழும் வாரம். திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும்.

# நித்திரை எனும் செல்வம்

வே.தபேந்திரன்



“போர்ப்படை தன்னில் தூங்கியவன் வெற்றி இழந்தான். கொண்ட பள்ளியில் தூங்கியவன் கல்வி இழந்தான்” எனப்பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம் பாட்டெழுதினார்.

இரத்தமும் சதையுமான உயிரினங்கள் யாவற்றுக்கும் தேவையான ஒன்று நித்திரைதான். ஆரோக்கிய வாழ்க்கைக்கு நித்திரை சரியான அளவில் கொள்ளப்பட வேண்டும்.

ஆனால் நித்திரையின் மணித்தியால அளவு உயிரினங்களுக்கு ஏற்ப மாறுபடும்.

அதிலும் மனிதர்களாயின் வயதுப் பருவங்களுக்கு ஏற்ப மாறுபடும்.

“தாயகத்தில் வாழ்பவர்களைப் போல நாளாந்தம் ஒழுங்காக நித்திரை கொள்ள வேண்டும் ”

இதுதான் புலம்பெயர் தேசங்களில் வாழும் எம்மவர் பலரின் ஆசையெனலாம்.

நித்திரையைத் தொலைத்து குளிரில் உடலை வருத்தித்தான் பணம் உழைக்கின்றோம்.

நாம் அனுப்பும் பணம் Foreign Currency அல்ல Blood Currency. அதாவது வெளிநாட்டுப் பணம் அல்ல. இரத்தப் பணம். எமது இரத்தம் தான் பணமாக வருகின்றது எனக் கூறுவோர் தான் பலர்.

“உடலைப் பிழிந்து உயிரை ஒடுக்கி வருவது தான் வெளிநாட்டுப் பணம்.”

புலம்பெயர் தேசத்துக் கவிதைகளில் இது ஒன்று.

இந்த உண்மையை உணர மறுப்போர் தான் தாயகத்தில் அதிகம் பேர்.

புலம்பெயர் வாழ்வின் வலிகளைத் தெரிந்தவர்களுக்குத் தான் நித்திரையின் அருமை புரியும்.இரண்டு வேலை அல்லது மூன்று வேலை செய்தால் தான் தம்மையும் கவனித்து தாயகத்திற்கும் பணம் அனுப்ப முடியும்.

அங்கு காலை 7 மணிக்கு வேலைக்குப் புறப்பட்டு மாலை ஆறு அல்லது ஏழு, எட்டு மணிக்கு வேலை முடிந்து வீடு வருவோர் தொகை காற்பங்கினர் மட்டுமே எனலாம்.

ஏனைய முக்கால் பங்கினர் மூன்று வகையாக வேலைக்குப் போபவர்கள்.

மதியம் 12 மணிக்கு வேலைக்குப் புறப்பட்டு நள்ளிரவு ஒரு மணிக்கு வீடு திரும்புவோர் ஒரு வகை.

இன்னொரு வகையினர் மாலை 6 மணிக்கு வேலைக்குச் சென்று காலை 8 மணிக்கு வீடு திரும்புவோர். இவர்கள் வேலையில் தீவிரமாக இயங்கி சொட்டு நித்திரையும் கொள்ளாது, வீட்டில் வந்து நித்திரை கொள்ள முயற்சிக்கும் போது பாடசாலை செல்லாத பிள்ளைகள் இருந்தால் “அப்பா, அப்பா ” என அவர் மேல் துள்ளிக் குதித்து நித்திரை கொள்ளவிடாமல் செல்லம் பொழிவார்கள். பிள்ளைகளுடன் கோபிக்க மனம் வராது.

நித்திரை வெறியுடன் தான் திரும்பவும் வேலைக்குப் போக வேண்டும்.

இன்னுமொரு தொகுதி ஆட்கள் நள்ளிரவு 12 அல்லது 1 மணிக்குப் புறப்பட்டு வேலைக்குச் செல்வார்கள். அடுத்தநாள் காலை 8 மணிக்குத் தான் வீடு திரும்புவார்கள்.

இன்னும் சிலர் நித்திரையை இரண்டு பகுதிகளாகக் கொள்வார்கள். பகலில் ஒரு துண்டு. இரவில் இன்னுமொரு துண்டு.

நித்திரைக் குறைவு காரணமாக உடல் நலக் குறைவு மட்டுமல்ல உளநலக் குறைவையும் புலம்பெயர் வாழ்வில் எதிர்நோக்கி அதற்காக சிகிச்சை பெறுவோரும் உள்ளனர்.

சனி அல்லது ஞாயிறு தினங்களில் தமது நாட்டு நேரம் காலை 10 மணிக்கு முன்னர் தொலைபேசி அழைப்பை மேற்கொள்ள வேண்டாமெனக் கூறுவார்கள். அந்த ஒரு வாரக் களைப்பையும் மூச்செறிந்து நித்திரை கொள்வார்கள்.

நித்திரையைத் தொலைத்து நிம்மதியைத் தொலைத்து அனுப்பும் பணம் தான் இங்குள்ள பலருக்கு வந்து சேருகின்றது. போர் முடிந்து 12 வருடங்கள் கடந்து விட்டது. ஆனாலும் புலம் பெயரும் கனவைத் தொலைக்காத இளையோர் தொகை பல்லாயிரக்கணக்கில் உள்ளது. ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்வதில் நாட்டம் செலுத்துகின்றனர். இதனால் தாயகத்தில் இன விகிதாசாரம் மாற்றமடைகிறது. பாராளுமன்ற உறுப்பினர் தொகை தொடக்கம் பல்கலைக்கழக அனுமதித் தொகை வரையில் குறைக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 11 பாராளுமன்ற உறுப்பினர் தெரிவாகும் நிலை இருந்தது. தற்போது இவ் எண்ணிக்கை 7 ஆகக் குறைவடைந்து விட்டது. இது போன்ற நிலை அரசியல் அதிகார நிலையில் பலவீன நிலையை ஏற்படுத்துகின்றது.

நித்திரை எனும் செல்வத்தின் பக்கமாக மீண்டும் வருவோம். உண்மையில் ஒழுங்காக நித்திரை கொள்ள வாய்ப்புக் கிடைப்பது என்பது ஒரு வகையான செல்வம் தான். சிலரைப் பார்த்திருக்கிறேன் படுக்கையில் தலையை வைத்ததும் நன்றாகக் கண்ணயர்ந்து நித்திரை கொள்வார்கள்.

பொக்கற்றுக்குள் நித்திரையை வைத்திருந்து கைவிட்டு எடுத்தவுடன் வருவது போல நித்திரை கொள்வார்கள். இது ஒரு வகைச் செல்வம் தான். எல்லோருக்கும் கிட்டாது. ஆனால் இவர்களை இடையில் எப்படித் தான் எழுப்பினாலும் எழும்பமாட்டார்கள்.

இதனை ஒரு வகைக் கும்பகர்ண நித்திரை எனலாம்.

இன்னுமொரு சாரார் தலையணையில் தலை வைத்தாலும் நித்திரை வர நேரமெடுக்கும். இவர்கள் இரவில் சின்ன ஒரு சத்தமென்றாலும் உடனேயே எழுந்து விடுவார்கள்.

வர்த்தகம் செய்பவர்களில் பெரும்பாலானவர்கள் இவ் வகையினர்.

எமது நாட்டில் தூங்கா நகரமாக ஓரளவு கொழும்பைச் சொல்லிக் கொள்ளலாம்.

காங்கேசன்துறை நகரம் சீமெந்துத் தொழிற்சாலை காரணமாக 1983 இற்கு முன்னர் தூங்கா நகரமாக இருந்தது.

**“ இன்னொரு வகையினர் மாலை 6 மணிக்கு வேலைக்குச் சென்று காலை 8 மணிக்கு வீடு திரும்புவோர் இவர்கள் வேலையில் தீவிரமாக இயங்கி சொட்டு நித்திரையும் கொள்ளாது, வீட்டில் வந்து நித்திரை கொள்ள முயற்சிக்கும் போது பாடசாலை செல்லாத பிள்ளைகள் இருந்தால் “அப்பா, அப்பா ” என அவர் மேல் துள்ளிக் குதித்து நித்திரை கொள்ள விடாமல் செல்லம் பொழிவார்கள். பிள்ளைகளுடன் கோபிக்க மனம் வராது. ”**

போருக்கு முந்திய காலத்தில் சினிமாத் தியேட்டர்கள் கொடி கட்டிப் பறந்த காலத்தில் இரவு 9.30 மணிக்கும் படக் காட்சிகள் இருந்தன. அப்போது படம் நள்ளிரவு 12.30 மணிக்கு முடிவடையும்.

சிலரைப் பார்த்திருக்கிறேன் குலுங்கிக் குலுங்கி ஓடும் வாகனத்தில் கூட நித்திரை கொண்டபடியே செல்வார்கள். மலையில் இருந்து உருட்டி விட்டாலும் கூட நித்திரை கொண்டபடியே தான் விழுவார்கள்.

சிலர் பணம் உழைக்கும் ஆசையில் அதிக பணம் வருகின்றதேயென ஓடி ஓடி உழைப்பார்கள். இரவு பகல் நித்திரை எதையும் பார்க்க மாட்டார்கள்.

இருபது, முப்பது வயதுகளில் பழகிய பழக்கத்தின் எதிரொலி உடலில் நாற்பதுகளில் கேட்கத் தொடங்கும். அப்போது தீராத நோயாளியாகி விடுவார்கள். நோய் உபாதைகளால் பாதிக்கப்பட்டு 50 வயதில் 60 வயதைத் தாண்டிய முதுமைத் தோற்றத்தை அடைவார்கள். மருந்துக் குளிசைகளுடன் நடைபிண வாழ்க்கை வாழ்வதற்குப் பழக்கப்பட வேண்டும்.

எமது பிரதேசங்களிலும் தொலைக்காட்சி, இணையப் பாவனைகளில் சிறுவர்கள் அதிகமாக ஈடுபட்டு தமது உடல் நலத்திற்கேற்ற அளவு நித்திரை கொள்ளாமல் விடுகின்றனர். இதனால் உடல் நலத்தை மட்டுமல்ல கல்வி அடைவையும் இழக்கின்றார்கள். மண் குடிசை வீடு இருந்த போது கிடைத்த ஆரோக்கியம் அமெரிக்கன் பாசன் கல்வீடுகளில் மனிதர்களுக்குக் கிடைக்கவில்லையென்பது மறுக்க முடியாத உண்மை.

நித்திரை எனும் செல்வத்தை ஒழுங்காகப் பெற்றுக் கொள்வதை உறுதி செய்து உடல் ஆரோக்கியத்தைப் பெறுவது குறித்த விழிப்புணர்வு ஊட்டப்படல் வேண்டும். ■

# இதைக் கொஞ்சம் கேளுங்கோவன்!

கறுப்பர் கண்ணப்பன்

என்ர மனிசி சொன்னதை மறந்து, ஆய்ஞ்ச பயித்தங்காய் எல்லாத்தையும் சந்தையில கொண்டே வித்துப்போட்டன். திரும்பி வரேக்க இடை நடுவில தான் நினைவு வந்திச்சு, மதியச் சமையலுக்கு பயித்தங்காய் கொண்டுவரச் சொன்னவள்.


என்ர கடவுளே பயித்தங்காய் இல்லாமல் போனால் திண்டு போடுவாள். ‘ஆற்ற நினைப்பில சீவியம் நடக்குது, வீட்டு நினைப்பு சொட்டும் இல்லை, கல்யாணம் கட்டின நாளில இருந்து இதே தான் புழைப்பு’ ஏதேதோவெல்லாம் சொல்லி இண்டைய நாள் முழுதும் நச்சரிச்சுக் கொண்டே இருப்பாள். வயது எழுபது என்டாலும் வாய்க்கு வந்தபடி பேசிப் போடுவாள். இண்டைய நிம்மதி போயிடும்.

வந்த வழிய திரும்பி சந்தைக்கு போய் பயித்தங்காய் வித்த மனிசியட்டை ஒரு கிலோ பயித்தங்காய் வாங்கினன். தொண்ணூறு ரூபா வாங்கிப் போட்டுது மனிசி. எனக்கு மண்டை விறைச்சுப் போச்சு. என்னட்ட நாப்பது ரூபாக்கு வாங்கி தொண்ணூறு ரூபாக்கு வித்து கொள்ளை லாபம் பாக்கிறகூறு கெட்டதனத்தை கேட்டுப்போட்டன்.

நாசமா போன மனிசி “வாங்கிறதெண்ட வாங்கு இல்லாட்டி போ என்டிச்சு” நாள்பூரா நாங்கள் காத்துக் கிடந்து விக்கவேணும், பழுதாகி கழிவு எவ்வளவு போகும் தெரியுமே என்டெல்லாம் வசனம் பேசி என்ர வாயை அடக்கி போட்டுது மனிசி.

‘இதக் கொஞ்சம் கேளுங்கோவன்’ நான் விதையை நட்டு தண்ணி ஊத்தி, முளையைப் பாத்து, மண்ணைக் கிண்டி, பாத்தி கட்டி, பந்தல் போட்டு, உரத்தையிட்டு, நோய் நொடி பிடிக்காமல் மருந்தை அடிச்சு, வெயில் காய்ஞ்சு காத்துக் கிடந்து காயை ஆய்ஞ்சு போறதுக்குள்ள எவ்வளவு சிரமம், எவ்வளவு மினக்கேடு, எவ்வளவு செலவு. காயை வித்தா பத்து ரூபா லாபம் வாறதே கஸ்டம். இருந்த இடத்தில, இருந்து கொண்டு கொள்ளை லாபம் அடிக்கிற வியாபாரத் தந்திரம் தான் எல்லா இடமும் நடக்குது.

போனா போகட்டும் 30 வீதம் லாபம் வந்தா காணாதே. எங்கட வயித்திலயும் அடிக்காம சனத்தின்ர மடியிலயும் கை வைக்காமா ஞாயமா நடந்தா என்ன? “அவரவருக்கு ஞாயம் அவரவர்க்கு” எண்டாலும் பொது ஞாயம் என்றொண்டு இருக்கெல்லே! கடவுளுக்கு கணக்கு காட்டோணு மெல்லே. இத ஆரெட்ட சொல்லுறது. ஆர்தான் வந்து கதைப்பினம். எங்கள ஆளுறவ இத கவனத்தில கொள்ளாயினம். எலெக்சன் என்டா வீடு வீடா வருவினம் அவ்வளவுதான்.விவசாய அமைச்சரா வந்தவர் மட்டும் ஒருக்கா ஒரு தோட்டத்துக்கு போவார். படத்தை எடுபார், பேட்டி குடுப்பார், விவசாயிகளின் பிரச்சினை தீர்க்கப்படும் என்பார், பொருளாதாரம் முன்னேற்றமடைய வழி எடுக்கப்படும் என்பார். பின் காணாமல் போடுவார். “எங்கட வேட்டி கோவணமாகிக் கொண்டு போகும்” அவ்வளவு தான்.



# இளமைக்கு மருந்து



ந.குகபரன்

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் செவ்வாய்க்குப் போகத் துடிக்கும் மனிதன் தன் அகத்தில் மூண்டெழும் நெருக்கடிகளைத் தீர்க்க வழி தெரியாது ஏங்கித் தவிக்கிறான். மீட்சிக்கான வழியை அறியாது தனக்கான பொறிகளைத் தானே பின்னி, உட்சுருங்கி, காலத்தை எரித்துக் காயப்படுகிறான். இந்த வலிமிகு வரலாறு இன்று நேற்றுத் தொடங்கியதன்று. மனிதன் தன்னை உலகத்தின் தீர்மானசக்தி என எண்ணத் தொடங்கிய காலத்தில் இருந்து உருப்பெற்ற நோயிது. கூடி வாழ்ந்த வாழ்க்கையைக் குலைத்து முரண்பாடுகளைக் கூர்மையாக்கியதன் விளைவுகளை உலகம் சுமக்கிறது.

'ஒருவரது மகிழ்ச்சியான வாழ்க்கையை தனியே அவர் தீர்மானிக்க முடியாது. நேயமுள்ள மனிதரொருவருக்கு அது சாத்தியமுமாகாது. சுற்றியுள்ளவர்களது செயற்பாடுகள் ஒருவரது உளச்சமனிலையைப் பாதிக்கும். இங்கு ஒவ்வொருவரும் தத்தமது உளச்சமநிலையைப் பேணுவது அவசியமாகும். ஆரோக்கியமான உளச்சமனிலையைப் பேணிக்கொள்வதற்கு அக புற காரணிகளின் பங்கினைத் தெளிவாக அறிந்து கொள்ளுதல் பிரதானமாகும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டில் வாழ்ந்தவர் பிசிராந்தையார். மூப்பு எய்திய காலத்திலும் மிடுக்கோடு வாழ்வதன் இரகசியம் யாது? என்ற வினாவிற்கு அவர் உரைக்கும் மருந்து எக்காலத்திற்கும் பொருந்திவரும் தன்மையது. அரசியல், சுற்றம், குடும்பம் என சமூகத்தின் அலகுகள் ஒவ்வொன்றினதும் ஆரோக்கியம் தனிமனித நடத்தைப் போக்கைத் தீர்மானிக்கும் தன்மையைப் பிசிராந்தையார் தனது பதிலில் வலியுறுத்துகிறார். அந்தச் செய்யுள் இதுதான்.

யாண்டு பலவாக நரையில ஆகுதல்
யாங்கு ஆகியர் என வினவுதிர் ஆயின்
மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர்
யான் கண்ட அனையர் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்க அதன்தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே.

மாட்சிமைமிக்க மனைவியும், அறிவுமிக்க மக்களும், தொடர்புறும் அனைவரும், தீயவை புரியாத அரசனும், நிறைவான சான்றோரும் வாழும் சூழலில் துயர் என்பது அணுகாது என்பதை தெளிவுற உரைக்கிறார் புலவர்.


மனஅழுத்தம் மிகும்போது இளமையிலேயே முதுமை வந்துவிடுகிறது. நரை முதுமையின் அடையாளம். நரை திரை இன்றி இருத்தல் தோற்றத்தில் இளமையைத் தரும். திரை என்பது உடற்சுருக்கம். தசரதன் தான் முதுமையடைந்து விட்டதை உணர்ந்து அதிகாரத்தை இராமனிடம் கையளிக்க "மின்னெனக் கருமைபோய் வெளுத்ததோர் மயிர்" காரணமாயிற்று. என்றும் இளமையோடு இருப்பதே எல்லோரதும் அவா. இதனைப் பேணுவதற்கு புறத்தே ஆயிரம் மருந்துகளை அறிவியல் தருகிறது. இதை வைத்து பெருவர்த்தகமும் நடக்கிறது. ஆனால் பிசிராந்தையார் சொல்லும் மருந்து அகம் சார்ந்தது, பக்கவிளைவற்றது, நிலைபேறானது.

தனிமனித மகிழ்ச்சி குடும்பத்தில் உயிர்க்கிறது. மாட்சிமை மிக்க மனைவி அமையப்பபெற்ற கணவனும் பண்புநிறை கணவன் அமையப்பெற்ற மனைவியும் கூடிவாழ்வதே மகிழ்ச்சியான வாழ்க்கையின் ஆதாரம். அடுத்து பிள்ளைகள், அவர்கள் நற்பண்புமிக்கவர்களாகத் திகழவேண்டும். "இவன் தந்தை என்னோற்றான் கொல்" என்று வள்ளுவர் சொல்வது போல பெற்றோர் பெருமையுறும் வண்ணம் அவர்கள் உயர்வு அமையவேண்டும்.

குடும்பம் செம்மையாக இருந்தால் மட்டும் போதாது. சுற்றியுள்ள சமூகத்தில் அறம் நிலவவேண்டும். தொடர்புறும் அனைவரும் அத்தகு அறம்மிக்கவர்களாக இருக்கும் போது, அறிவும் பணிவும் உயர்ந்த கொள்கையும் பூண்ட சான்றோர் ஊரில் வாழும்போது, அறத்தை வரித்து அதிகாரம் செய்யும் மன்னனது ஆட்சி நடைபெறும்போது துன்பத்திற்கிடமேது.

இதனை இன்று ஒரு கனவாக மட்டுமே கண்டு களிக்க முடியும். அந்த அளவிற்கு வாழும் சூழல் வறண்டு கிடக்கிறது. வழிப்படுத்துவதற்குரிய சமயங்களின் பெயராலும், சட்டங்களின் பெயராலும்கூட நெருக்கடிகள்தான்மிகுகின்றன. "கூத்தாடிக் கூத்தாடிப்: போட்டுடைத்த" கதையாக வாழ்க்கையை முடிக்கப் போகிறோமா? இல்லை. வலிவென்று நிமிரப் போகிறோமா? எல்லாம் எம் கைகளிலேயே.

# சிந்தாந்தன் கவிதைகள்



## நோயுற்றவனின் கனவு


நோயுற்று வீழ்ந்தவனின் கனவில்
மாத்திரைகள் மீன்களாக நீந்துகின்றன.
வெள்ளையும் சிவப்பும் நீலமுமாக
நீந்தும் மீன்கள் அவனது கனவுகளை
மீன் தொட்டியாக்கிவிடுகின்றது.
காலத்தின் அசைவாய்
ஒவ்வொரு மீன்களும் அவனது
தொண்டைக் குழிக்குள் இறங்குகையில்
கசப்பாயும் இனிப்பாயும்
வாழ்க்கையை உணரத்தொடங்குகின்றான்.
பல நூறு கனவுகளும் ஒன்றாகி
காட்சிச் சீலையாய் அசையும்
ஒவ்வொரு கணத்திலும்
தேகமே மீன்தொட்டியாகும் அதிசயம்
அவனுள் நிகழ்கின்றது.
இப்போது
அவன் காண்கின்றான்
கனவுக்கும் நினைவுக்கும் இடையில்
நீந்திச் செல்லும் எண்ணற்ற மீன்களை.



## கடவுளைக் கூட்டி வருபவன்

தன் மந்திரங்களை சாகச வார்த்தைகளால்
உச்சரிப்பவன்
கடவுளைக் கூட்டி வருகின்றான்.
அவனது கடவுள்கள்
சிறிதும் பெரிதுமாக
வெண்மையும் கறுப்புமாக
ஆணும் பெண்ணுமாக
அவனைத் தொடர்ந்து வருகின்றனர்.
காலத்தின் சூட்சுமத்தை உணர்ந்தவனின்
வார்த்தைகள்
அண்டத்தைப் பிளந்துவிடுகின்றன.
ஒவ்வொரு கடவுளும்
அவனுள் அருவமாக கலந்துவிடும்
மாயத்தை அவன் நிகழ்த்திக் காட்டுகின்றான்.
விரலைக் கத்தியாக்கி
எலுமிச்சைகளை அறுக்கின்றான்.
வாளின் கூர்முனையில் ஏறி நடக்கின்றான்.
பேரண்டம் சுழலுமிடத்தில்
தன்னை நிலைநிறுத்தி
கடவுளின் குரலில் குறிசொல்லத் தொடங்குகின்றான்.
அவனது முகத்தில்
குங்குமத்திட்டுக்கள் குருதியாகி வழிகின்றன.
கண்ணற்று காதற்று வாயற்று
கரைகின்றார்கள் எண்ணற்ற பக்தர்கள்.
ஒரு பெருஞ்சோதிப் பிளம்பில்
உலகம் சுடர்வதாக
உங்களைப் போலவே
நானும் எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

**வேல் நந்தகுமார்**
விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை



கொரோனாவுக்கு பின்னரான

# வகுப்பறைக் கற்பித்தலும் இணையவழிக் கற்பித்தலும்

கொரோனா நோய்த் தொற்றுக்கு பின்னரான காலம் எமது வாழ்வைப் பொறுத்த வரை சிந்தனையிலும் செயற்பாட்டு வாழ்வியல் நடைமுறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதை யாரும் மறுக்க முடியாது. கி.பி, கி.மு என்பது போல கொ.மு , கொ.பி என சொல்ல வேண்டிய ஒரு காலகட்டத்தில் நாம் எங்கள் முகங்களை மூடி அகங்களில் உயிர்ப்பயம் சுமந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இக் கால கட்டத்தில் எமது இயல்பான சமூக வாழ்வும், தனிமனித அசைவியங்களும் என்றுமில்லாதவாறு முடக்கப்பட்டு கைகழுவுதல், சமூக இடைவெளி , சுய தனிமைப்படுத்தல், சமூக முடக்கம் போன்ற புதிய மந்திர சொற்களுக்கு கட்டுப்பட்டவர்களாக வாழ வேண்டியவர்களாக ஆக்கப்பட்டுள்ளோம். ஒரு வகையில் நாங்கள் விதைத்ததன் அறுவடை தான் இது என்றாலும் இந் நோய்த் தொற்றுக் காலத்தில் மிகப் பெரும் பாதிப்பைச் சந்தித்துக் கொண்டிருக்கும் ஒரு துறையாக கல்வித்துறையே விளங்குகிறது.

பல கற்றல் நாட்களை விழுங்கி விட்டு நிரப்ப முடியா இடைவெளியை கல்வியில் தந்துள்ள இத் துயரம் எப்போது முற்றாக முடிந்து மீண்டும் பாடசாலைக் கல்வி சுமுக நிலையை அடையும் என்பதே பல பெற்றோர்களதும் கற்றோர்களதும் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது. பாடசாலைக் கல்வி மட்டுமன்றி, ஆசிரியர் கற்றல் நடவடிக்கைகள், பல்கலைக்கழகம் சார் கற்றல் செயற்பாடுகள் என அனைத்துமே குழப்பத்துக்குள்ளாக்கப்பட்டதை காண முடிகிறது. இந்தக் குழப்பத்தின் எதிர்கால விளைவு மிக நீண்டதாக இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

கல்வித்துறையில் இத்தகைய நெருக்கடிகள் ஏற்படும் போது கற்றல் கற்பித்தல் செயன்முறைகளில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தி செயற்படுத்தப்பட்டு வந்துள்ளமை காலம் காலமாக நிகழ்ந்து வருகின்ற தொன்றாகும். இதற்கு சுனாமி அனர்த்தம் மற்றும் போர் அனர்த்தத்திற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட கல்வித் திட்டமிடல் சான்றாகும். அந்த வகையில் இப்போது உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள கொரோனா நோய்த்தொற்று அனர்த்தம் அழிந்து கொண்டிருக்கும் கல்வியை மீட்டெடுப்பதில் புதிய சிந்தனைகளுக்கும் வித்திட்டுள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை.

இது பாடசாலை, வகுப்பறை, ஆசிரியர், மாணவர் என்ற தொடர்புகளை இழக்க செய்துள்ளது. இக் காலத்தில் வகுப்பறைக் கற்றல் - கற்பித்தலுக்கு மாற்றீடாக இலத்திரனியல் தொழிநுட்ப அறிவை மனிதவள அறிவுப் பரவலாக்கத்துடன் இணைந்ததாக தொழிநுட்ப புரட்சியை ஆக்க வழியில் பயன்படுத்தும் நோக்குடன் இன்று இணையவழிக் கற்றல், நிகழ்நிலைக் கற்றல், செயல்வழிக் கற்றல் - கற்பித்தல் என புதிய கற்பித்தல் முறைமைகள் அறிமுகம் செய்யப்பட்டு இவற்றினூடாக கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதைக் காண முடிகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் தருகின்ற சில அனுபவங்களை இத்தகைய இணைய வழிக் கற்றலானது தர முடியாது என்றாலும் கூட இன்றைய தனிமைப்படுத்தப்பட்ட வாழ்க்கைச் சூழலில் கல்வியை ஏதோ ஒரு வழியில் தொடர இவற்றை விட மாற்று வழி இருப்பதாகவும் தெரியவில்லை.

வகுப்பறைக் கற்றல் -கற்பித்தல் என்பது நிறுவனமயப்படுத்தப்பட்ட பாடசாலை என்ற கற்றல் நிலையத்தில் குறிப்பிட்ட ஒரு பௌதிகச் சூழலில் ஆசிரியரும் மாணவரும் நேரடி இடைவினைத் தொடர்பு கொண்டு ஆசிரியரின் கண்காணிப்பின் கீழ் கல்வி கற்கும் நிலையைக் குறிக்கும். இங்கு கரும்பலகை உட்பட கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடும் கல்வியில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்குரிய மேலதிக செயற்பாடுகளும் சாத்தியமாகும். இன்று இவ் வகுப்பறைகள் சுய திறன் வகுப்பறைகள் என புதிய தகவல் தொழிநுட்ப மாற்றங்களுக்கு உட்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய கொரோனாக் காலம் இத்தகைய வகுப்பறைக் கல்விக்கு மாற்றீடாக நாம் இருந்த இடத்தில் இருந்துகொண்டே கணினி திரைகளையும் சிமாட் கைத் தொலைபேசியும் பயன்படுத்திக் கற்கக் கூடிய இணையவழிக்கல்வி, நிகழ்நிலைக்கல்வி , Zoom செயல்வழியிலான கல்வி என்பவற்றை அறிமுகம் செய்துள்ளது.

இத்தகைய வசதிகளை கொண்டிருப்பவர்களே இக்கல்வியை பெறக்கூடிய நிலை இருப்பதுடன் இவற்றுக்கு பொருத்தமான கவறேச் உள்ள இடங்கள், data கட்டணங்கள் என்பனவும் இதில் செல்வாக்கு செலுத்துகின்றன. இதனால் கல்வியில் சம வேலைவாய்ப்பு என்ற எண்ணக்கரு அடிபட்டுப் போகின்றது.

வகுப்பறைக்கல்வி போன்ற நேரடிப் புலக்காட்சி, கட்டுப்பாடுகளுக்கு இங்கு பொறுப்பு இல்லாததால் இங்கு வினைத்திறனான கற்றல் - கற்பித்தல் நிகழ்கின்றதா? என்பது கேள்விக் குறியாக உள்ளது. ஆயினும் இதில் காணப்படும் கற்பித்தல் விடயங்களை பரிமாற்றக்கூடிய வசதி,வீடியோ, ஓடியோ, றெக்கோட் வசதி, விடயங்களைப் பலரும் பயன்படுத்தக் கூடிய வசதி, உலகெங்கும் உள்ள மிகச்சிறந்த வளவாளர்களை ஒன்றிணைக்கக்கூடிய வசதி என்பன சிறப்பான விடயங்களாக உள்ளன. கற்றல் அனுபவத்தை அகலப்படுத்தவும் ஆழப்படுத்தவும் பல வசதி வாய்ப்புக்களை இவை கொண்டுள்ளன. எந்தக் கருவியும் அதனைப் பயன்படுத்தும் வினைத்திறன் மிக்க மனித வளத்தாலேயே செழுமைப் படுகிறது. அடிப்படையில் கற்றலுக்கான இத்தொழிநுட்ப வளங்களின் சிறப்பும், அவற்றைச் சிறப்புறக் கையாளும் மனிதர்களாலேயே சிறப்புப் பெறுகிறது என்பதும் மறுப்பதற்கில்லை.

மறு வளமாக இத்தகைய கருவிகளை கட்டுப்பாடு கண்காணிப்பு இன்றி கட்டிளமைப் பருவ மாணவர் கைகளில் வழங்குதல் என்பது ஒழுக்க விழுமியங்கள் சார்ந்து எதிர்மறை விளைவுகளையும் ஏற்படுத்தக் கூடியன என்பதையும் நாம் மறந்து விட முடியாது. அதேவேளை தொடர்ச்சியாக பல மணிநேரங்கள் இக்கருவிகளை பார்த்துக்கொண்டிருப்பதன் மூலம் ஆசிரியர், மாணவர்களின் உடல், உள ஆரோக்கியம் பாதிப்படையும் ஆபத்துக்களும் உண்டு. ஒரு புறம் கைத் தொலைபேசிப் பாவனையை மாணவர்களிடம் பாடசாலைகளில் தடைசெய்து விட்டு இப்போது இத்தகைய தொலைபேசி மைய, கணினி மையக் கற்பித்தலை ஊக்கப்படுத்துவது முரண் நிலையையும் ஏற்படுத்தக்கூடும். மறுவளமாக என்னதான் online பரீட்சை என்று சொன்னாலும் இன்னமும் இலங்கையின் பிரதான பரீட்சைகள் அனைத்தும் எழுத்துப் பரீட்சைகளாகவே முன்னெடுக்கப்படுகின்றமையும் இந் நவீன கற்பித்தல் முறைமைகள் மீதான நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்குகிறது. ஆயினும் இலங்கையில் 2023ல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கலைத்திட்ட மாற்றத்தில் கலப்புக் கற்பித்தல் முறை என்பதனுள் இத்தகைய இணைய வழிக் கற்றல் - கற்பித்தல் முறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.


மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை என்பதனால் எதிர்காலக் கல்வி உலகில் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் அனுபவத்திற்கு சமாந்தரமாக இத்தகைய இணைய வழி கற்றல் - கற்பித்தல் சார் அனுபவங்களும் நேர் மனப்பாங்குடன் வளர்த்தெடுக்கப்பட வேண்டியது அவசியம் என்பதுடன் இவற்றை எமது கலாசார பண்பாட்டு விடயங்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் கையாள்வதும் முக்கியமானதாகும். அந்த வகையில் இத்தகைய கலப்பு கற்பித்தல் முறை மூலம் இரண்டு பொதுப் பரீட்சைகள் வெற்றிகரமாகக் கடந்துள்ளன. நாம் எதிர்கால நோய் நெருக்கடி நிலையை கவனத்தில் கொண்டு எமது அழியாச் சொத்தாகிய கல்வியை எல்லாப் பிள்ளைகளுக்கும் உறுதிப்படுத்திக் கொள்வதும் அவசியமாகும். கூட்டுப் பொறுப்பு மிக்க பல முயற்சிகளால் சாத்தியமாகும் என்பதில் ஐயமில்லை. ■

# அமரர் கலைத்தூது நீ.மரியசேவியர் அடிகளின் பணி காலத்தால் வாழும்

யோ.யோண்சன் ராஜ்குமார்

ஈழத்தின் நிராகரிக்க முடியாத ஆளுமைகளில் ஒருவர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகள். கடந்த 55 ஆண்டுகளாக கலை இலக்கியத்துறைகளோடும் சமூகப்பணிகளோடும் தன்னைக் கரைத்துக் கொண்டவர், இனம் மதம் மொழிகடந்த மனிதம் என்ற உயரிய சிந்தைனையை வாழ்வாக்கிக் கொண்டவர், திருமறைக் கலாமன்றம் என்ற கலாசார நிறுவனத்தினை உருவாக்கி அதனூடாக இறுதிவரையும் நாடு தழுவியும் நாடு கடந்தும் பணியாற்றியவர். அம்மன்றத்தினூடக உருவாக்கம் பெற்ற பல படைப்பாளிகள் இன்று உலகம் முழுவதும் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் இருபது பிராந்தியங்களிலும் வெளிநாடுகள் சிலவற்றிலும் அமைக்கப்பட்டுள்ள திருமறைக் கலாமன்றக் கிளைகளுக்கூடாக பல்வேறு பணிகள் இன்றுவரை ஆற்றப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் அவரது பாரிய முயற்சியினால் உருவாக்கப்பட்ட ஐந்து கட்டடங்களில் பல்வேறு கலைப்பணிகள் வினைத்திறனுடன் ஆற்றப்படுகின்றன.

ஈழத்திலே யுத்தம் கொழுந்துவிட்டெரிந்த காலத்தில் தனித்து நின்று கலை செய்து கலையினூடாக தமிழ் இனத்தின் துயரங்களை உலகறிய செய்ததுடன் துயருற்ற மக்களுக்கான கலைவழி ஆற்றுப்படுத்தலையும் செய்தவர் மரியசேவியர் அடிகள். கலைவழியாக பல்வேறு சமாதான முயற்சிகளை மரியசேவியர் அடிகள் முன்னெடுத்தார். வார்த்தைகளற்ற நாடகம் என்ற நாடக வகைமையை உருவாக்கி தலை நகரில் யுத்தத்தின் அவலத்தினையும் சமாதானத்தின் அவசியத்தையும் அப்படைப்புக்கள் வெளிப்படுத்தி நின்றன.



படைப்பாளுமை மிக்க கலைஞனாகிய மரியசேவியர் அடிகள் 50க்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியவர். பல்வேறு ஆய்வு நூல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் பல்வேறு மொழிகளில் எழுதியவர். மூன்று கலாநிதிப் பட்டங்களைப் பெற்ற கல்விமான். தனது கலாநிதிப் பட்டத்திற்காக சைவசித்தாந்தத்தினை ஜேர்மன் மொழியில் எழுதி ஆய்வு செய்தவர். உலக புகழ்ப்பெற்றதான திருப்பாடுகளின் நாடக மரபினை தமிழுக்குரியதாக மாற்றி வருடந்தோறும் பிரமாண்டமாக மேடையேற்றி வந்ததுடன் சர்வதேச தரத்தில் அதன் கலைத்துவத்தினை உயர்த்தி வைத்த நாடக ஆசிரியர், நெறியா ளர். ஆய்வாளர். பன்மொழி அறிஞர். பேச்சாளர். மெய்யியல்துறையில் பேராசிரியர். கவிஞர் என பன்முக ஆளுமைகளுக்குச் சொந்தக்காரர்.

எமது மரபுவழிக் கலைகள் பேணப்படுவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டவர். யுத்தம் கொழுந்து விட்டெரிந்த காலத்தில் முதலாக தமிழ் விழா, இலக்கிய விழா, காப்பிய விழா, நாட்டுக்கூத்து விழா, இசை நாடக விழா, கிராமியக்கலை விழா, இசை விழா என வருடந்தோறும் பல்வேறு விழாக்களை ஒழுங்கு செய்து எமது மரபுக்கலைகளும் இலக்கியமும் அழிந்துவிடாது செழுமைபெற உழைத்தவர். ஈழத்தில் இன ஒற்றுமைக்காக இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக கலைகளினூடான பாலம் அமைத்து, பாரிய சமாதான முயற்சிகளை மேற்கொண்டவர். அவரது பணியின் சிறப்புணர்ந்த இலங்கை அரசு 2017இல் ‘சமாதானத்துக்கும் நல்லிணக்கத்திற்குமான’ மீயுயர் விருதினை வழங்கி கௌரவித்தது.

திருமறைக் கலாமன்றத்திற்கூடாக இதுவரை 80க்கு மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 200ற்கு மேற்பட்ட நாடகங்கள் தயாரிக்கப்பட் டுள்ளன. இதுவரை இருபதுக்கும் மேற்பட்ட நாடு கடந்த கலைப்பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு, புலம்பெயர்ந்த உறவுகளோடும் சர்வதேச உறவுகளோடும் கலைப்பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. கலைத்தூது அழகியல் கல்லூரி என்னும், நுண்கலைப் பாடசாலை அமைக்கப்பட்டு நூற்றுக்கணக்கான மாணவர்கள் அதில் பயிலுகின்றனர். அதில் நடனத்துறைக்கான முதுகலைமாணி பட்டப்படிப்புக்கள் கலைக்காவேரி மற்றும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தப்பட்டது, யாழ்ப்பாணத்தில் ஒரே ஒரு ஓவியக்கலையகமாக ‘கலா முற்றத்தினை’ நிறுவி ஈழத்தின் மூத்த இளைய ஓவியர்களின் ஆக்கங்கள் அதில் காட்சிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு எமது கலைகள் வளர்க்கப்படவேண்டும், அவை அடுத்த சந்ததிக்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என்ற பேரவாவுடன் இயங்கியவர் அடிகளார்.

உலகில் கோடிக்கணக்கான மனிதர்கள் வாழ்ந்து மடிந்தாலும் சில மனிதர்கள்தான் சமூகச் சிற்பிகளாக, சரித்திர நாயகர்களாக ஆச்சரியம் தரும் துருவ நட்சத்திரங்களாக வாழ்கிறார்கள். அவர்களில் ஒருவராக தன் வாழ்நாள் முழுவதையும் பணி வாழ்வுக்காய் கரைத்து, கலைவழி இறைபணி என்ற தாரக மந்திரத்துடன் செயலாற்றி, உலகம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான மனித மனங்களில் இடம்பிடித்துச் செல்லுகின்றவராக கலைத்தூது மரியசேவியர் அடிகள் திகழுகின்றார். அவர் வலாற்றில் என்றும் வாழ்வார் என்பது உறுதி. ■

# சீனாவின் இராஜதந்திர நகர்வும் இலங்கையின் சரணாகதி அரசியலும்

“ **கொழும்புத் துறைமுக நகரை தனி நிர்வாக மாவட்ட பிரிவாக மாற்றுவது இலங்கை அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணானது. மீறி அவ்வாறு செய்ய முடியுமென்றால் இத்துறைமுக நகரம் இலங்கையின் ஏனைய ஆட்புலப்பகுதிகளில் இருந்து தனித்துவ அடையாளத்தினை கொண்டிருப்பதாகக் கருத இடமுண்டு.** ”



**எஸ்.ஹரிகரன்**

தற்போது அதிகம் பேசப்படும் கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தினை மேலோட்டமாக ஆராய்கின்ற போதிலேயே சீனாவுடன் இலங்கை மேற்கொள்ளும் சரணாகதி அரசியலை புரிந்து கொள்ளமுடிகிறது. கொழும்பு அரசியல் நிலைமைகள் இதனை மேலும் வலுப்படுத்துவதுடன் இலங்கை சீனாவின் கொலனியாக மாறிவருகின்ற தோரணையினையும் வெளிப்படுத்துகிறது. இச்சட்டமூலம் இலங்கைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படும் நிலையில் கோட்பாட்டு மற்றும் சட்ட ரீதியிலான ஆய்வினை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகிறது.

குறித்த சட்டமூலத்தின் முகவுரையில் இலங்கைச் சனநாயகக் குடியரசின் பாராளுமன்றம் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவானது விசேட பொருளாதார வலயம் ஒன்றினை ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடு செய்வதற்கும், பதிவு செய்தல்கள், உரிமங்கள், ஆதரவளிப்புக்கள் மற்றும் வேறு அங்கீகாரங்களை அளிப்பதற்கும் அத்தகைய வலயத்திலும் வலயத்திலிருந்தும் வியாபாரங்களையும் வேறு செயற்பாடுகளையும் கொண்டு நடத்துவதற்கும் தத்துவமளிக்கப்பட்ட ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய வலயத்தினுள் செய்கின்ற வியாபாரத்தின் எளிதாக்கலின் மேம்படுத்துகைக்கான ஒற்றைச் சாளர முதலீட்டு வசதிபடுத்துனரொருவரின் அடையாளப்படுத்துகைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய வலயத்தினுள் அரசாங்க சந்தைபடுத்தற்படற்பாலதான மற்றும் கருத்திட்டக் கம்பனி சந்தைபடுத்தற்படற்பாலதான காணி மற்றும் வளவுகளினதும் மற்றும் அதிலுள்ள கூட்டாட்சி யாதனச் சிறுகூறுகளினதும் ஏற்பாடு செய்யப்பட்டவாறான கொடுக்கல் வாங்கல்களை செய்வதற்கும் ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

அத்தகைய வலயத்தினுள் சர்வதேச வர்த்தகம், கப்பற்றொழில் முகாமைத்துவ தொழிற்பாடுகள், கரைகடந்த வங்கித்தொழில் மற்றும் நிதிசார் சேவைகள், தகவல்தொழில் நுட்பம் மற்றும் வியாபார வழிமுறைகள், வெளியாட்களைப் பணிக்கமர்த்தல் முறை, கூட்டிணைக்கப்பட்ட தலைமையகங்களின் தொழிற்பாடுகள், பிராந்திய விநியோக தொழிற்பாடுகள், சுற்றுலா பயணத்துறை மற்றும் வேறு துணையாய சேவைகளை மேம்படுத்துவதற்கும் வசதிபடுத்துவதற்கும், அத்தகைய வலயத்தினுள் சர்வதேசப் பிணக்குத்தீர்வு நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்கும், நகர வசதி தொழிற்பாடுகள் மற்றும் அத்தகைய வலயத்தினுள் வதிவிட சமூகமொன்றின் குடியேற்றங்களை மேம்படுத்துவதற்கும், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்தல் என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச்சட்டமூலம் இலங்கையின் அரசியலமைப்பு மீது ஏற்படுத்துகின்ற தாக்கத்தை இக்கட்டுரை ஆராய்கிறது. சட்டமூலம் ஒன்று இலங்கையில் கொண்டு வரப்படுகின்ற போது அரசியலமைப்பின் 1 ஆம் 2 ஆம் 3 ஆம் 6 ஆம் 7 ஆம் 8 ஆம் 9 ஆம் 10ஆம் 11 ஆம் உறுப்புரைகளில் ஏதாவது தாக்கத்தினை ஏற்படுத்துமாக இருந்தால் அது பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவதற்குரிய வாக்கெடுப்புக்கும் மக்கள் தீர்ப்புக்கு விடப்படுவதன் மூலமே சட்டமாக்க முடியும் என அரசியலமைப்பின் 82ஆம் உறுப்புரை தெளிவாக குறிப்பிடுகிறது. ஆனால் இச்சட்டமூலமானது அந்த உறுப்புரைகளின் ஏற்பாடுகளினோடு ஏதோவொரு வகையில் பாதிப்பினை ஏற்படுத்துவதாக விமர்சகர்கள் கருதுகின்றார்கள்.

இச்சட்டமூலமானது நிர்மாணிக்கப்படும் துறைமுக நகரை தனித்துவமான ஆட்புலமாக அடையாளப்படுத்துகின்றது. நிர்வாக அதிகாரம் தனி ஒரு ஆணைக்குழுவிற்கு வழங்கப்படுகிறது. ஆனால் ஆணைக்குழுவின் உறுப்பினர் சபை இலங்கையின் பிரஜைகளை கொண்டிருக்க வேண்டுமா என்ற ஏற்பாடு சட்டமூலத்தில் காணப்படவில்லை. இது சந்தேகங்களை எழுப்புகிறது. இதன் அடிப்படையில் ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களின் கட்டமைப்பு பொறிமுறைகளில் இருந்து கொழும்பு நகர துறைமுக ஆணைக்குழு வேறுபடுகின்றதா? என்ற கருத்து நிலவுகிறது. அதேவேளை இலங்கையின் அரசியலமைப்பையும் இலங்கையின் ஆட்புலம், ஒற்றையாட்சி தத்துவம், இலங்கையின் நிதிக்கட்டுப்பாட்டு சட்டங்கள் என்பவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதாக விமர்சிக்கப்படுகிறது. அரசியலமைப்பின் ஐந்தாம் உறுப்புரையின் படி 25 நிர்வாக மாவட்டங்களை தாண்டி கொழும்பு துறைமுக நகரை தனி நிர்வாக மாவட்டப்பிரிவாக மாற்றுவது இலங்கை அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணானது. மீறி அவ்வாறு செய்ய முடியுமென்றால் இத்துறைமுக நகரம் இலங்கையின் ஏனைய ஆட்புலப்பகுதிகளில் இருந்து தனித்துவ அடையாளத்தினை கொண்டிருப்பதாக கருத இடமுண்டு.

இச்சட்டமூலத்தின் இரண்டாவது சரத்து அதன் எல்லைகளை அட்டவணைப்படுத்துவதோடு அந்த எல்லைகளுக்குள் வியாபாரம், வேறு தொழிற்பாடுகளுடன் கூடிய எல்லா கருமங்கள் ஒழுங்குபடுத்துகை மற்றும் கட்டுப்பாடு அந்த ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்படுதல் வேண்டும் என கூறுவது அரசியலமைப்புக்கு முரணான வார்த்தைப் பிரயோகமாகும். இச்சட்டமூலம் இலங்கையின் ஏனைய மாவட்டங்களின் நிர்வாக நடவடிக்கைகளில் இருந்து விடுபட்ட தனியான நிர்வாக பகுதியை அடையாளப்படுத்துவதற்குரிய மேலதிக ஆதாரமாக இருப்பதனை வெளிப்படுத்துகிறது.

இந்த எல்லைப்பகுதிக்குள் சமூக விதிகளை உருவாக்குதல், அபிவிருத்தி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளை தயாரித்தல் ஆணைக்குழு வசம் விடுக்கப்படுகிறது என துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலம் தெளிவாகக் கூறுகிறது. இலங்கையின் ஆட்புலமெங்கும் விதிகளை, நிதி சம்பந்தமான ஒதுக்கீடுகளை வழங்கும் அதிகாரம் பாராளுமன்றத்திடமும் பாராளுமன்றத்தின் சட்டங்கள் மூலம் உருவாக்கிய உள்ளூராட்சி அமைப்புகளிடமும் காணப்படுகிறது. மேலதிகமாக 13 ஆம் திருத்தம் ஊடாக அட்டவணைப்படுத்தப்பட்ட மாகாணங்களின் காணி மற்றும் தொழில் மேம்பாடு உட்பட்ட 33 வகையான அதிகாரங்களின் நிரல் அட்டவணைகள் மூலம் பகிரப்பட்டு மாகாணங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள் ஊடாக மக்களால் தெரிவு செய்யப்படும் தரப்புகளுக்கும் ஒழுங்கு விதிகளை உருவாக்கும் ஜனநாயக மரபு காணப்படுகிறது. ஆனால் இச்சட்டமூலம் இதை எல்லாம் மீறி தனியான பகுதியாகப் பிரித்தறிந்து ஒரு ஆணைக்குழுவிற்கு வழங்க வேண்டிய அவசியம் ஏன்? என்ற கேள்வி எழுகிறது. எனவே இலங்கையின் ஒரு பகுதியை மறைமுக காலனித்துவத்திற்கு உட்படுத்தும் சட்டமூலமா இது? என்ற கேள்வி முன்வைக்கப்படுகிறது.

கொழும்பு துறைமுக நகரானது ஏனைய பிரதேசங்களிலிருந்து வேறுபடும் தனித்துவமான பகுதியாக அமைகின்றதென குறித்த சட்ட மூலத்தை அடிப்படையாகக் கொண்டு விமர்சகர்கள் கருத்து முன்வைக்கின்றனர். இலங்கையின் ஆட்புல எல்லைக்குள் நிதி கட்டுப்பாட்டு, அதிகாரம், ஒழுங்கு விதிகள் சட்டமியற்றல் தத்துவம் என்பன இலங்கை பாராளுமன்றத்தின் வசம் அரசியலமைப்பால் விடப்பட்ட போக்கை காணலாம். அரசியலமைப்பின் 3ஆம் உறுப்புரை 4 ஆம் உறுப்புரை 148 ஆம் உறுப்புரைகள் இதனை தெளிவாக வரையறுக்கின்றன. வரி வசூலிப்புகள் நிதி கையாளுகைக்கான ஒழுங்கு விதிகளையும் ஒதுக்கீடுகளையும் வழங்கும் நிதிக்கட்டுபாட்டு அதிகாரத்தின் மீது இச்சட்டமூலமானது தாக்கத்தை ஏற்படுத்துகிறதா? என்ற கேள்வி மேலெழுவதைக் காணலாம். வெளி நாட்டு முதலீடுகளை ஊக்குவிக்க விசேட வரிச்சலுகைகள் வழங்க வேண்டியது அவசியம் ஆயினும் அதனைத் தாண்டி நிதிக் கையாளுகை உட்பட்ட செயல்களை ஒரு ஆணைக்குழுவிற்கு வழங்குதல் ஏற்புடையதா? என்பது கவனிக்கத்தக்கது.

எனவே சர்வதேச பூகோள அரசியலில் இந்து சமுத்திர பிராந்திய அதிகாரத்தை தக்க வைக்கும் போட்டிக்கு கொழும்புத் துறைமுக நகர் மையப்படுத்தப்படுகிறது. பிராந்தியத்தில் பண்பாட்டுப் பாதை விரிவாக்கம் தேசிய நாட்டின் எல்லைக்குள் சீனாவின் மூலோபாய நகர்வுகளுக்கான வலுவான சட்ட அங்கீகாரத்தைக் கொடுப்பதற்கான ஒரு ஏற்பாடா இது? என்ற கேள்வியும் எழுகின்றது. எனவே இந்த செயற்பாடுகளை ஆராய்கையில் கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழு சட்டமானது சீனா மற்றும் இலங்கை அரசியல் தொடர்பில் மிக முக்கியமான ஒன்றாகவே பார்க்க முடிகிறது.

சர்வதேச சட்டத்தின் படி ஒரு நாட்டின் 12 கடல் மைல் பகுதி அந்த நாட்டின் அடுத்துருவலயம் எனவே அழைக்கப்படுகிறது. அப்பகுதியின் தரை தோற்றம் கரையோர வளங்கள் தரைப்பகுதி யாவும் அந்த நாட்டின் இறையாண்மைக்கு உட்பட்டதென சர்வதேச சட்டம் தெளிவாக அடையாளப்படுத்துகிறது. பிறிதொரு அரசால் ஆக்கிரமிக்கவோ அல்லது உரிமை கோரவோ முடியாது. அடுத்த 12 கடல் மைல் தூரம் அந்த நாட்டின் பொருளாதார மையமாக அடையாளப்படுத்துகிறது. ஆகவே இத்தடையை தகர்க்க சீனாவின் ராஜதந்திர நகர்வூடான ஆக்கிரமிப்புக்கு இலங்கை பூரண சரணாகதி அடைந்து விட்டதா? என்ற அடிப்படையிலும் ஆய்வு செய்யப்படுகிறது. ஏற்கனவே சீனாவின் செயற்பாடுகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்தாலும் அவை குறிப்பிட்ட காலத்திற்கே வரையறுக்கப்பட்டிருந்தன. ஆனால் கொழும்பு துறைமுக பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலமானது காலப்பகுதியினை வரையறுக்காமல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை இலங்கையராக இருக்க வேண்டும் என வரையறுக்காமல் சட்டமூலத்தை வரைதல் இலங்கையின் தேசிய இறையாண்மையை பாதிக்கும் செயற்பாடாகும். இன்னும் சொல்வதாயின் இலங்கை சீனாவிடம் சரணாகதி அரசியலை மேற்கொள்ள தொடங்குவதற்கான சமிஞ்ஞையையே இது வெளிப்படுகிறது. ■

# என்ன உலகமடா பரமானந்தா? 1

**தமிழ்க்கவி**



இந்த தலைப்பை போட்ட உடனேயே பல்லி சொல்லுது. என்றாலும் உச்சத்துப் பல்லிக்கு அச்சமில்லை என்பதால் தொடர்ந்து எழுத விளைகிறேன்.

காலையில் எழுந்து எனது வேலைகளை முடித்தபின், கையிலொரு பத்திரிகையோ புத்தகமோ எடுத்துக் கொண்டு சற்று நேரம் ஓய்வாக அமர்வேன். அப்படி ஒருநாள் அமர்ந்த பொழுதில்தான் எனக்கிந்த பாரிய சிந்தனை முளை விட்டது. அப்படியே பரந்து விரிந்து பல பக்கமும் பாய்ந்து, மேய்ந்து என்னை கலக்கமுறச் செய்தது.

ஒன்றுமில்லை பக்கத்து வீட்டுப் பையன் பத்தாம் ஆண்டு படிக்கிறான். என்னிடம் ஏதாவது கதைப்புத்தகம் இருக்கிறதா என்று விசாரிக்க வந்தான் . பாவி தாய் கண்டுவிட்டாள். உடனே ஏதோ குடியே மூழ்கிப்போய் விட்டதாக கூச்சல்போட்டாள். என்ன புத்தகம்? என்னைத்தான் கேட்டாள்.

“அது சும்மா கதைப்புத்தகம் தான்” என்றேன். அவள் உடனேயே தன் கணவனுக்கு அதை அஞ்சல் செய்தாள். செய்யட்டும் செய்த முறை இருக்கிறதே அதுதான் எனக்கு ‘செம காண்டா’ யிற்றுது.

“இஞ்சே கேட்டியளே! இஞ்சேருங்கோ உவன் கிளியனை ஒருக்கா எண்ணண்டு கேளுங்கோ பக்கத்து வீட்டில போய் கதைப்புத்தகம் கேக்கிறான்.” அந்தாள் சற்றும் தாமதிக்காமல் வெளியே வந்து தன் மகனை பாசம் பொங்க அழைத்து “தம்பீ பள்ளிக்கூடப் பாடமெல்லாம் முடிச்சிட்டியோ? போய்ப்படி” என்றார். பையன் மறுபேச்சின்றி கண்ணாலேயே என்னிடம் ‘பிறகு வாறன்’ என்பதை அறிவித்து விடை பெற்றான்.

மிக நெருங்கிய வீடு. எனவே அங்கே பேசுவது எனக்கும் கேட்டது. கவனிக்கவும் ‘‘எனக்கும்’என்றால் ஏனைய பக்கத்து வீடுகளுக்கும்.

“என்ர ராசா, உன்னை நம்பி எத்தனை சீவன் இருக்கு. அப்பா தனிய கஸ்டப்பட்டு ஒண்டும் செய்யேலாது. நீ படிச்சு ஒரு நல்ல வேலையில சேந்தாத்தான் கொக்காவுக்கோ தங்கச்சிக்கோ கலியாணம் செய்யலாம். இனி தங்கச்சியின்ர படிப்பும் பாக்கவேணும். முழுக்கவனம் வைச்சுப் படிச்சாத்தான் பாஸ் பண்ண ஏலும்.ஓயெல், ஏயெல் எல்லாம் நீ நினைக்கிற மாதிரியில்லை சறுக்கினா பேந்தெடுக்க. ஒரே முறையில பாஸ் பண்ணேல்லயெண்டா மனம் விட்டுப்போம். சொல்வழி கேள் படி படி படியெண்டு சொல்லுறது அதுக்காகத்தான். ராசா நீதான் எங்கடை நம்பிக்கை” இதை சொல்லும்போது அவருடைய கண்கள் தழும்பியிருக்க வேணும். அது குரலில் தெரிந்தது. என் கண்களும் தழும்பியது. பாவம் இந்த ஆம்பிளைப் பொடியள். ஒரு ஆசைப்பட்ட வாழ்க்கையை வாழ முடியாமல், துன்பப் படுதுகள் பத்தாம் ஆண்டு படிக்கும்போது குடும்பச்சுமை அவன் முதுகில் குந்திவிட்டது. இனி அவன் படிச்சு வளரும் காலத்தில் காதல் கீதல் வராமல் காத்து இவனைக் குடுத்து ஒரு பிள்ளைக்கு மாப்பிளை எடுக்கிற கனவில தாயும் தகப்பனும் கண்ணுக்குள் விளக்கெண்ணையை விட்டுக்கொண்டு காவல் இருந்தாக வேண்டும்.

யார் சொன்னது? இந்த சீதனம் பெண்களின் பிரச்சினை என்று. அது முழுக்க முழுக்க ஆண்களின் துயரம் தான். எங்காவது ஓரிரு பெண்கள் தமது சீதனத்துக்காக தாம் உழைக்கலாம். ஆனால், இப்படி சின்ன வயதிலிருந்தே தன் ஆசைகளை தியாகம் செய்து கஸ்டப்படும் அண்ணனோ தம்பியோ அப்பாவோ குருவி சேர்த்த மாதிரி சேர்த்து அதைத் தங்கமாகவும் உருட்டி, நோட்டுகளாகவும் சுருட்டி இன்னொரு ஆம்பிளைக்கு சீதனமாக கொடுக்கிறார்கள். இதில் பெண் என்பவள் வெறும் பணங்கடத்தி ஊடகம்தான்.

போகட்டும் எங்காவது பெரீய்யய முதலாளியின் வாழ்க்கையைப் பாருங்கள். நிறைந்த சீதனத்துடன் திருமணம் செய்வார். அது அவருடைய தொழிலுக்கு உதவும். கார், பங்களா, எடுபிடிகள், குளிர்சாதனங்கள், கட்டில் மெத்தை, கலர் தொலைக்காட்சி அல்லது வீட்டுத் திரையரங்கு என வீடே நிறைந்திருக்கும் . அவருக்கென்ன குறை என்பர் பார்க்கிறவர்கள். அப்படியா உண்மையிலேயே அவரைப்போல ஏழை வேறுயாருமே இல்லை என்பேன். அது மட்டுமல்ல தனது குடும்பத்தினருக்கும் உறவினருக்குமாக மிகப் பெரிய தியாக வாழ்க்கையை வாழ்பவர் அவர்தான்.

அதிகாலையில் அவர் தூக்கம் விட்டு எழுந்து, குளித்து,ஆடை அணிந்து, தனது கடைக்குப் போகிறார். போய் கல்லாப் பெட்டியின் முன் அமர்ந்தால் உணவு வேளைக்கு, பின்னே உள்ள களஞ்சிய அறையுள், அந்த தூசிகளுடன்போராடி, பத்திய உணவை உண்டு முடித்து, போத்தலின் நீரைக் குடித்து விட்டு மறுபடி தன் ஆசனத்தில் அந்த பலசரக்கு மண்டியுள் அமர்கிறார். இதே சமயம் வெளியே வீதியில் ஏதோ விபத்து அல்லது சண்டை நடக்கிறது என்று வைத்துக் கொள்வோம் .அந்த பெட்டியைப் பிடித்துக் கொண்டே எட்டிப்பார்த்து போகிற வருகிற ஆட்களிடம்,

“என்னவாம் பிரச்சினை” என்று விசாரிப்பதோடு சரி. போய் பார்க்கிறாரா? ம்கும்... மூச்சு விட முடியாது. எப்பவும் கேள்விகளோடு திருப்தி அடைய வேண்டியதுதான். ஒரு நல்லநாள் பெரியநாள் கலியாண வீடு எல்லாம் போவார், கொண்டாடுவார். உணவு மட்டும் பத்தியம்தான். அவரது மனம் மட்டும் என்னவோ லாப நட்டக்கணக்கை கணித்துக்கொண்டே இருக்கும். மாலை கடைக்கதவை இழுத்துப் பூட்டிவிட்டு காரில் ஏறி வீட்டுக்குப் போய் குளிப்பார் சாப்பாடு விரும்பியதை உண்ணமுடிகிறதா? பிறசர், சுகர் என்று எல்லாம் அவருடலில் குத்தகையில்லாமலே குடியிருப்பதால் குரக்கன்மா பிட்டோ, ரொட்டியோதான்; அதையும் சாப்பிட்டு பத்துமணிக்கு உறங்கி, மீண்டும் அதிகாலை எழுந்தால் பழையபடி அந்த கருவாட்டு மண்டியோ, அரிசி மண்டியோ. ஏசீயும், ரீவியும், பங்களாவும், பகல் தூக்கமும், அறுசுவை உணவும், அவருக்கல்ல அவருடைய பிள்ளைகளுக்கும் மனைவிக்கும் முடிந்தால் உறவினருக்குமாக இருக்கும். ஆனால் அவர் உழைப்பார். விரும்பி மகிழ்ச்சியாக உழைப்பார். தன்குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்காகவும். இப்படி ஒரு தியாக வாழ்க்கையை வாழும் ஆண்கள் உலகம் முழுதும் இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களில் சிலர் செய்யும் வம்புத்தனங்களை மட்டுமே கருத்தில் வைத்து ஆண்களைப் பற்றி பேசுவதும் ஆணாதிக்கம் என்பதையும் என்ன சொல்ல.

சரி, எங்கள் நாட்டிலிருந்து உழைப்பதற்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ள பெண்களைப் பற்றி உருகி உருகி பேசுவோர், அதேயளவுக்கு வெளிநாடுகளில் அல்லல்படும் ஆண்களைப்பற்றி பேசினார்களா? இப்போது பரவாயில்லை இடறி விழுந்தால் ஒரு தமிழன் மீதுதான் விழுகிறார்கள். இதுவே தொண்ணூறுகளுக்கு முற்பகுதியில் வெளிநாடுகளுக்குப் பிள்ளைகளை பதினெட்டு, பத்தொன்பது வயதிலேயே கப்பலேற்றிய பெற்றோர் தமக்கே அறியாத, தமது மொழியற்ற, தமது காலநிலையற்ற, மண்ணில் தமது பிள்ளைகள் யாரிடம் போவார்கள்? சாப்பாட்டுக்கு என்ன செய்வார்கள்? என்பதை விட, அவர்களுக்கு காய்ச்சல் தலையிடி வந்தால் என்ன செய்வார்கள்? என்ற எண்ணமே இல்லாமல்தானே அனுப்பினார்கள். ரயில்வே ஸ்ரேசன்களிலும் பிளாட்பாரத்திலும் பட்டினியாகப் படுத்திருந்த துயரக்கதைகளை அவர்கள் இப்போது சொல்லும்போதும் எமது மனம் கரைகிறதே.

**ஒரு அண்ணன் எண்பத்தைந்தில் ஜேர்மனிக்குப் போனவன் சிறையிலும் இருந்திருக்கிறான். எப்படியோ மீண்டு, உழைத்து, தன் சகோதரிகள் ஐந்து பேரை திருமணம் செய்து கொடுத்து விட்டு, தாயிடம் ‘எனக்கு நாட்டுக்கு வந்து உன்முகத்தை ஆரத்தழுவ ஆசையாக இருக்கு உன்ர கையால ஒரு கவளம் பழஞ்சோறு பிரட்டித்தா நான் அதுக்காக ஏங்கிறன்’ என்று தொலைபேசியினால் புரியாதென்று உருகி உருகி கடிதம் போட்டான். அம்மா என்ன சொன்னாள் தெரியுமோ,**

**“தம்பீ இப்பதான் கமலாவின்ர வீட்டை கட்டி முடிச்சிருக்கிறன் லதாவுக்கு கட்டிப்போட்டால் என்ர கவலை தீந்திடும் பல்லைக்கடிச்சுக் கொண்டு இன்னும் ஒரு ரெண்டு வரியம் நில்” என்று. சொன்ன மனிசி சுடலைக்குப் போயிற்றுது. இப்ப அவன் தங்கையின் மகளுக்கு திருமணம் செய்து கொடுக்க இந்தியாவுக்கு வந்திருந்தான். அவனுக்கு வயது ஐம்பத்தைந்து.**

ஒரு அண்ணன் எண்பத்தைந்தில் ஜேர்மனிக்குப் போனவன் சிறையிலும் இருந்திருக்கிறான். எப்ப டியோ மீண்டு, உழைத்து, தன் சகோதரிகள் ஐந்து பேரை திருமணம் செய்து கொடுத்து விட்டு, தாயிடம் ‘எனக்கு நாட்டுக்கு வந்து உன் முகத்தை ஆரத்தழுவ ஆசையாக இருக்கு உன்ர கையால ஒரு கவளம் பழஞ்சோறு பிரட்டித்தா நான் அதுக்காக ஏங்கிறன்’ என்று தொலைபேசியில் பேசினால் புரியாதென்று உருகி உருகி கடிதம் போட்டான். அம்மா என்ன சொன்னாள் தெரியுமோ,

“தம்பீ இப்பதான் கமலாவின்ர வீட்டை கட்டி முடிச்சிருக்கிறன் லதாவுக்கு கட்டிப்போட்டால் என்ர கவலை தீந்திடும் பல்லைக்கடிச்சுக் கொண்டு இன்னும் ஒரு ரெண்டு வரியம் நில்” என்று சொன்ன மனிசி சுடலைக்குப் போயிற்றுது. இப்ப அவன் தங்கையின் மகளுக்கு திருமணம் செய்து கொடுக்க இந்தியாவுக்கு வந்திருந்தான். அவனுக்கு வயது ஐம்பத்தைந்து.

“ஏன் நீங்கள் ஒரு கலியாணம் முடிக்கேல்ல” என்று கேட்டேன்.என்ர குரு குருத்த வாய் கிடக்கமாட்டாமல்.

“கலியாணந்தானேம்மா செய்து குடுத்துக் கொண்டிருக்கிறன். எனக்கெதுக்கு இனி” என்றான் விரக்தியோடு. இப்படி எத்தனை ஆண்கள் முதிர் கன்னர்களாக (கன்னிக்கு ஆண்பால்) இருக்கிறார்கள். யாராவது புள்ளிவிபரம் திரட்டினீர்களா? இப்ப சொல்ல வருவீங்களே,

“அவங்கள் கலியாணம் முடிக்கேல்லத்தான் அதுக்காக குமரோ?” என்று. “கலோ பொம்பிளையளுக்குள்ளும் அப்படித் தான்” என்றால் - பங்கார் விளக்குமாத்தத் தூக்கிறியளே சரி எடுத்ததைக் கொண்டே அவரவர் வாசலைப் பெருக்குங்க. உண்மையா உழைக்கிற ஆம்பிளைக்குத்தான் ஆரும் பெண் கொடுப்பார்கள். பெண்கள் வேலைக்குப் போகிறார்களா என்பதை பெரும்பாலும் கேட்பதில்லை. ஆண் தலையை விற்றாவது குடும்பத்துக்கு சோறு போட்டாக வேண்டும். பெண்களில் அந்தக் கடமை குடும்பத் தலைவனை இழந்தவர்களுக்கே இருக்கிறது. ஆனால் அவர்களைத் தாங்கிப் பிடிக்க ஆயிரம் நிறுவனங்கள் இருக்கே. பாவம் ஆண்கள்.

# அதிர்புனைவாக்க அகில சினிமா

வெ. அருட்குமரன்

கிறிஸ்ரோபர்நோலனின் இயக்கத்திலே சென்ற வருடம் வெளியான TENET திரைப்படமானது அதிர்புனைவாக்க அகில சினிமாவாக அமைந்துள்ளது. ஜேம்ஸ் பாண்ட் பாணியில் அமைந்த அதிரடி மர்மத் திரைப்படமே இது. ஆயினும் பௌதிகவியற் கூறுகளை உள்வாங்கி அ-நேர் கோட்டுத் திரைக்கதை உத்தியைக் கொண்டு நகர்ந்து பேரீர்ப்பினை ஏற்படுத்தி விட்டது. கண்கவர் வரை கலைத்திறனும், பார்வையாளரிடம் பதற்றத்தினை ஏற்படுத்தி இருக்கை நுனிக்கு நகர்த்தும் கதை சொல் முறையும் பின்னணி இசையும் சிறப்பாக அமைந்திருந்தன. படம் கட்டமைத்த அறிவியல், கருத்தியல் பலரையும் குழப்பி தேடலை அதிகப்படுத்தியது. Temporal pincer movement, Inversion, Entropy, closed – loop theory, Invert veapon, Grand father paradox, Algorithm போன்ற அறிவியல் விடயங்களை இயக்குனர் Tenet திரைப்படத்திலேயே விளக்கிச் செல்கின்றார்.




தொன்மக் கல்வெட்டுக்களிலும் சுவர் ஓவியங்களிலும் மாலைமாற்றாக (Palindrome) பயன்படுத்தப்பட்ட குறியீட்டு வார்த்தையே Tenet என்பதாகும். தமிழிலே விகடகவி, மகரகம, மேகராகமே போன்றன இவ்வகையில் அடங்கும். 21ம் நூற்றாண்டின் அறிவியலும் இரண்டாம் நூற்றாண்டின் மதத் தொன்மமும் இணைந்த வகையிலே படத்தினை உருவாக்கியுள்ளார். 8ம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவரோவியம் ஒன்றில் SATOR, TENET, OPERA, AREPO, ROTAS என்பன புதிர் போல எழுதப்பட்டுள்ளன. இச்சொற்களோடும் இப்படம் தொடர்பினை ஏற்படுத்தியுள்ளது. SATOR என்பது வில்லனின் பெயராகும். படத்தின் ஆரம்பக் காட்சி OPERA இல்லத்தில் நிகழும். தொடக்கக் காட்சியில்




பொய்யான ஓவியத்தினை மாற்றியமைப்பவரின் பெயர் AREPO என்பதாகும். விமானம் சார்ந்த காட்சியொன்றில் ROTAS குறித்த உசாத்துணை இடம்பெறுகிறது.

பூமியிலே மோசமான காலநிலை மாற்றத்தை நிகழ்கால மனிதர்கள் ஏற்படுத்துவதால், எதிர்கால மனிதர்கள் போர்தொடுத்து நிகழ்கால மனிதர்களை அழிக்க முற்படுவதே TENET திரைப்படத்தின் மூலக்கதையாகும். இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பௌதிகவியல் விதிப்படி ஒரு பொருளின் Entropy ஐ மாற்றினால் மட்டுமே நேரம் தலைகீழாக மாறும். மற்ற எந்தப் பண்பினை மாற்றினாலும் மாறாது. காலப் பயணத்தில் பல்வேறு வகைகள் உள்ளன. ஒவ்வொரு இயக்குனரும் ஒவ்வொரு மாதிரி அணுகுவார்கள். இத்திரைப்படம் Closed loop theory ஐப் பின்பற்றுகிறது. காலப் பயணத்தில் நேரத்தினை வளைக்கின்ற நுட்பத்தினை Temporal pincer movement என அழைப்பார்கள். இதன் மூலம் சரியான நேரத்தில் முன்னோக்கி நகர்வதை அணுகலாம். பின்னர் எதிர்காலத்தில் முன்னோக்கி நகர்வதை அணுகலாம்.

ஒவ்வொரு பக்கமும் ஏற்கனவே அனுபவத்திலிருந்து மறுபக்கம் பெற்ற அறிவைப் பயன்படுத்தி செயற்படுத்தலாம். அதே சமயத்தில் இரு தரப்பினரும் உண்மையில் ஒரே நேரத்தில் அதனை அனுபவிக்கின்றனர். ஏன்ரோபியை மாற்றியமைத்துக் காலவரிசையைப் புரட்டுவதே Inversion எனப்படும். முன்னோக்கிய பயணத்திற்குப் பதிலாக பின்னோக்கிய பயணம் சாத்தியமாகிறது. ஏன்ரோபியை மாற்றியமைக்கும் சாதனம் Algorithm எனப்படுகிறது. எதிர்கால விஞ்ஞானியால் உருவாக்கப்பட்டதாகக் காட்டப்படுகிறது.



படத்தின் ஆரம்பக் காட்சியானது ஜேம்ஸ் பொண்ட் பாணியில் அமைந்துள்ளது. Opera house சார்ந்த பிரமாண்டக் காட்சியும், பின்னணி இசையும் எத்தனை முறை பார்த்தாலும் சலிக்காத அனுபவமாக வெளிப்படுகின்றன. அரங்கிலே ரசிகர்களைக் காப்பாற்றும் முயற்சி, சயனைட் அருந்தி இறத்தல், சயனைட் காட்சியின் போலிமை, செயற்படுநருக்கான பயிற்சி, துப்பாக்கித் தோட்டா குறித்த செய்தி, ஆயுத வியாபாரியோடான சந்திப்பு, வில்லன் மற்றும் நாயகியோடான சந்திப்பு, மர்ம முடிச்சுக்களின் விடுவிப்பு, இறுதி நிகழ்வு எனப் பல காட்சிகளின் இணைப்பாகப் படம் அமைகின்றது. ஒவ்வொரு காட்



சியிலும் பல்வேறுபட்ட தகவல்கள் ரசிகனுக்குக் கடத்தப்படுவதோடு புதிய அறிவியற் பாதையும் ஆச்சரியங்கொள்ளச் செய்கிறது.

கமலஹாசனின் முதலாவது கனவுப் படமென விவரிக்கப்பட்ட 'விக்ரம்' திரைப்படத்தின் நாயகிகளில் ஒருவரான "டிம்பிள் கபாடியா" இத்திரைப்படத்திலே ஆயுத வியாபாரியாக நடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பூமி இனி வாழக்கூடியதாக அமையாது என்ற பதற்றத்திலே எதிர்காலத்தைத் தக்க வைக்க ஒரே வழி நேரத்தை மாற்றியமைத்து கடந்த காலங்களைச் செம்மைப்படுத்துவதே என்ற கருத்தியலை திகிலோடு காட்சிப்படுத்தியுள்ளனர். கணையப் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ள வில்லன் எதிர்கால மனிதர்களின் திட்டத்திற்கு உதவுகிறான். தலைகீழாகப் பேசுதல், வளிம சுவாச முகமூடி அணிதல், மீள்வினைவுக் காட்சிகள் என தான் எடுத்துக் கொண்ட கதைக்களத்திற்கு இயக்குனர் நியாயம் செய்துள்ளார்.

மூடிய நகரங்கள், இலவச துறைமுகம் என ஏகப்பட்ட விடயங்கள் திரைப்படத்திலே குவிந்துள்ளன. கிறிஸ்ரோபர் நோலனின் "மெமன்ரோ" திரைப்படத்தின் ஆரம்பக் காட்சியில் தரையில் கிடக்கும் தோட்டா துப்பாக்கியினை நோக்கி வரும். இக்காட்சியினை மையமாகக் கொண்டே Tenet திரைப்படத்திற்கான திரைக்கதையினை உருவாக்கியுள்ளார். வெறும் கற்பனைப் படமாக இருக்கக்கூடாது என்பதற்காக "இன்ரெஸ்ரெல்லர்" திரைப்படத்தில் பணியாற்றிய விஞ்ஞானியான "இப்தோர்ன்" என்பவரோடு விவாதித்து அறிவியல் புனைகதையைத் திரைப்படமாக்கி உள்ளார். சிவப்பு - நீல அடையாளங்கள் காலத்தினைக் குறிக்கும் வகையிலே அமைந்துள்ளன. சிவப்பு நிறமானது முன்னோக்கிச் செல்பவர்களையும் நீல நிறமானது பின்னோக்கிச் செல்பவர்களையும் வேறுபடுத்திக் காட்டுகிறது.

இரண்டு பத்து நிமிடங்கள் முன்னும் பின்னும் சென்று Algorithm செயலிழக்க வைக்கப் போராடும் காட்சி திரைப்படத்திலே முக்கியத்துவம் பெறுகிறது. TENET என்ற வார்த்தையில் பின்னும் முன்னும் 'TEN' இடம்பெறுவதும் நோக்கத்தக்கது. விண்வெளியிலிருந்து பூமியை நோக்கி மோதும் மிக மிகச் சிறிய துகள்கள் நியூக்ளியன்கள் எனப்படுகின்றன. சமீப காலத்தில் பூமியிலிருந்து வெளியே செல்லும் நியூக்ளியன்கள் கண்டறியப்பட்டுள்ளன. நாம் வாழும் உலகம் போல இன்னொரு உலகமும் இயங்குவதாகவும் அங்கே அனைத்தும் தலைகீழாக நடக்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகின்றது. இத்தகைய பல்வேறுபட்ட அறிவியற் செய்திகளை இத்திரைப்படம் வெளிப்படுத்துகிறது. இயக்குனர் நோலன் இத்திரைப்படத்திலும் சின்ன கேமியா செய்துள்ளார். வாழ்நாளில் ஒரு முறையாவது இத்திரைப்படத்தினைப் பார்க்க வேண்டும். பார்க்காவிட்டால் இழப்பு உங்களுக்குத்தான்!

# மலையாள சினிமா




சிறந்த யதார்த்த சினிமாவென இன்றளவும் பேசப்படுவனவாக வங்க மொழிப் படங்களும் மலையாள மொழிப் படங்களும் அமைகின்றன. அதிக பொருள் செலவில்லாமலும். மக்களின் எண்ண ஓட்டங்களை புரிந்து அந்த காலத்திற்கேற்ற நிகழ்வுகளை அற்புதமாக படம் பிடித்து காட்டடுவதிலும் மலையாள சினிமா இன்றளவும் தனது வெற்றி முத்திரையைப் பதித்து வருகிறது. பிரேம் நசீர்,மு உம்மர் மது,சத்யன் போன்ற பழைய கால நடிகர்கள் தொடங்கி,மம்முட்டி, மோகன்லால்,ஜெயராம்,சுரேஷ்கோபி என்ற இடைக்கால நடிகர்களுடன் பயணித்து இன்றைய இளைய தலைமுறையினரான ப்ரித்விராஜ், துல்கர் சல்மான், டோவினோ தாமஸ், ஜெய்சூர்யா வரை அதே தரம் குறையாமல் சிறந்த படைப்புக்களை தந்திருக்கிறது மல்லுவுட் எனப்படும் மலையாள சினிமா.

ஒருமுறை ஒரு படத்தின் இசை வெளியீட்டு விழாவில் மம்முட்டியிடம் பிரபல தமிழ் இயக்குநர் ஒருவர் “எப்படி மலையாள மொழியில் வெளிவரும் படங்கள் மட்டும், அதிகளவு வெற்றி பெறுகின்றன.இது எப்படி சாத்தியமாகிறது ? “என்று கேட்டார் அதற்கு மம்முட்டி அளித்த பதில் “மற்ற மொழி படங்களில் ஒரு பாடல் காட்சி எடுக்கும் செலவில் நாங்கள் ஒரு முழு படத்தையும் எடுத்து முடித்து விடுவோம்!

மலையாள சினிமாக்கள் பெரும்பாலும் வெளிநாடுகளில் படமாக்கப்படுவது இல்லை. ஏனெனில் தங்கள் கலாசாரத்தையும் இயற்கை அழகையும் பயன்படுத்தியே பல திரைப்படங்கள் வருவதால் வெளிநாட்டு படப்பிடிப்புக்கான தேவைகள் ஏற்படுவதில்லை. நடிகர்களின் சம்பளமும் அதிகளவு இல்லாததால் சிறிய பட்ஜெட்டில் நல்ல படங்கள் மலையாள சினிமாவில் அதிகளவு வெளிவருகின்றன. தயாரிப்பாளர்களும் காப்பாற்றப்படுகிறார்கள்.

ஹீரோக்களுக்கு ஏற்ற கதையை எழுதாமல் கதைக்கேற்ற ஹீரோக்களை தேர்வு செய்வது மலையாள சினிமாவின் வெற்றிக்கு மற்றொரு காரணம் நடிகர்களையும் தங்கள் வயதிற்கு ஏற்ற கதையையே தேர்வு செய்து நடிப்பது அங்கு இயல்பான விஷயமாக இருக்கிறது. அதற்கு உதாரணமாக சமீபத்தில்வந்து மெகாஹிட்டான த்ரிஷ்யம், தி கிரெட் பாதர் போன்ற படங்களை கூறலாம்.

மல்டி ஸ்டார் மூவி எனப்படும் பல முன்னணி நடிகர்களும் ஒன்றாக சேர்ந்து ஒரே படத்தில் நடிப்பது மல்லுவுட்டுக்கு சர்வ சாதாரணமான விஷயம். அதற்கு உதாரணமாக கடந்த 2010ம் ஆண்டு வெளியான 2020 எனும் படத்தை கூறலாம்.

மலையாள திரைத் துறையினரின் கூட்டமைப்பான “அம்மா” என்ற அமைப்பிற்கு நிதி திரட்ட வேண்டி அனைத்து நடிகர்களையும் ஒன்றிணைத்து எடுக்கப்பட்ட படமே 2020.

இயக்குனர் ஜோஷி இயக்கத்தில் அனைத்து முன்னணி ஹீரோக்களுக்கு சரி சமமான முக்கியத்துவம் அளித்து எடுக்கப்பட்ட 2020 திரைப்படம் நடத்திய சாதனை இதுவரை எந்த மொழி படங்களிலும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழு கோடி செலவில் எடுக்கப்பட்ட திரைப்படம் சுமார் 35 கோடி வரை வசூல் செய்து சாதனை படைத்தது.

மலையாள சினிமாவில் குழந்தைகள் முதல் பெரியவர் வரை ரசிக்கும் கதாநாயகர்கள் பலர் இருந்தாலும் அதில் முக்கிய இடத்தில் நடிகர் திலீப் இருக்கிறார். திலீப் படம் என்றால் நகைச்சுவைக்கு பஞ்சம் இருக்காது என நம்பிப் போகும் அளவிற்கு குறுகிய காலத்திலேயே அபார வளர்ச்சி அடைந்த நடிகர்களுள் திலீப்பும் ஒருவர்.

பிரபல மலையாள இயக்குனர் லால், ஜோஸ் இயக்கத்தில் திலீப் நடித்து கடந்த 2005ல் சாந்து பொட்டு எனும் படம் வெளியானது. திலீப்பின் திரை பயணத்திலேயே மிகப்பெரிய ஒரு திருப்பு முனையை இந்த திரைப்படம் ஏற்படுத்தியது.

உருவத்தில் ஆணாகப் பிறந்த ஒருவன் தன்னுள் இருக்கும் பெண்தன்மையுடன் வாழும் ஒரு இளைஞனை பற்றிய கதை அது.

கொஞ்சம் விலகினாலும் சொல்ல வந்த விஷயமே மாறிப்போய் அபத்தத்தில் போய்விடக்கூடிய கதையை மிக அற்புதமாகக் கையாண்டிருப்பார் இயக்குனர் லால்ஜோஸ். அந்த கதைக்கு தனது அபார நடிப்பின் மூலம் உயிர் கொடுத்து மெருகேற்றியிருந்தார் திலீப். படத்தின் மாபெரும் வெற்றிக்கு பின் பல மொழிகளிலிருந்து ரீமேக் உரிமம் வாங்கப் பட்டிருந்தாலும் இன்றளவும் அந்தப்படம் ரீமேக் செய்யப்படாமலே இருக்கிறது. காரணம் திலீப் நடித்த கதாபாத்திரத்திற்கு இணையாக எந்த நடிகராலும் நடிக்க முடியாது என்பதே.

மலையாள சினிமாவின் ஆரம்ப கால ஆக்ஷன் திரைப்படங்களின் மூலம் பெருமளவு மக்களைக் கவர்ந்தவர் நடிகர் ஜெயன். ஜெயனின் குரலை மூலதனமாக கொண்டு மிமிக்ரி மேடைகளில் அவரைப் போலவே பேசி நடிப்பு உலகில் தடம் பதித்தவர்கள் இன்றும் மலையாள சினிமாவில் நட்சத்திரங்களாக வலம் வந்துகொண்டிருக்கிறார்கள்.

கிருஷ்ணன் நாயர் என்ற இயற்பெயர் கொண்ட இவர் சினிமாவுக்காக ஜெயன் என பெயர் மாற்றம் செய்யப்பட்டார். 1974ல் சாப மோட்சம் எனும் திரைப்படம் மூலம் சினிமாவுக்குள் கால்பதித்த ஜெயன் படிப்படியாக வளர்ந்து அந்த காலகட்டத்தில் சூப்பர் ஸ்டார்களாக இருந்த பிரேம், நசீர், சத்யன் போன்ற முன்னணி நடிகர்களின் பட்டியலில் இடம் பிடித்தார். ஆக்ஷன் கதை என்றால் ஜெயனை தவிர வேறு யாரும் சிறப்பாக செய்து விட முடியாது என்ற நிலையில் மலையாள சினிமாவில் தனது நிலையை உயர்த்தினார். ஒரே வருடத்தில் 116 திரைப்படங்களில் நடித்த ஒரே நடிகர் எனும் பெருமைக்கு சொந்தக்காரர்.

உயிரைப் பணயம் வைக்கும் சாகச காட்சிகளில் டூப் இடாமல் நடிக்கும் திறமை கொண்ட ஜெயனை இறுதியில் அந்த திறமையே அவரை காவு வாங்கியது மலையாள சினிமா ரசிகர்களின் நெஞ்சில் இன்றளவும் பெரும் துயரத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

1981ல் இவர் நடித்து வெளியான “கோளிளக்கம்” எனும் திரைப்படத்தின் கிளைமாக்ஸ் காட்சியில் 50 அடி உயரத்திற்கு மேல் ஹெலிகாப்டரில் வில்லனுடன் மோதும் காட்சி படமாக்கப்பட்டது.

ஹெலிகாப்டரில் வெளிப்புற கம்பியில் தொங்கி கொண்டு உள்ளிருக்கும் வில்லனுடன் சண்டை போடுவதாக காட்சி அமைக்கப்பட்டிருந்தது. டூப் வைத்து படமாக்கலாம் என படக்குழு பலமுறை கேட்டும் ஒத்துக்கொள்ளாது தானே அதில் நடிப்பதாகக்கூறி ஹெலிகாப்டரில் ஏறி பயணித்தார்.

துரதிர்ஷ்டவசமாக படப்பிடிப்பின் போது ஹெலிகாப்டரிலிருந்து கை நழுவி 50 அடி உயரத்திற்கும் மேலிருந்து விழுந்து பரிதாபமாக உயிரிழந்தார்.


மரணமடைந்து 40 வருடங்களுக்கு மேலானாலும் மலையாள சினிமாவில் ஜெயனின் இடத்தை இன்னும் யாராலும் நிரப்ப முடியவில்லை என்பதே நிதர்சனம்.



ஜெயபிரசாத்

# குண்டலினியோகம்

பிரசாத்




அன்பெனும் வடிவால் ஆட்கொண்டு எம்மை தெள்ளுதமிழினால் திறம்பட வழிநடத்தும் இறைபேராற்றலின் அருளுடன் ஆன்மீக சக்தியின் ஆதார சுருதியான இந்த குண்டலினியெனும் மகா ஆற்றலினை பற்றிய முழுமையான விளக்கங்கள் மற்றும் படிமுறையான பயிற்சி முறைகள் என்பவற்றை தெளிவாகத் தர முயல்கின்றேன்.

சரி முதலில் குண்டலினி என்றால் என்ன என்பதை அறிவதற்கு முன்னர் மிக முக்கியமாக ஆணவம், மனம்,பற்று, ஆசை மற்றும் இன்பம் என்பவற்றை பற்றிய சரியான புரிதலினை உங்களுக்கு ஏற்படுத்துவதன் மூலம் குண்டலினி என்றால் என்ன என்பதை நீங்களாகவே வரையறுத்து வாழ்வில் முன்னேற்றம் காண உதவுகின்றேன்.

ஆகவே முதலில் இந்த ஆணவம் என்றால் என்ன என்பதை தெளிவாக புரிந்து கொண்டால் உங்களுடைய ஆன்மீக ஆற்றல் விழித்துக் கொள்ளும் வாழ்வு மேம்படும்.

ஆணவத்தை இது இப்படித்தான் என வரையறுப்பது கடினம் ஏனெனில் ஆணவம் நுண்மையான ஆற்றல். ஐம்புலன்களினால் அறிய முடியாத இந்த ஆற்றலை எப்படி அறிவது. சரியாக ஆணவத்தைப் பற்றி தெரிந்து கொள்ளாமல் அதை எவ்வாறு கட்டுப்படுத்துவது.

அனேகமான மக்கள் எவ்வித அடிப்படை அறிவும் இல்லாது இக்குண்டலினி பயிற்சிகளில் ஈடுபடுவதால் முழுமை நிலையை உணர முடியாமல் சலிப்படைந்து உலக வாழ்வில் மூழ்கின்றனர்.

சரி நாம் ஆணவத்தை முழுமையாக புரிந்து கொள்வோம் . ஆணவம் ஒரு மனிதரில் மிகுதியாகும் மற்றும் குறைவடையும் சந்தர்ப்பங்களை ஆராய்வதன் மூலம் உங்களை நேரிடையாக குண்டலினி பயிற்சிக்குக் கொண்டு செல்லாம் என நினைக்கின்றேன்.இந்த உலக வாழ்வினிலே எண்ணற்ற எண்ணங்களை தாங்கிய இந்த மனம் தனது உடலினை தனது இச்சை போல இயக்குவதை ஒவ்வொருவருடைய மனசாட்சியும் அறியும்.

மிகக் கவனமாக கூர்ந்து பாருங்கள் எமது உடல் ஒவ்வொரு செயலையும் செம்மையாக செய்ய வேண்டுமானால் மனமானது அச்செயலில் குவிய வேண்டும். உதாரணமாக ஒரு வாகன சத்தத்தை நாங்கள் உணரவேண்டுமானால் மனம் குவிய வேண்டும். இயல்பாகவே மனமானது இந்த காதுகளின் மூலம் வரும் தூண்டல்களுக்கு குவிந்து பழக்கப்படுவதால் நாம் அந்த சத்தத்தை இயல்பாகவே எவ்வித சிரமமுமின்றி கேட்கின்றோம். ஒரு சத்தத்தை கேட்பதற்கு நாம் எவ்வித முயற்சியும் செய்யத் தேவையில்லை. இந்த சத்தமானது சத்தத்தை உணரும் பொருளினை அகத்தில் தோற்றுவிக்கின்றது. சத்தத்தை உணர்பவர் யார்?அவர்தான் ஆணவம்.

ஆணவம் என்பது நான் என்ற தன்மையாக இவ்வுடலில் பரிணமிக்கின்றது.

இவ்வாறுதான் ஐம்புலன்களும் இந்த உலகத்தினை மனதினால் குவித்து இவ்வுடலில் ஆணவம் அல்லது அகங்காரம் எனும் பிரதி விம்பத்தை உடலில் தோற்றுவிக்கின்றது. ஆணவம் என்பது நிலையானது அல்ல அது பல நேரங்களில் செறிவடைந்து இருக்கும் சில நேரங்களில் தளர்வடைந்திருக்கும். உங்களால் நான் கூறுபவற்றை தெளிவாக புரிந்து கொள்ள முடிந்தால் இன்னும் சில அற்புதமான உண்மைகளை கூறுகின்றேன்.

இன்ப துன்பம், சூடு குளிர், இரவு பகல், விருப்பு வெறுப்பு என நீண்டு செல்லும் இந்த எதிர்மாறான இருமை உணர்வுகளை உணர்வது யார்?

இதற்கு விடை ஆணவம் என்பதே சரியாகும்.

மனம் குவிய ஆணவம் செறிவடையும் ஆணவம் செறிவடைய இன்பம் மற்றும் துன்பத்தை உணரும் ஆற்றல் அதிகரிக்கும். எதிர்மறை உணர்வுகள் அதிகரிக்கும் சக்தியானது முள்ளந்தண்டு வழியே மேலிருந்து கீழாகப் பாயும். உடலின்பமே உண்மையெனும் தன்மை உருவாகும்.

மனமானது தளர்வடையும் போது மற்றும் குவிக்கப்படாத நிலையில் ஆணவம் செறிவடையாது தளர்வடையும் பொழுது, இன்பம் மற்றும் துன்பத்தை உணரும் ஆற்றல் குறையும், நேர்மறை ஆற்றல்கள் கூடும் நல்லெண்ணங்கள் அதிகரிக்கும். சக்தியானது உடலின் கீழ் இருந்து மேல்நோக்கி இயங்க ஆரம்பிக்கும். இச்சக்தி முள்ளந்தண்டினூடாக மேல் நோக்கி எழும் பேரின்ப நிலையை உணர வைக்கும்

இவ்வாறு மேல் நோக்கிப் பயணிக்கும் சக்தியே குண்டலினியாகும்.ஆகவே ஒரு மனிதன் தன்னைத் தானே தனது இச்சைப்படி எவ்வாறு உருவாக்கிக் கொள்ள முடியுமோ அதற்குரிய தன்மையையும் சக்தியையும் இப்பிரபஞ்சம் கணத்திற்கு கணம் அள்ளித்தந்தவாறு இருக்கின்றது.

சரி முதலாவது பயிற்சிக்குச் செல்வோம்.

# சமூக நோய்நிலையாக உருவெடுக்கும் தற்கொலைகள்



விஷானுகா

அண்மைக் காலங்களாக செய்தித்தாள்களின் பக்கங்களை தற்கொலை குறித்தான செய்திகள் குறைந்தது இரண்டு அல்லது மூன்றாவது நிரப்புவதற்கு தவறுவதில்லை. இவை எமது சமூகமானது ஏதோ ஒரு வகையான சிதைவு நிலைக்குச் சென்று கொண்டிருப்பதனை வெளிப்படுத்துகின்றது. தற்கொலை தொடர்பாக இலங்கை உட்பட 170 நாடுகளை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பெறப்பட்ட தரவரிசைப் பட்டியலில் இலங்கை மூன்றாவது இடத்திலும் இருப்பது சமூகக் கூறுகளில் ஏற்பட்டுள்ள சிதைவு நிலைமையினை துல்லியப்படுத்துகின்றது.

தற்கொலை என்பது கணப் பொழுதில் நிகழ்ந்து முடிகின்ற செயல். மனச் சிதைவுக்கு உள்ளாகும் ஒருவர் தனக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்களில் இருந்து விடுபட்டுக் கொள்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளும் உபாயமாகத் தற்கொலையினை கைக்கொண்டு தன்னைத் தானே அழித்துக் கொள்கின்றான். பெசில் பென்சல் குறிப்பிடும்போது 'சமூகத்தில் ஒருவர் எதிர்நோக்கும் பிரச்சினை, வேறு எவ்வகையிலும் தீர்க்க முடியாது என்ற எண்ணத்தில் இறுதியாக எடுக்கும் முடிவு தற்கொலை என்கின்றார்.

தற்கொலைக்கான காரணங்களாக திருமணமாக நிலை, உடல் உள நோய், உடல் பலவீனம், குற்றவுணர்வு, இயலாமை, வெட்கம், குடும்பத்தால் அல்லது சமூகத்தினால் தனிமைப்படுத்தப்படல், வேலையில்லாப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, பெற்றோர், துணை அல்லது நம்பிக்கைக்குரியவர்களுடன் எழும் பிரச்சினை, பாலியல் துன்புறுத்தல் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளைக் குறிப்பிட்டிருந்தாலும் இவை எல்லாம் ஒருவரின் உள்ளத்தில் ஏற்படுத்தும் நெருக்கடி நிலை அல்லது உள்ளத்தைச் சிதைக்கும் நிலையிலேயே தற்கொலை ஊக்கியைச் செயற்படுத்துகின்றது என அறிக்கைப் படுத்த முடியும்.

உலக தற்கொலை தொடர்பிலான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் மையத்தின் ஆய்வின்படி வருமானம் குறைந்த நாடுகளிலேயே 75 வீதமான தற்கொலைகள் நிகழ்வதாக அறிய முடிகின்றது. இருந்தாலும் தற்கொலைக்கு இதுதான் காரணம் என்ற வகைப்பாடுகளை தீர்க்கமாகக் கொள்ளவும் முடியாது.

ஆனாலும் இக்கொடிய நோய் நிலையினைக் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டியது ஒவ்வொருவருடைய பொறுப்புணர்வாகும். எங்கோ ஒரு தொலைவில் நிகழும் இத்தகைய வேதனைக்குரிய சம்பவம் பிறிதொரு பொழுது எங்களை அண்மித்து வந்து நிற்கவும் கூடும்.

இலங்கையை மையப்படுத்தும் போது நாளாந்தம் பதினொரு பேரும் ஆண்டுக்கு அண்ணளவாக 4000 பேரும் தற்கொலை செய்து கொள்வதாகப் புள்ளி விபரங்கள் அடையாளப்படுத்துகின்றன. இப்புள்ளி விபரமானது சமூகத்தின் இன்றைய நெருக்கடி நிலையினைப் புலப்படுத்துகின்றது. வாழ்க்கை மனநிலைகள் மீது அழுத்தத்தினைப் பிரயோகித்து நோய் நிலையுள்ள சமூக அமைப்புக்களை ஏற்படுத்தி விட்டிருக்கும் இத்தகைய அபாயம் அச்சத்துக்குரியது.


பத்திரிகைகளில் வரும் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு தற்கொலை தொடர்பிலான பகுப்பாய்வினை மேற்கொள்ளும்போது, பொருளாதாரமும் அதனோடு சேர்ந்த காரணிகளும் தற்கொலை ஊக்கத்துக்கு பிரதான காரணமாக அமைகின்றன. இதன் விளைவாக எழும் குடும்பப் பிரச்சினைகள், குடும்ப வன்முறைகளாகி தீராத முரண்பாடு, விரக்தி நிலை, ஏமாற்றங்கள், என்பவற்றினை ஏற்படுத்தி தற்கொலை செய்து கொள்ளவதற்குரிய ஊக்கலை மேன்நிலைபடுத்துவதாக அறிந்துகொள்ள முடிகின்றது.

தற்கொலை செய்பவர்கள் அதன் பின்னுள்ள பிரச்சினைகளை யோசிக்கத் தவறி விடுகின்றார்கள். அல்லது தற்கொலை ஊக்கி யோசிப்பதனைத் தடுத்து விடுகிறது. விரக்தியின் உச்ச நிலையில் நிகழ்த்தி முடிக்கப்படும் மரணத்தின் பின் குடும்பத்தின் அவலநிலைகள் விபரிக்க முடியாதவை. அண்மையில் மூன்று பிள்ளைகளுடன் கிணற்றில் குதித்து தற்கொலைக்கு முயற்சித்த தாய் தனது பிள்ளைகளை இழந்து தான் மட்டும் தப்பித்து வாழ நேர்ந்ததன் குற்றவுணர்வு எத்தகைய பிரச்சினைகளை உருவாக்கும். மனைவியைக் கொன்று தானும் தற்கொலை செய்து கொண்ட நிலையில் தனித்து நின்று அவலப்படும் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு நிலை எத்தகையது என்பதும் கவனத்துக்குரியது. தன்னையும் அழித்து சூழவுள்ளவர்களின் நிம்மதியையும் அழிக்கும் இக் கொடுஞ் செயல் தொடர்பில் ஒவ்வொரு மனிதனும் அவதானமாக இருக்கவும், ஆழமாகச் சிந்திக்கவும் வேண்டும்.

இன்றைய உலகமயமாதல் செயல் ஒழுங்கின் அவலம், பொருளாதாரத்தினை நோக்கி அலைந்து சலிப்புறும் மனநிலை, குடும்பங்களில் காணப்படும் புரிந்துணர்வின்மை, அதன் காரணமாகத் தோன்றும் சச்சரவுகள் ஒன்று சேர்ந்து அமைதியான சமூக வாழ்வியல் கூறினை சிதைத்துப் போடுவதோடு தற்கொலை எண்ணங்களை வலுவாகத் தோற்றுவிக்கின்றன. இது ஒரு பெரும் நோய்நிலை. இதனைக் குணமாக்கும் அல்லது கட்டுப்படுத்தும் செயல் ஒழுங்கினை தனிமனிதரில் இருந்து சமூக மட்ட நிறுவனங்கள் மற்றும் அரசு கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

சமூக நலன் சார்ந்து செயற்படும் நிறுவனங்கள் தங்கள் சமூகத்திற்குட்பட்ட மக்களின் உளவியல் சார் பொதுமைப்பட்ட பிரச்சினைகளை கவனத்தில் எடுத்து அவர்களை அவற்றில் இருந்து விடுவித்துக் கொள்வதற்குரிய உளவள ஆலோசனைச் செயலமர்வுகளை மேற்கொள்வதன் மூலம் ஓரளவு இக்கொடுஞ் செயலைக் கட்டுப்படுத்த முடியும். இதனையும் தாண்டி அரசு இப்பிரச்சினைகளை முக்கியமானதாகக் கருத்தில் கொண்டு பொருத்தமான வழிமுறைகளைத் துறை சார்ந்த ஆளுமைகளிடமிருந்து அறிந்து கொண்டு சமூக அங்கிகளை வழிப்படுத்துவதற்கு முறையான செயற்பாடுகளை முன்னெடுக்க முனைய வேண்டும். இல்லையென்றால் வருடத்துக்கு அண்ணளவாக 4000 என்ற புள்ளிவிபரம் இன்னும் பத்து வருடங்களின் பின் 40,000 என்ற புள்ளி விபரத்தினை வெளிப்படுத்துவது தவிர்க்க முடியாததாகிவிடும். ■

# மூளையைப் பயிற்றுவிக்கும் விளையாட்டுக்களினால் பயனுண்டா?



மூளையைப் பயிற்றுவிக்கும் விளையாட்டுகள், மூளையின் நலத்திற்குப் பலனளிக்கும் என்று கருதப்படும் அளவை விடவும் குறைவான பலன்களையே அளிக்கக்கூடும் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.

மூளையின் செயற்பாடுகளைத் தூண்டும், இசைக் கருவிகளைக் கற்றல், பூத் தையல் வடிவமைத்தல் அல்லது தோட்டக்கலை செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடலாம் என்று குளோபல் கவுன்சில் ஆஃப் பிரெய்ன் ஹெல்த் (Global Council on Brain Health) என்னும் அமைப்பின் அறிக்கை பரிந்துரைக்கிறது.

எவ்வளவு இளம் வயதில் இந்த செயல்களில் ஒரு நபர் ஈடுபடத் தொடங்குகிறாரோ, அந்த அளவுக்கு முதுமையில் அவர்களின் மூளை நன்றாக செயற்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.


சர்வதேச அறிவியலாளர்கள், சுகாதாரத் துறையினர் மற்றும் அரசாங்கங்களின் கொள்கை முடிவு வல்லுநர்கள் ஆகியோரை உள்ளடக்கிய அந்த அமைப்பு, மூளைத் திறனைத் தூண்டுவதற்கும், அறிவாற்றல் குறைவதைத் தடுக்கவும் ஆகச் சிறந்த வழிமுறைகளைப் பற்றி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூளைத் திறனை அதிகரிக்க, புதிர்கள் மற்றும் மூளை விளையாட்டுகள் உள்ளிட்டவற்றை இணையத்தளத்தில் விளையாடு-வது மிகவும் முக்கியமானது என்று பலரும் நம்பினாலும், அவற்றால் உண்டாகும் பலன்கள் மிகவும் வலுவற்றவையாக உள்ளன அல்லது பலன்களே இல்லாமலும் உள்ளன.

“அந்த மூளை விளையாட்டுகளை மனிதர்கள் விளையாடினால், அந்த விளையாட்டில் அவர்கள் முன்னேறலாம். ஆனால் அந்த விளையாட்டில் உண்டாகும் முன்னேற்றத்தால் அவர்களின் தினசரி அறிவுசார் நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டதற்கான தீர்க்கமான முடிவுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை,” என்று அந்த அறிக்கை கூறுகிறது.

உதாரணமாக, சுடோக்கு விளையாடுவதால் உங்களின் மேலாண்மைத்திறன் அதிகரித்துள்ளதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீங்கள் லிவியாதான் பற்றி அறிந்ததுண்டா?



இன்று நாம் வாழும் பூமியில் பல கோடி உயிரினங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. நம் கண்ணிற்கு தெரியாத பல புதிய அங்கிகள் தோன்றுவது நமக்கு தெரிந்த ஒன்றாகும்.(கோவிட் 19 போன்றன)

பெரும்பாலானோர் இதுவரை கேள்விப்படாத ஒரு உயிரினத்தைப் பற்றியே நான் கூறவுள்ளேன். ஆராய்ச்சியாளர்கள் கூட இதனை நேரடியாக பார்க்க முற்பட்ட போதும் ஆராய்ச்சி தோல்வியிலேயே முடிந்தது. ஆனாலும் அதன் உருவம், இயல்பு என்பவற்றை அறிந்து கொண்டனர். இந்த உயிரினத்தின் பெயர் லிவியாதான் என்றும் இது ஒரு கடல் உயிரினம் என்றும் கூறுகின்றனர்.(புகைப்படம் முற்றிலும் கற்பனையாகும்)

இதனை சிலர் , கடல் அரக்கன், இராட்சத விலங்கு, பெருங்கடல் விலங்கு, பெரும் இன முதலை என்றும் கருதுவார்கள். ஆனால் இது முதலை இனம் அல்ல. இது பாம்பு இனத்தை சேர்ந்ததாகும். இவ் உயிரின் தோற்றம் நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு மிகக் கொடூரமானதாகும். இதன் செதில்கள் ஒன்றோடு ஒன்று மிக நெருக்கமாகவும் சொரசொரப்பாகவும் காணப்படும். இதன் தோல் மிக வலுவானது. துப்பாக்கிக் குண்டுகள் துளைப்பதே கடினமாகக் காணப்படும். இதன் பற்கள் இரும்பைப் போன்றது, பரிசை அரனிப்பு நெருக்கமாகக் காணப்படும். இதன் வாயிலிருந்து நெருப்பு புறப்படும், தும்முகையில் ஒளி வீசும், கண்கள் சிவப்பு நிறம், இதயம் கல் போன்று வன்மையானது, உடற்பாகங்களில் இதன் கழுத்து மிகப்பலமானது, இது மிகவும் ஆழமான கடல் பகுதிகளில் வாழும் கொடிய மிருகமாகும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இவ் உயிரினத்தை மையப் பொருளாக வைத்து ஆங்கில திரைப்படங்களும் வெளிவந்துள்ளது. ஆனால் இதன் உருவத்தை பார்த்தவர்கள் இதுவரை எவருமில்லை. நாம் வாழும் இந்த உலகில் நாம் அறியாத அநேகமான விடயங்கள் உள்ளன. என்பதற்கு லிவியாதான் ( Livyatan) ஓர் எடுத்துக்காட்டாகும்.

# கோரிக்கை விடுப்பு



இந்தாண்டு ஜப்பானில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான அணிகளின் குழுநிலை விபரம் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஆண்கள் பிரிவில் 16 நாடுகள் பங்குபற்றுகின்றன. இதன் 'சி' பிரிவில் ஆர்ஜென்ரீனா, ஸ்பெயின், எகிப்து, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன. ஒலிம்பிக் உதைபந்தாட்டப் போட்டிகளில் 3 சிரேஸ்ட வீரர்களைத் தவிர ஏனையவர்கள் 24 வயதுக்குட்பட்ட வீரர்களாக இருத்தல் வேண்டும். இதனால் பெரும்பாலான நாடுகள் தமது நட்சத்திர வீரர்களை இதில் பங்குபற்ற அனுமதிப்பதில்லை. ஆனாலும் 'சி' குழுவில் இடம்பெற்றுள்ள அவுஸ்ரேலிய அணியின் பயிற்சியாளரான கிரகாம் ஆர்னோல்ட் இது குறித்து அவுஸ்ரேலியாவில் நடைபெறும் ஏ1 உதைபந்தாட்டப் போட்டிகளில் இளம் வீரர்கள் சிறப்பான பங்களிப்பை வழங்கி வருவதனால் சிரேஸ்ர வீரர்கள் இன்றி அனைத்து வீரர்களையுமே 24 வயதுக்குட்பட்டவர்களாகவே தெரிவு செய்ய ஆசைப்படுகின்றேன். இளம் வீரர்கள் தமது திறமையை வெளிப்படுத்த இது ஒரு சிறந்த சந்தர்ப்பம். ஆர்ஜென்ரீனா, ஸ்பெயின் போன்ற அணிகள் இடம்பெற்றுள்ள'சி' குழு குறூப் ஒவ் டெத்தாக (பலமான அணிகள் ஒரு குழுவில் இடம்பெறுவதை குறிக்கும்) விளங்கினாலும் அது ஒரு கனவுகளின் குழு. வீரர்களும் அதனையே விரும்புகின்றார்கள். ஆர்ஜென்ரீனா அணி மெஸியை அவசியம் இணைத்துக்கொள்ள வேண்டும் என்றதொரு கோரிக்கையையும் முன்வைத்துள்ளார். வெற்றி தோல்விகளுக்கு அப்பால் ஒரு கடுமையான போட்டியை அவர் எதிர்பார்ப்பது புலனாகிறது.

# பாதிப்பு




சென்ற வருடம் ஜப்பானில் நடைபெறவிருந்த ஒலிம்பிக் போட்டிகள் கொரோனா காரணமாக பிற்போடப்பட்டு எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறும் என அறிவிக்கப் பட்டது. தற்போது உலகெங்கிலும் கொரோனா அலை மீண்டும் தலைதூக்கி அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ள நிலையில் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் ஒலிம்பிக் போட்டிகளை பிற்போடுவதற்கு ஜப்பான் அரசாங்கம் தயாராக இல்லை. அதனால் திட்டமிட்டபடி ஒவ்வொரு விடயத்தையும் மேற்கொண்டு வருகின்றது. அந்தவகையில் ஒலிம்பிக் தீபத்தின் அஞ்சலோட்ட நிகழ்வை கடந்த மார்ச் 25 ஆம் திகதி ஆரம்பித்திருந்தது. ஆயிரக்கணக்கான வீரர்கள் பங்கு பற்றும் இந்த நிகழ்வானது எதிர்வரும் ஜூலை மாதம் 23 ஆம் திகதி ஜப்பானின் தேசிய விளையாட்டு மைதானத்தில் நிறைவு பெறுகின்றது. இந்த நிகழ்வின் முதல் மூன்று வாரங்கள் சுமுகமாகச் சென்றாலும் ஒரு வாரத்திற்கு முன்னர் ஜப்பானின் ககாவா மாகாணத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முகக்கவசம், சமூக இடைவெளி மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்பட்டும் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த நியமிக்கப்பட்ட பொலிஸ்காரர் ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. ஆனால் இது குறித்து ஜப்பான் ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழுவினர் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை இன்னமும் பலப்படுத்தி உள்ளதால் இனிவரும் அஞ்சலோட்ட நிகழ்வை அது பாதிக்காது என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். சொந்த நாட்டிலேயே வைரஸை கட்டுப்படுத்த முடியாது விட்டால் ஒலிம்பிக்கில் பங்கு பற்ற வரும் வெளிநாட்டு வீரர்களின் பாதுகாப்புக்கு என்ன உத்தரவாதம் என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

# நட்பின் நிமித்தம்




விராட் கோலியும் இங்கிலாந்து பிரிமீயர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் மன்செஸ்ரர் சிற்றி அணியின் முகாமையாளராக விளங்கும் பெப் கார்டியாலோவும் புமா வடிவமைப்பு நிறுவனத்தின் விளையாட்டு உடைகளின் உலகளாவிய தூதர்களாக விளங்குகின்றனர். கடந்த வருடம் புமா வடிவமைப்பு நிறுவனம் இன்ஸ்ரகிராம் வாயிலாக நடத்திய ஒரு கலந்துரையாடலில் முதன் முறையாக இவர்கள் இருவரும் பங்குபற்றியிருந்தார்கள். இதன் போது இருவரும் உதைபந்தாட்டம் தொடர்பான தங்களது கருத்துக்களையும் விருப்பங்களையும் பரஸ்பரம் பரிமாறி இருந்தார்கள். கலந்துரையாடலின் முடிவில் பெப் கார்டியாலோ கிரிக்கெட் குறித்து தான் மேலும் அறிந்து கொள்ள ஆர்வமாக இருப்பதாகவும் கூறியிருந்தார். இந்த நிலையில் விராட் கோலி நட்பின் நிமித்தம் தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல் தொடரில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் ஜேர்சி ஒன்றை பெப் கார்டியாலோவுக்கு சில தினங்களுக்கு முன்னர் அனுப்பி இருந்தார். கடந்த வாரம் அதனைப் பெற்றுக் கொண்ட பெப் கார்டியாலோ அதனைத் தனது இன்ஸ்ரகிராம் பக்கத்தில் பகிர்ந்து 'இறுதியாக கிரிக்கெட்டின் விதிகளைக் கற்றுக் கொள்ள வேண்டிய நேரம் இது. ஜேர்சியை அனுப்பியதற்கு நன்றி நண்பர் விராட் கோலி. தற்போது உங்கள் மன்செஸ்ரர் சிற்றி ஜேர்சியை பயன்படுத்துவதற்கான முறை' எனப்பதிவிட்டுள்ளார்.




# சிக்கல்




சுவிற்சர்லாந்தின் ரென்னிஸ் நட்சத்திரம் றோஜர் பெடரர் ஆண்கள் ஒற்றையர் பிரிவு ரென்னிஸ் போட்டிகளில் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை கைப்பற்றிய முதல் வீரர் என்ற சாதனைக்குரியவர். ரென்னிஸ் உலகில் அதிகம் சம்பாதிக்கும் வீரர்களில் ஒருவராக விளங்கும் றோஜர் பெடரர் சூரிச் ஏரியின் கரையில் 92 மில்லியன் டொலரில் புதிதாகக் கட்டி வரும் மாளிகையில் இந்தாண்டு இறுதியில் குடி புகுவதற்குத் திட்டமிட்டிருந்தார். ஆனால் தற்போது அதில் சில பிரச்சினைகளைச் சந்தித்துள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மாளிகை கட்டப்படும் பிரதேசத்தின் கட்டுமானச் சூழல் மாசு காரணமாகச் சுற்றுச்சூழல் அமைப்புக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி உள்ளன. இதனால் மாளிகை கட்டுவதற்கான விண்ணப்பத்தை தற்போது அவை இடைநிறுத்தி உள்ளன. இதனால் நெருக்கடிக்கு ஆளாகியுள்ள றோஜர் பெடரர் புதியதொரு திட்டமிடல் கட்டுமான விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். அத்தோடு இதுவரை கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு வந்த கட்டுமான நிறுவனத்தையும் கட்டட வடிவமைப்பாளர்களையும் மாற்றுவதற்கும் அவர் உத்தேசித்துள்ளார்.

# ரத்தமும் தக்காளிச்சட்னியும்





கிரிக்கெட்டில் பந்து வீசும் முனையில் நிற்கும் துடுப்பாட்ட வீரர் பந்து வீச்சாளரது கையில் இருந்து பந்து விடுபட முன்பே கிறீஸை விட்டு வெளியே சென்றால் அவரை ஆட்டமிழக்கச் செய்யும் விதிக்குப் பெயர் தான் மன்கட் விதி. இது கிரிக்கெட்டில் ஓர் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆட்டமிழப்பு முறைதான் என்றாலும் பெரும்பாலான வீரர்கள் அவ்வாறு செய்வது கிரிக்கெட்டின் கண்ணியத்திற்கு அல்லது விளையாட்டு உணர்வுக்கு எதிரானது என்று கருதுவதால் அவ்வாறு செய்வதில்லை. ஆனாலும் கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல் தொடரில் அஸ்வின், ஜோஸ் பட்லரை இவ்வாறு ஆட்டமிழப்புச் செய்தமை பலத்த சர்ச்சையை ஏற்படுத்தி இருந்ததை ரசிகர்கள் எளிதில் மறந்திருக்க மாட்டார்கள். ஆட்டமிழப்பு இல்லையாயினும் இதுபோன்ற இரண்டு சம்பவங்கள் தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல் தொடரில் இடம் பெற்றுள்ளன. மும்பை - பஞ்சாப் அணிகளுக்கிடையிலான போட்டியில் முகமட் சமி பந்துவீசும் போது கீரன் பொலார்ட் கிறீஸை விட்டு வெளியே சென்றிருந்தார். ஆனாலும் முகமட்சமி, கீரன் பொலார்ட்டை ஆட்டமிழக்கவோ, எச்சரிக்கை செய்யவோ இல்லை. இந்தப் போட்டி நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் தான் மும்பை - டெல்லி அணிகளுக்கிடையிலான போட்டியில் கீரன் பொலார்ட் பந்து வீசும் போது சிகர் தவான் கிறீஸை விட்டு வெளியே சென்ற போது கீரன் பொலார்ட், சிகர் தவானை எச்சரிக்கை செய்திருந்தார். இதனை நினைவு கூர்ந்து கீரன் பொலார்ட்டை ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் கலாய்த்துள்ளனர்.






# உதவி



ரகு ஒரு காய்கறிக் கடையில் வேலை செய்து கொண்டிருந்தான். காலை நான்கு மணிக்கே எழுந்து சைக்கிளோடு மூன்று கிலோ மீற்றர் தூரத்திலுள்ள சந்தைக்கு போய் காய்கறி வாங்குவது அவனது முதல் வேலை. இதில் கொஞ்சம் தாமதமாகி விட்டால் முதலாளி கண்டபடி ஏசுவார்! சில சமயம் அடித்துவிடுவார்.

வழக்கம் போல் அதிகாலை சந்தைக்குச் சென்று காய்கறிகளை வாங்கி மூடைகளாகக் கட்டி சைக்கிளில் ஏற்றிக்கொண்டு கடைக்கு வேகமாக வந்துகொண்டிருந்தான் ரகு. முன் சக்கரத்தில் காற்று குறைவாக இருந்ததால் சைக்கிளை வேகமாக ஒட்ட முடியவில்லை. கடை இன்னும் இரண்டு கிலோ மீற்றர் தூரம் இருந்தது. எப்படி மூடைகளோடு சைக்கிளைத் தள்ளிக் கொண்டு போவது? நேரமாகிவிடும் முதலாளி  திட்டுவார். ரகுவுக்கு பயமாகிவிட்டது.

தெருவோரம் இருந்த டீக்கடையில் சைக்கிளை நிறுத்திவிட்டு , ‘ஐயா ,எதிரே உள்ள சைக்கிள் கடை எப்போ திறப்பாங்க?...

காய்கறி வாங்கிட்டுப்போறன் முன் ரயரில் காற்று குறைச்சலா  இருக்கு ... கடை இன்னும் ரெண்டு கிலோ மீட்டர் தூரம் இருக்கு தள்ளிக்கிட்டு போறதுக்குள்ள நேரமாயிடும். முதலாளி ரொம்பக் கோபக்காரர்!... அடிச்சுப்புடுவார்!...” என்றான்.

போட்டுக் கொண்டிருந்த டீயை வந்தவருக்குக் கொடுத்துவிட்டு, கடைக்குள் இருந்த காற்றடிக்கும் பைப்பை எடுத்து வந்து “இந்தாப்பா, வேணும் மட்டும் அடிச்சிக்க” என்றார். மகிழ்ச்சியோட பைப்பை வாங்கி சைக்கிளுக்கு வேண்டிய காற்றை அடித்துக்கொண்டு டயரை அழுத்திப் பார்த்தான்.

“ஐயா , ரொம்ப நன்றிங்க,... எவ்வளவு காசு?” என்று கேட்டான் .

“உதவிக்கெல்லாம் எதுக்குக் காசு ?... இது என் சொந்த உபயோகத்துக்கு உள்ளதுதான் நீ போ . எதுவும் வேண்டாம் என்றார். “ரொம்ப நன்றிங்க ஐயா” என்று சைக்கிளில் ஏறிச் சென்றான்.

மற்றொரு நாள் பகல் முழுக்க கால்வலியால் அவதிப்பட்ட பெரியவர், மாலை கிளினிக்குச் சென்று டாக்ரரைப் பார்த்தார். டொக்ரர் கொடுத்த மருந்து மாத்திரைகளை வாங்கிக் கொண்டு மருத்துவமனையை விட்டு வெளியே வந்தார். பிறகு  பேருந்து நிறுத்தத்தில் பேருந்துக்காக கால்வலியுடன் காத்துக்கொண்டிருந்தார்.

சைக்கிள் ஒட்டிக் கொண்டு வந்த ரகு அவரைப் பார்த்தான்.

“ஐயா! வீட்டுக்கா?”

“ஆமாப்பா”

பஸ் வர நேரமாகும். வாங்க சைக்கிளிலை ஏறுங்க

“இல்ல தம்பி நீங்க போங்க ...”

“ஐயா ஏறுங்க...”

“எங்க தம்பி இந்த பக்கம் ?”


“சொந்தக்காரங்க வந்து இருந்தாங்க... அவங்க பஸ் ஏத்திட்டு வர்றேன்...”

டீக்கடை வந்ததும் சைக்கிளை நிறுத்தினான். பெரியவர் இறங்கிக் கொண்டு “ரொம்ப நன்றி தம்பி,,...வாங்க டீ குடிச்சிட்டுப் போகலாம் ...”

“உதவிக்கெல்லாம் நன்றி எதுக்குங்க”

என்று கூறிவிட்டு சைக்கிளில் ஏறி அமர்ந்தான் ரகு.

## வர்ணம் தீட்டுங்கள் பரிசை வெல்லுங்கள்



முழுப்பெயர்:- ..............................................

தரம்:- ..............................................

கற்கும் பாடசாலை:-..............................................

விலாசம்:- ..............................................

..............................................

தொலைபேசி இலக்கம்:-..............................................

பிள்ளைகளே!

உங்கள் எண்ணங்களிலிருந்து வண்ணங்கள் ஆக்கி எமக்கு அனுப்புங்கள். அழகான வண்ணத்துக்கு பரிசு உண்டு. கௌரவமும் உண்டு. நீங்கள் படத்துடன் இக்கூப்பனையும் நிரப்பி அனுப்புங்கள். அழகான வண்ணப்படத்திற்குரிய பரிசை உங்களுக்காக வாண்டு மாமா தருகிறார்.

*அனுப்பவேண்டிய இறுதித் திகதி **04.05.2021***

**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**உங்கள் விளம்பரங்களை தீம்புனல் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு விசேட சலுகை உண்டு.**

# வேலையாட்கள் தேவை

பத்திரிகை நிறுவனம் ஒன்றிற்கு

- உதவி ஆசிரியர்
- பக்க வடிவமைப்பாளர் (Adobe indesign)
- அலுவலகச் செய்தியாளர்
- செய்தி சேகரிப்பாளர்
- ஒப்புநோக்குநர்

போன்ற பதவிகளுக்கு தகுதி உள்ளவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்

தொடர்புகளுக்கு: **077 168 6895**

**படைப்பாளர்களே! உங்கள் அரசியல், சமூகம், கல்வி, சினிமா, அறிவியல் சார்ந்த கட்டுரைகளையும் சிறுகதை, கவிதை, சார்ந்த ஆக்கங்களையும் தீம்புனல் வார பத்திரிகைக்கு அனுப்பி வையுங்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தீம்புனல்**
கனகசபாபதி கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள நீடா மீடியா குழுமத்தினரால் அச்சிட்டு 01.05.2021 அன்று வெளியிடப்பட்டது.